# நிர்வாக ஆசிரியர் கடிதம்

அன்பிற்கினிய வாசகப் பெருமக்களுக்கு, இறை மைந்தன் இயேசுவின் நல் நாமத்தில் வாழ்த்துக்கள்.

The Voice of Truth International என்ற ஆங்கில நூல், கர்த்தருக்குள் மரித்த சகோ. J.C. சோட் அவர்களால் 1993–ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு உலகெங்கும் வாழும் மனுக்குலத்தின் மறுமை வாழ்வுக்குத் தேவையான கலப்படமற்ற தூய சத்தியத்தைத் தாங்கி, மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளிவந்து கொண்டிருக்கிறது. வேத வசனங்களில் தேறின, உலகின் பல பகுதிகளில் வாழும் தேவ மனிதர்கள் பல தலைப்புகளின் கீழாக ஆழமான செய்திகளை அழுத்தமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆங்கிலத்தில் மாத்திரம் வெளிவந்து கொண்டிருக்கும் இச்சத்திய நூல், தமிழ் பேசும் நல்லுலகமெங்கும் வாழும் அனைத்து மக்களுக்கும் கிடைத்தால் பயனுள்ளதாக இருக்குமே என்று பல நேரங்களில் நாங்கள் நினைத்ததுண்டு. எங்களுடைய அங்கலாய்ப்பைக் கண்ட தேவன், அதற்கான கதவை சில ஆண்டுகளுக்கு முன்பாகத் திறந்து, இந்நூலின் மூலம் சத்தியத்திலும், ஆவியிலும் ஏராளமானோர் பலப்பட உதவி செய்து வருகிறார். தேவனுடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

" சத்தியத்தின் குரல் ", நற்செய்தி போதகர்களுக்கும், வேத மாணவர் களுக்கும், வேதத்தை மனமார நேசிப்பவர்களுக்கும் பெரும் பாக்கியமாக இருக்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்நூலை இப்பொழுது வெளியிடும் பொறுப்பை தேவன் அடியேனுக்குத் தந்திருக்கிறார். கர்த்தருக்குச் சித்தமானால், தொடர்ந்து இந்த இதழ் எங்களிட மிருந்தும் வெளியாகி தமிழ் பேசும் நல்லுலகமெங்குமுள்ள எண்ணற்றவர்களுக்கு பயன்படும் என்று நம்புகிறோம். ஜெபியுங்கள்! ஜெபிக்கிறோம்!!

நன்றி!

கிறிஸ்துவின் ராஜ்ஜியப் பணியில்,

(S. RAJANAYAGAM)



நிறுவன ஆசிரியர் உரை

# ஒரு போதும் சரணடைய வேண்டாம்

## DON'T EVER SURRENDER

*J.C. Choate*

இந்த உலகம் துன்மார்க்கத்தால், பொல்லாங்கால் நிறைந்திருக்கிறது (1 யோவான் 5:19). எல்லா இடங்களிலும் இருள் காணப்படுகிறது. எல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்களாகி விட்டார்கள். ஆகவே, மனிதன் இழந்த நிலையில் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறான். சாத்தான் இந்த உலகத்தின் அதிபதியாக இருந்து திரளான ஜனங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறான்.

மனிதனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் எல்லாத் தீங்கும், கேடும், வேதாகமத்தில் பொய்யனென்றும், வஞ்சகன் என்றும் விவரிக்கப்பட்டிருக்கிற சாத்தானிடமிருந்து ஆரம்பமாகிறது (யோவான் 8:44). பெரும்பாலான மக்கள் தங்களை பல்வேறுபட்ட பாவங்களுக்கும், துன்மார்க்கத்திற்கும் ஒப்புக்கொடுத்து அதையே விளைவுகளாக அறுத்துக் கொண்டிருக்கும்போது, இந்த உலகத்தில் அதிகமான யுத்தங்களும், குற்றங்களும், காயங்களும், துக்கங்களும் காணப்படுவதில் ஏதாவது ஆச்சரியம் இருக்கிறதா?

கிறிஸ்தவ தேசம் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட அமெரிக்கா வில் கூட பாவத்தின் தீமைகள் அதிகமாக ஆட்சி செய்கின்றன. பாதி திருமணங்கள் விவாகரத்தில் போய் முடிகின்றன. கருத்தரிக்கப்படும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதி கருக்கலைப்பு செய்யப்படுகின்றன. பிறக்கும் பிள்ளைகளில் நான்கில் ஒன்று தவறான முறையில் பிறக் கின்றன. பிரிந்த குடும்பங்களில் வன் முறையும், துஷ்பிரயோகமும் வழக்க மான ஒன்றாகிவிட்டது. குடும்பங்கள் பிரிந்து போவதாலும், குடும்ப மதிப்பு குன்றிப் போவதாலும் தேசத்தின் முக்கியமான அமைப்பே அழிந்து போகிறது. சரியான மாற்றம் துரித மாக வர வில்லையென்றால், நிச்சய மாக விளைவு இன்னும் அதிகமாக இருக்கும்.

இப்படி ஆபத்தான பிரச்சனைகளை உள்ளடக்கிய நாடு அமெரிக்கா

மட்டுமல்ல. உலகை முழுவதும் பாவம் மனிதனுக்குள், சமூக வாழ்க்கையில், குடும்பத்தில், மதத்தில், அரசியலில், வியாபார விவகாரங்களில் ஆளுகை செய்கிறது. மனிதன் பதவிப் பசி பிடித்தவன், தேவைக்கேற்ப லஞ்சம் மற்றும் ஊழல் ஏற்றுக் கொள்ள ப்படுகிறது. தேசங்களுக்குள், தேசங்களின் மத்தியில் போர் வெடிக்கிறது. இது பலமுள்ள நாடு, பலவீனமான நாட்டை ஒடுக்குவதில் போய் முடிகிறது. இது, பட்டினி, மரணம் மற்றும் அழிவைக் கொண்டு வருகிறது. இது, அரிதாகக் கிடைக்கும் சமாதானத்திற்காக ஏங்கச் செய்கிறது.

மத உலகம்கூட கேடான தாகத் தான் இருக்கிறது. எண்ணற்ற கள்ள போதகர்களைக் கொண்ட தவறான மார்க்க பிரிவினைகள் இருக்கின்றன (மத்தேயு 24:24). அநேகர், மனுஷருடைய போதனை களுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப் படிகிறார்கள், அவர்கள் தேவனை வீணாக ஆராதிக்கிறார்கள். பெரும் பாலானோர் நித்திய அழிவுக்கு அழைத்துச் செல்கிற விரிவான வழியில் தான் செல்கி றார்கள்.

இப்படி உலகில் எல்லாமே தவறானவைகளாயிருக்க ஒருவர் ஏமாற்றமடையவும், குழப்பமடைய வும் சாத்தானிடத்திலும், அவனு டைய மிகப்பெரிய சேனையினி டத்திலும் சரண் அடைந்து விடுவது எளிதாகி விடுகிறது. நம் உணர்வு இப்படியாகக் கூட இருக்கலாம், என்ன பயன்? நமக்கு எதிராக இருக்கிற சக்திகள் மிகப் பெரியது. கடைசியாக, எல்லாப் போராட்டமும் முடிந்த பிறகு நாம் தோற்றுப் போவோம் என்று ஒருவேளை நாம் நினைக்கலாம். **ஆனால், இன்னும் நம்பிக்கை இருக்கிறது.**

நம் பரலோகத்தின் தேவன் இவ்வுலகத்தின் அதிபதியை விட மிகப் பெரியவர். மனித இனம் தகுதி இல்லாதிருந்தும் கூட நித்திய சிருஷ்டி கர் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப் படும்படி இரக்கம் பாராட்டி, பாவமான மனிதனுக்காக சிலுவையில் மரிக் கும்படி இந்த உலகத்துக்கு இயேசு வை அனுப்பி வைத்தார். கிறிஸ்து மூலமாக நம்முடைய பாவங்க ளுக்கான மன்னிப்பு பற்றி அறிந்து கொள்ளமுடியும். மேலும், அவர், அந்தகார லோகாதிபதியோடும், அவனுடைய சேனைகளோடும் ஆவிக்குரிய போராட்டத்தை வெற்றி கரமாகப் போராடுகிற சேனை என்று விவரிக்கப்படுகிற அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் நம்மைச் சேர்த்துக் கொள்வார்.

கிறிஸ்தவ ஜீவியம் கடினமான ஒன்றாக சிலரால் சித்தரிக்கப்பட்டாலும், சாத்தான் ஒருவனுக்குத் தருவதை விட அதிகமாகவே தருகிறது. நாம்

குறைவான எண்ணிக்கையில் இருக்கலாம். ஆனால், கர்த்தர் எப்பொழுதும் நம்முடனே இருப்பார் என்கின்ற வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறது. (மத்தேயு 28:20). நம் உதவிக்காக கூப்பிட பரமப்பிதா நமக்கு இருக்கிறார். நாம் இந்த உலகத்தை எதிர்க்க நமக்கு சகோதரர்கள், சக போர்ச் சேவகர்கள் இருக்கிறார்கள். நம்மை வழி நடத்த தேவனுடைய வார்த்தையும், நம்மைத் தாங்க கிறிஸ்துவுக்குள் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இருக்கின்றன. எல்லாவற்றையும் விட, புதிய உலகத்தில் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை நமக்கு உண்டு. அந்த புதிய உலகில் நாம் என்றென்றுமாய் கர்த்தருடனே கூட இருப்போம்.

நம் அனைவருக்கும் என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், நாம் ஒருபோதும் விசுவாசத்தை விட்டு விட வேண்டாம், வெளியேற வேண்டாம், உண்மையற்றவர்களாகிவிட வேண்டாம் அல்லது பொல்லாங்கனிடத்தில் சரண் அடைந்து விட வேண்டாம். நம்மிடத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தம் இருக்கிறபடியால் இறுதியில் நாம் வெற்றி பெறுவோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த வாழ்க்கையில் நாம் எப்படிப் பட்டபாடுகளை, துன்பங்களை அனுபவித்தாலும் சரி, நாம் எதிர் கொள்ளப் போகிற சவால்களைப் பற்றி கவலைப்படாமல், போராட வேண்டிய போராட்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிற கிறிஸ்தவனுக்கு வெற்றி நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. அதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

ஆகவே, நம்மை நாம் தூய்மையாக வைத்துக்கொண்டு, தேவ பக்தியாக இருந்து, சத்தியத்திற்காகவும், தேவனுக்காகவும் தொடர்ந்து நின்று, உலகத்திற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, உண்மையாக அவரை ஆராதித்து, எப்போதும் அவருக்கு சேவை செய்ய வேண்டும். தேவன் நம்மை ஆசீர்வதித்து, இந்த சரீரப்பிரகாரமான வாழ்க்கையில் அனுதினமும் வருகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு உதவி செய்வார். மேலும், வருகின்ற உலகத்தில் அவரோடு இருப்பதற்கு ஒரு நித்திய வீட்டையும் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (வெளி. 2:10).

அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொன்னார். “ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத் தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் ” (ரோமர் 8:18).

இத்தோடு, கிறிஸ்துவின் நாமத்தினாலே ஆமென், ஆமென் என்று சொல்கிறோம். †

# இயேசு சோதிக்கப்பட்டதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்

*Byron Nichols*

இயேசு இந்தப் பூமியிலே வாழ்ந்தபோது பாவம் செய்யும்படியாகச் சோதிக்கப்பட்டது குறித்து எப்போதாவது சந்தோஷமாக உணர்ந்திருக்கிறீர்களா? ஒரு மனிதனாக இயேசு சோதனையை அனுபவித்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். தயவு செய்து என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். இயேசு பாவம் செய்தார் என்று நான் சொல்லவே இல்லை. இயேசு பாவம் செய்யவில்லை என்று எபிரெய எழுத்தாளர் சொன்னதை நான் நினைத்துப் பார்க்கிறேன் (எபிரெயர் 4:15). இயேசு பாவஞ் செய்ய வில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று பேதுரு சொன்னார் (I பேதுரு 2:22). சோதனை பாவமல்ல என்பதை நான் புரிந்து கொள்கிறேன். இது மனிதனை பாவஞ்செய்ய வைக்கிறது.

மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்று நற்செய்தி ஆசிரியர்களும் இயேசு யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பிறகு, சாத்தானால் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார் என்கிற உண்மையை எழுதி வைத்திருக்கின்றனர். ஒருவேளை, இந்தத் தொடர் சோதனை களுக்கு மட்டும் தான் இயேசு உட்படுத்தப்பட்டார் என்று நாம் சிலவேளை களில் எண்ணலாம். ஆயினும், லூக்கா " பிசாசானவன் சோதனையெல் லாம் முடித்த பின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான் " என்று சொல்லியுள்ளார். (லூக்கா 4:13). சாத்தான் இயேசுவை விட்டு சில காலம் மட்டுமே விலகிப் போனான். இயேசுவின் எல்லா சோதனைகளுக்கும் அது முடிவாயிருக்கவில்லை. நம் கர்த்தர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டாரென்று (எபிரெயர் 4:15) பார்க்கிறோம். எபிரெயர் 2:18, இப்படியாகச் சொல்கிறது. " ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்ட தினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக் கிறார் ". இந்த வசனங்கள் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந் தும் இன்று நாம் சகிப்பது போல சோதனையை சகித்தார் என்று அறிவிக்கின்றன.

சில வேளைகளில் பாவமானது இயேசுவுக்குகூட வசீகரமாக இருந்திருக் கிறது என்று வேதாகமம் சொல்கிறது. பாவம் செய்யாமல் இருக்க இயேசு கஷ்டப்பட்டிருக்கிறார் என்பது நாம் அவர் பேரில் கொண்டிருக்கும் விசுவாசத் தைக் குறைத்து விடக்கூடாது அல்லது விசுவாசத்தில் ஒரு நிலையற்ற தன்மையை ஏற்படுத்தி விடக்கூடாது. மாறாக, அவர்மீது உள்ள விசுவாசத்தை இது அதிகரிக்கச் செய்ய வேண்டும். பாவத்தின் கண்ணியும், வசீகரமும் இருந்தபோதிலும் பாவம் செய்யாத இரட்சகர் ஒருவர் இருக்கிறார். அவர் சோதிக்கப்பட முடியாதவர் என்பதற்காக அவர் பாவஞ் செய்யாதிருக்கவில்லை. பாவத்தில் பங்கேற்பதற்கான ஆசையை அவர் வெற்றிகரமாக மேற்கொண்டபடியால் அவர் பாவமில்லாதவராக இருந்தார். அவர் தன்னை பிரியப்படுத்து வதைக் காட்டிலும் தம்முடைய பிதாவை அதிகமாகப் பிரியப்படுத்த விரும்பி யிருக்கிறார். அதுதான் முக்கியமானதாக இருந்திருக்கிறது.

கிறிஸ்தவனாக வாழ்வது எளிது என்று சொல்கிற ஒருவர், இந்த உலகத்தில் வாழாமல் வேறொரு உலகத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். எப்படி சாத்தான் இயேசுவை சிக்க வைக்கும்படி சோதனைகளை கொடுத்துத் தீவிரமாகச் செயல்பட்டானோ, அதுபோல, நாம் எப்போதும் உண்மையாகவே தேவனைப் பிரியப்படுத்தத் தேவையில்லை என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கிறான். இதை ஆவிக்குரிய மனதையுடைய பவுல் வெளிப்படுத்தியிருக்கிற கவலையினால் நாம் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடியும். அதெப்படியெனில், என்னிடத்தில் அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக் கிறேன்; நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக் கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால், நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன் (ரோமர் 7:18,19). பவுல் நிச்சயமாக சோதனையோடும், பாவத்தோடும் போராடி, நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படும்படி அவர் அனுமதிப்பதில்லை என்கிற அறிவால் அவைகளை வென்றிருக்கிறார். (1 கொரிந்தியர் 10:13).

இயேசு சோதிக்கப்பட்டபோது,தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவு அவருக்கு மிகுந்த உதவியாக இருந்தது. பெலவீனமான நேரங்களில் பெலனுக்காக அவர் வேத வாக்கியங்களைச் சார்ந்திருந்தார். சங்கீதம் 119:11-ல், தாவீதின் குறிப்பிடத்தக்க வார்த்தைகளால் நாம் நினைப்பூட்டப்படுகிறோம்; “ நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை

என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் " (சங். 119:11) என்று. இயேசு தேவனுடைய வார்த்தையை தம்முடைய இருதயத்தில் வைத்து வைத்திருக்கிறார்; சாத்தான் அவரைத் தாக்கின போது அவனோடு போராட வசனங்களை ஆயுதங்களாகப் பயன்படுத்தி இருக்கிறார். வசனம் என்ன சொல்கிறது என்பதை மட்டும் அவர் அறிகிறவராயில்லாமல், அந்த வார்த்தையில் அவருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது.

இயேசு ஒரு ஜெபிக்கிற மனிதராகவும் காணப்பட்டார். எபிரெயர் 4:16-ன் வார்த்தைகளிலிருந்து நாம் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம்.

ஆம், பாவத்தின் வசீகரத்தால் இயேசு பாதிக்கப்படவில்லை என்பதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இயேசு மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயு மிருக்கிறார் (எபிரெயர் 7:25). எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் இது! கிறிஸ்து மூலமாய் நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்போது, சோதிக்கப்படுவது என்றால் என்ன என்பதை அறிந்திருக்க இயேசு நமக்காக பிதாவினிடத்தில் மன்றாடு கிறார். அதோடு, சாத்தானால் பாவத்தை கவர்ச்சிகரமாகக் காட்டக்கூடிய திறமை அவனுக்கு இருக்கிறபடியால் இயேசு நமக்காகப் பிதாவினிடத்தில் மன்றாடுகிறார்.

இயேசு நம்மைப் போன்று சூழ்நிலைகளைக் கடந்ததாலும், மனித வாழ்க்கையை அதன் பிரச்சனைகளோடும், சோதனைகளோடும் கடந்து சென்றிருக்கிறபடியாலும் நம்முடைய நியாதிபதியாக இயேசு நமக்கு ஆறுதலை அளிப்பார். அவர் என் நியாதிபதியாக இருக்கப்போகிறபடியால், இயேசு சோதிக்கப்பட்டதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ✝

---

*பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே நடத்துவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது அந்த வழியில் நீ நடப்பது.*

– லிங்கன்

---

# உள்ளடக்கம்

## தேவன்


நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன்.... 10
இயேசு கிறிஸ்துவின் சிலுவை .............. 12
தேவன் தூங்குகிறாரா? .......................... 14
சாத்தானை யார் உண்டாக்கியது? ........... 15
ஆத்துமாவும் அதன் தேவனும் ................ 15


## பாவம்


பாவம் வஞ்சனையானது ........................ 18


## தேவனுடைய வார்த்தை


பிலொலோகஸ் போல் இருங்கள் ........... 20
சுவிசேஷம் ........................................ 23
ஒரு வேலை மட்டுமே ........................... 24
அதை விட்டு விலகாதிருப்பாயாக ........... 26
புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் ............... 27


## வாழ்வதற்கான உபதேசங்கள்


மேலான வாக்குத்தத்தங்கள் .................. 30
நீங்கள் ஏன் ஒரு கிறிஸ்தவராக இருக்க வேண்டும்? ......................................... 32
நீங்கள் இதை விசுவாசிக்க முடியும் ....... 34
பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் .............. 35


## இரட்சிப்பு


திரள் கூட்டத்தை விட்டு விட விருப்பம் .... 37
ஏன் அப்போஸ்தலர்கள் காத்திருந்தார்கள் ... 39
அவர் நம்மை இரட்சித்தார் ..................... 41


## சபை


எது உண்மையான சபை .................... 44
பிராந்திய சபைக்கு தேவனுடைய மாதிரி 46
கிறிஸ்துவின் சபை ............................. 49
சபை வளர்ச்சியும், எண்ணிக்கையும் ..... 51


## ஆராதனை


புதிய ஏற்பாட்டு சபை ............................ 53
ஆரோக்கியமான ஆராதனைக்கான இரகசியங்கள் ..................................... 55
அதிகாலையில் உம்மை நான் தேடுவேன் ................................ 58
ஆராதனைக்கான சரியான மனநிலை............................................ 61


## பிரத்யேகமானது


நான் யார்? ........................................... 66


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை


விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமைக்காக தெய்வீகத் திட்டம் ................................ 67
குற்ற உணர்வுடன் இருக்கிறீர்களா? அல்லது மன்னிக்கப்பட்டு விட்டீர்களா? . 72
இன்று இன்றே வாழ்தல் .................. 76
எல்லாவற்றையும் விட்டுப் பின் சென்றார்கள் ...................................... 78
அபிஷேகம் பண்ணப்படாதவர்கள் போல.... 81
சரியான பாதையில் இருத்தல் ........... 84
தினசரிப் பொருத்தனைகள் ................ 85

## கிறிஸ்தவ வீடு

குடும்ப ஒழுக்க நெறிகள் முக்கியமானதா?........ 87

ஒரு குடும்பத்தின் தீர்மானம் ...................... 89

## செயலில் கிறிஸ்தவம்

அடிப்படைக்குத் திரும்புவோம் ..................... 90

வாய்ப்பைப் பயன்படுத்துங்கள் .................... 94

சுவிசேஷத்தோடுப் போங்கள் ..................... 95

ஊழிய வாஞ்சையோடு வாழ்தல் ............... 96

மனிதப் பசி ............................................ 99

## வசனப்பகுதி பாடங்கள்

உலகைச் சுற்றிலும் ஓர் நடை .................. 100

இயேசுவின் ஜெபம் ............................... 102

தேவனுடைய வார்த்தைக்கு
உண்மையாயிருத்தல் ............................ 104


நான் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல்..... 105

கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் ........ 107

## வேதாகமக் கேள்விகள்

தேவன் பாவியை எப்படி இழுத்துக்
கொள்கிறார்? ........................................ 109

ஒரு பிரசங்கியார் .................................... 112

### தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்
### GOD HAS PROMISED

*தேவன் நமக்கு மழை இல்லாமல் சூரியனை வாக்குத் தத்தம் செய்யவில்லை, துக்கமில் லாமல் சந்தோஷத்தை, வலியில் லாமல் செல்வத்தை வாக்குத்தத் தம் செய்யவில்லை, ஆனால், அவர் நமக்கு அன்பான அரவணைப்பை யும், நாளைக்கான நம்பிக்கையை யும், ஜெபத்திற்கான பதிலையும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.*

*தேவன் நமக்கு இரவில்லா மல் நட்சத்திரங்களை வாக்குத்தத் தம் செய்யவில்லை. வியாதியில் லாமல் ஆரோக்கியத்தையும், அழிவில்லா மல் வளர்ச்சியையும் வாக்குத்தத்தம் செய்யவில்லை, ஆனால், அவர் நமக்கு நம்மை வழிநடத்த அவரு டைய வார்த்தையாகிய அப்பத்தை தருவதாக வாக்குத்தத்தம் செய்திருக் கிறார்.*

*தேவன் நமக்கு நஷ்டம் இல்லாமல் லாபத்தை வாக்குத்தத்தம் செய்யவில்லை. மரணமில்லாமல் ஜீவனை, சிலுவையில்லாமல் கிரீடத் தை வாக்குத்தத்தம் செய்யவில்லை, ஆனால், அவர் எங்கே சண்டை இருக்கிறதோ அங்கே சமாதானத்தை யும், பரலோக வீட்டையும், நித்திய ஜீவனையும் வாக்குத்தத்தம் செய்தி ருக்கிறார். இது போதாதா?.*

### தேவன்

# நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன்

***Roy V. Palmer***

நடைமுறையில் அநேக ஜனங்கள் தேவனை விசுவாசிக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை தேவன் இருக்கிறார் என்பது, அவர்கள் இருப்பதைப் போலவே வெளிப்படையான ஒன்றாக இருக்கிறது. தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான் என்று வேதாகமம் சொல்கிறது (சங்கீதம் 53:1). ஒருவர் தேவனை விசுவாசிக்கக் கட்டாயமான காரணங்கள் இருக்கின்றனவா? தேவன் இல்லையென்று எண்ணிக் கொள்வது உண்மையாகவே நியாயமான ஒன்றாக இருக்கிறதா?

முதலாவது, நாம் தேவன் பற்றிப் பேசும் போது என்ன நினைக்கி றோம்? ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று வேதாகமம் சொல்கிறது (ஆதியாகமம் 1:1). ஆகவே, தேவன் நம் சிருஷ்டி கராயிருக்கிறார். " நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் " என்று சங்கீதக்காரன் எழுதுகிறார். தேவன் நித்தியமானவர். அவர் எப்போது மே இருந்தவர். அவர் எப்போதும் இருப்பார். தேவன் நல்லவர். அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் (சங்கீதம் 111:3). ஆனால், அவர் நம் நியாயா திபதியும் நமக்கு பிரமாணத்தைத் தந்தவருமாயிருக்கிறார். கர்த்தர் ஞான முள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ? கர்த்தர் பூமியின் கடையந்தரங்களை நியாயந்தீர்க்கிறவர் (I சாமுவேல் 2:3,10).

கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப் பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார் (ஏசாயா 33:22). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). தேவன் ஒளியாயி ருக்கிறார் (I யோவான் 1:5). தேவன் அன்பாகவே இருக்கிறார் (I யோவான் 4:16).

ஆனால், தேவன் என்று அழைக்கப்படுகின்ற சிருஷ்டிகர், நித்தி யமானவர், சர்வவல்லவர், நீதியுள்ளவர் என்பதை ஒருவர் ஏன் விசுவாசிக்க வேண்டும்? நாம் வாழ்கின்ற இப்பிரபஞ்சம், சிருஷ்டிப்பு போன்றவைகள் தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் எப்போதுமே இருந்து வருவது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இல்லையென்றால் ஒன்றுமே இல்லாத நேரத்தில் ஏதோ ஒன்று (உலகம், மனிதன், மற்றும் இன்று உலகில் இருப்பவைகள் எல்லாம்)

ஒன்றுமில்லாமையில் இருந்து தான் வந்திருக்க வேண்டும் என்றாகிவிடும். ஆனால், எந்த மனித அனுபவமோ மனித விளக்கமோ ஒன்றுமில் லாமையில் இருந்து ஏதோ ஒன்று வந்தது என்று ஒத்துக் கொள்ளாது.

தேவனை விசுவாசிப்பதற்கான இரண்டாவது காரணம், உலகத்திலும், பிரபஞ்சத்திலும் காணப்படும் ஒழுங்கு மற்றும் அமைப்பு என்ற உண்மைதான். ஒழுங்கு இருப்பது மறுக்க முடியாதது. பூமி, சூரியன், சந்திரன் மற்றும் பிரபஞ் சத்திலுள்ள எண்ணற்ற செயல்கள் ஆச்சரியமானவை. இவைகளின் துல்லி யத்தைப் பொறுத்தவரை எந்தக் கடிகாரத்தையும் இதனுடன் ஒப்பிட முடியாது. ஓர் அருமையான கடிகாரத்தின் சிக்கலான பாகங்கள் தானாகவே உருவாகி, தானாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு, அதை உண்டாக்கினவர் இல்லாமல் அது வேலை செய்வதை கற்பனை செய்து பார்க்க முடியுமா? அது போலத்தான் இந்த ஆச்சரியமான பிரபஞ்சம். இயற்கையின் ஆச்சரியமூட்டும் செய்முறைகள், இயற்கை விதிகளின் அற்புத செயல்பாடுகள் போன்றவை ஒரு சிருஷ்டிகர் இல்லாமல் இவைகளெல்லாம் தற்செயலாக ஏற்பட்டு, தானாகவே நீடித்திருந் திருக்கிறதென்பதைக் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

தேவனை விசுவாசிப்பதற்கான மற்றுமொரு காரணம், மனிதனில் இருக்கும் ஒழுக்க ரீதியிலான உணர்வுதான். எதுசரி, எது தவறு என பகுத்தறி யும் திறமை கீழான மிருகங்களிடம் இல்லை. இது கலாச்சாரத்தினால் கட்டுப் படுத்தப்பட்டிருந்தாலும், அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களிடையே வேறு பட்டாலும் இது உலகெங்கும் காணப்படக்கூடிய ஓர் உண்மை தான். சில தனிப் பட்ட நபர்கள் இதற்கு விதி விலக்காக இருந்தாலும் கூட, எவ்வித சந்தேகமு மின்றி மனிதனுக்குள் ஓர் உலகளாவிய மனச்சாட்சி இருக்கிறது. அது ஒழுக்க ரீதியிலான பிரமாணத்தைக் கட்டாயப்படுத்துகிறது. அதோடு, அந்த பிரமாணத் தைக் கொடுப்பவர் இருக்கிறார் என்று சாட்சி பகர்கிறது.

இந்த உலகம் இருப்பதற்கு, இதை உண்டாக்குவதற்கு வல்லமை பெற்ற ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் அவசியப்படுகிறார். இவையனைத் தையும் உருவாக்கத்தக்க விவேகமுள்ள ஒருவர் அவசியப்படுகிறார். அது போலவே ஒழுங்கு, அமைப்பு, உணர்வு, மனச்சாட்சி போன்றவைகளை ஒருமுகப்படுத்தி அதை மனிதனுடைய சுபாவத்தின் மீதும், இயற்கையின் மீதும் செயல்படுத்துவதற்கு திறன் பெற்ற ஒருவர் அவசியப்படுகிறார். அவர் தான் தேவன் என்று வேதாகமம் போதிக்கிறது. இதுவரை கற்பனை செய்த அல்லது உருவாக்கப்பட்ட காரண காரியங்கள் எல்லா வற்றைப் பார்க்கிலும், தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு வேதாகம பதில் தான் அதிக நியாயமானது.

†

## தேவன்

# இயேசு கிறிஸ்துவின் சிலுவை

## The Cross of Jesus Christ

**Hans J.Dederscheck**

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது என்கிற உண்மையை பவுல் வலியுறுத்துகிறார் (I கொரி. 1:18). யூதருக்கு இடறலாயும், கிரேக்க ருக்குப் பைத்தியமாயும் இருக்கிற சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து வைப் பிரசங்கிக்கிற வேலையைக் கிறிஸ்தவர்கள் நன்றாய்ச் செய்கிறார் கள் (I கொரி. 1:23). அப்போஸ்தலனா கிய பவுலுக்கு சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்வதே போதுமானது. அதைத் தவிர, வேறொன்றையும் அறிந்து கொள்ள அவர் விரும்பவில்லை (Iகொரி. 2:2). துன்பத்தின் காரணமாக சிலர் கிறிஸ்துவின் சிலுவையை விரும்புவதில்லை (கலா. 6:11).

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து பிரசங்கிக்கப்படுவதை ஏற்றுக்கொள்வதில் யூதர்களை விட கிரேக்கர்கள் சிறந்தவர்கள் அல்ல. அவர்கள் ஞானத்தைத் தேடுகிறார் கள் (I கொரி. 1:22). அவர்கள் விசுவாசிப்பதற்கு முன்பு புரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணுகின்றனர். அவர்கள் உண்மையென்று ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரே உபதேசம், அவர்கள் இந்த உலகத்தைப் பற்றி எப்படிப்பட்ட எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்களோ அத்தோடு இசைந்து வருபவைகளும், அவர்களுடைய காரண காரியங்களை திருப்திபடுத்துகிறவைகளும், காலங்களின் முக்கியத்துவத்தைக் குறித்து தீர்ப்பு செய்யும் திறனை திருப்திபடுத்துகிறவைகளும் தான். எனவே, அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து என்கின்ற கருத்திலிருந்து திரும்பி அதை நிந்தித்து, அதை அற்பமாக நினைத்து பரிகாசம் செய்கிறார்கள். எனவே, அவர்கள் பக்தியை பைத்தியம் அல்லது மதியீனம் என்றழைக்கிறார்கள் (I கொரி. 1:24). சிலுவை அவர்களை குழப்புகிறது. அவர்கள் மதிப்பானது என்று எண்ணக் கூடிய எல்லா மதிப்புகளையும் விட்டு விடாமல், சிலுவையை மனப்பூர்வமாக அதற்குரிய மரியாதையோடு அவர்களால் காண முடியாது.

தேவனால் அழைக்கப்பட்டவர்களுக்கு சிலுவை என்பதன் பொரு ளைப் பற்றிய உண்மையான புரிந்து கொள்ளுதல் இருக்கிறது (Iகொரி. 1:24). ஏனெனில், அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக் கிறார் (II கொரி. 13:4). சிலுவை வாயிலாக இந்த

உலகத்தின் இரட்சிப்புக்காகத் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்த தேவன் பிரியப்பட்டபடியால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங் கிப்பவர் மனித ஞானத்தின் வாதத்தையோ, பேச்சாற்றலின் கௌரவத்தையோ ஆதாரமாகப் பயன்படுத்தினால் அது சிலுவையின் தெய்வீக ஆற்றலை இல்லாமல் போகச் செய்து விடும் (I கொரி. 1:17) மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக் கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் (கலாத்தியர் 3:13). இயேசு சிலுவையை சகித்தபோது, இந்த அவமானத்தைத்தான் அவர் எண்ணாதிருந்தார் (எபிரெயர் 12:2). இது அவருடைய கீழ்ப்படிதலின் முழு அளவை வெளிப்படுத்துகிறது (பிலிப் பியர் 2:6-8). அதை இப்பிரபஞ் சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்கள் (Iகொரி. 2:8). இங்கே பவுல் கிறிஸ்துவின் சிலுவையை உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்ததாக விவரிக் கிறார். தேவனுடைய ஞானமானது மீட்பின் திட்டத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது, அதில் இயேசு கிறிஸ்து வின் மரணம் நிச்சயமான நிகழ்வாயிருக்கிறது. அதன் நிறைவேறுதல் விசுவாசிகளை மகிமைக்குள்ளும், தெய்வீக ஜீவனை அதன் முழுமையான தன்மையிலும் கொண்டு வரும்.

கிறிஸ்துவின் சிலுவையின் தாக்கம் இதே விதமாக கொலோசெயர் 2:14-ல் விவரிக்கப்பட்டிருக் கிறது அங்கே நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து நம்முடைய அக்கிரமங்களெல்லாவற்றையும் நமக்கு மன்னித்திருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக் கிறது.

இயேசு தன்னுடைய சீஷனாக இருக்க விரும்புகிறவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு (மாற்கு 8:34) பின்பற்ற வேண்டுமென்று சொன்னார் (மத்தேயு 10:38; லூக்கா 14:27). பவுல் கிறிஸ்துவின் மரணத்தில் பங்கு பெற்றதற்கு அடையாளமாக சிலுவை இருந்தது (ரோமர் 6:3). நம்முடைய பழைய மனுஷன், கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் (ரோமர் 6:6).

ஆகவே, நாம் ஆவியின் போதனையின்படி முழுமையான கீழ்ப்படிதலோடு புதிய வாழ்க்கையை வாழவேண்டும் (கலாத்தியர் 5:25). பவுல் இப்படியாகச் சொன்னார்; " கிறிஸ்துவுடனே கூடச் சிலுவை யிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் " என்று.

†

தேவன்

# தேவன் தூங்குகிறாரா?

## Does God Sleep ?

SHAN JACKSON

**வே**தாகமம், நாம் உருவக நடை என்று அழைக்கிறவைகளால் நிரப்பப்பட்டுள்ளது. இவைகள் ஒப்பு மைகளை வலியுறுத்துவதற்கும் தனிப்பட்ட பரிமாணத்தை வலியுறு வதற்கும் தொடர்பை ஏற்படுத்து வதற்கும் பயன்படுகிறது. இந்த உருவக நடைகள் இயேசுவால் வல்லமையாக பயன்படுத்த ப்பட்டிருக்கின் றன. வெளிப்படுத்தின விசேஷ புத்த கத்தில் இவைகள் வாசகர்களுக்கு சவால் விடுகின்றன. இவைகள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் கருவிகளாக இருந்திருக்கின்றன, இவைகள் சங்கீதப் புத்தகத்தில் அடிக் கடி பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

தேவன் தூங்குகிறாரா? என்று நாம் கேட்கும்போது, காரியம் இப்படி யாகத்தான் இருக்கிறது. இதற்கான பதில் பெரும்பாலும் நிச்சயமாக இல்லை என்பது தான், ஆனால், தாவீது இங்கே மறைமுகமாக குறிப் பிட்டிருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது என்பதை கவனியுங்கள்; நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவது போல், ஆண்டவரே, நீர் விழிக்கும் போது அவர்கள் வேஷத் தை இகழுவீர் (சங்கீதம் 73:20). நாம் சொப்பனத்திலிருந்து விழித்து, செயல்படத் தொடங்குவது போல், தேவன் விழித்து துன்மார்க்கர் துன் மார்க்கமாக நடந்து செழித்திருந்தது “ போதும் ” என்று சொல்வது போல் ஒரு கருத்து வருகிறது. தேவனு டைய பொறுமை, மற்றும் சகிப்புத் தன்மையின் முடிவில் துன்மார்க்கர் சறுக்கலான இடங்களில் நிறுத்தப்படு கிறார்கள் (வசனம் 18) அவர்கள் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள் (வசனம் 19).

இந்த ஜனங்கள் தேவனு டைய நீடிய பொறுமையினால் உயி ரோடிருக்கிறார்கள், இதை சங்கீதக் காரன் தேவன் தூங்குகிறதாக ஒப்பி டுகிறார். ஆனால், தூங்குகிறவர் விழிக்கும் போது சொப்பனம் ஒழிந்து போவது போல, தேவன் குறித்த நேரத்தில் மனிதனுடைய தீமை யான உள் நோக்கங்களை நியாயந் தீர்ப்பார். தேவன் நியாயத்தீர்ப்புக்கு விழிக்கும்போது அவரை இகழுபவர் கள் அவர்கள் தாமே இகழப்படுவார் கள். விடியற்காலையில் கர்த்தர் வல்லமை பொருந்தியவராக விழிக் கும்போது, அவர்கள் தூரத்து, உண் மையற்ற சொப்பனங்களைப் போல மறைந்து போவார்கள். யோபு 20:8 இப்படிப்பட்ட சித்திரத்தை சித்தரிக் கிறது. “ அவன் ஒரு சொப்பனத்தைப் போல பறந்து போய்க் காணப்படாதவ னுவான்; இரவில் தோன்றும் தரிச னத்தைப் போல் பறக்கடிக்கப்படு வான் ”. †

# சாத்தானை உண்டாக்கியது யார்?

# Who Made Satan?

தேவன் சாத்தானை உண்டாக்கவில்லையென்றால்; அவனை உண்டாக்கியது யார்? அவன் ஒரு தீமையான கடவுளா? தேவனோடு கூட அவனும் நித்திய காலமாக இருந்து வருகிறானா?

இது புரியாத புதிராக இருந்தாலும் கூட மிக சுலபமாக இதற்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

இல்லை, தேவன் தீமையானதொன்றைப் படைக்கவில்லை. தேவனுடைய தீமையான பக்கமாக சாத்தான் நித்திய காலமாக இருந்து கொண்டிருக்க வில்லை. வேதாகமத்தில் நமக்கு இப்படி சொல்லப்பட்டி ருக்கிறது. வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகா வேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலு சர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம் பணணியும் ஜெயங் கொள்ள வில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப் படாமற் போயிற்று. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழுத்தள்ளப்பட்டது, அதனோடு கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள் (வெளி. 12:7-9).

தேவனால் உண்டாக்கப்பட்ட தேவ தூதனாகிய சாத்தானுக்கு தேவனுக்கு கீழ்ப்படிவதா வேண்டாமா என்பதை தெரிந்தெடுக்கும் சுதந்திரம், உரிமைகொடுக்கப்பட்டது. அவன் கீழ்ப்படியவில்லை, அந்த கீழ்ப்படியமைதான் தீமையானது. தீமையானதைச் செய்ய தெரிந்து கொண்டதினால் சாத்தான் தன்னையே தீமையாக்கிக் கொண்டான். இதே விதமாக மனிதர்கள் சரியானதையோ, தவறானதையோ செய்ய தெரிந்து கொள்ளலாம், அவர்களுடைய தெரிந்து கொள்ளுதல் மூலமாக தீமை செழிக்கிறது. ஆகவே, சாத்தான் தீமையான ஒன்றாக மாறியதற்கு அவனுடைய தெரிந்து கொள்ளுதல் காரணமாக அமைந்தது தேவனுடைய சிருஷ்டிப்பு காரணமல்ல.

# தேவன் ஆத்துமாவும், அதன் தேவனும்

# The Soul and its God

## - B.B. CHOATE -

சில வேளைகளில் இந்த உலகத்தில் காணப்படும் மிகுதியான பாவத்தினாலும், தேவ பக்தியற்ற தன்மையினாலும் தேவன் மறக்கப் பட்டுவிட்டார் என்று நாம் சொல்ல உந்தப்படுவோம். ஆனால், நாம் மறுபடியும் பார்த்தால் தேவன் நினைக்கப்படுவதற்கான சாட்சியம் அனுதினமும், எல்லா இடங்களிலும் இருக்கிறது.

மக்கள் தேவனை மறுதலிக்க நினைத்தால் கூட, ஏன் அவர்கள் தேவனை விசுவாசிப்பதில்லை என்று அவர்கள் அடிக்கடி உரையாடுவது அவர்கள் மனதில் தேவன் இருக்கிறார் என்பதற்கு சாட்சியமா கிறது. எத்தனை முறை தேவனுடைய நாமம் அவருக்கு மரியாதை கொடுக்காதவர்களால் பரிசுத்த குலைச்சலாக பயன்படு த்தப்பட்டிருக்கிறது! இருப்பினும், அவர்கள் தேவன் இருப்பதை தொடர்ந்து நினைவு படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்!.

பாடல்களில், இலக்கியத்தில், கலையில், தேவனைப்பற்றிய பாடம், அவருடைய வார்த்தை யிலிருந்து மேற்கோள்கள், அவரைப் பற்றிய குறிப்புகள் மற்ற தலைப்புகளோடு பின்னிப் பிணைக் கப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும், உண்மை யாகவோ, தவறாகவோ, ஆவியாக அல்லது ஒரு விக்கிரகமாக தேவன் தொழுது கொள்ளப்படுகிறார்.

ஆம், தேவன் தம்முடைய அழிக்க முடியாத குறியை ஆத்துமாவில் பதித்திருக்கிறார், மனிதர்கள் தேவனை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக பேசினாலும் அவரை மறுதலிக்கத்தக்கதாக பேசினாலும், இன்னும் அவர்கள் எல்லாரும் தேவனைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.

†

பாவம்

# பாவம் வஞ்சனையானது
# Sin Deceives

*EZS. Rajanayagam*

## I பாவம் நாம் சொன்னபடி கேட்பதாகச் சொல்லி ஏமாற்றும்:

எந்த ஒரு பாவமும் முதலில் பார்ப்பதற்கு, " ஐயோ பாவம் " என்பது போலத்தான் தோன்றும். அதாவது, நாம் சொல்கிறபடி யெல்லாம் அது கேட்பது போலவும், நாம் வேண்டாம், போதும் என்று சொல்லும்போது, நம்மை விட்டுப் போய்விடுவது போலவும் நடந்து கொள்ளும். அப்பொழுது, நாம் செய்யும் எந்த ஒரு பாவமும் நம்முடைய முழுக்காட்டுப்பாட்டில் இருப்பது போலத் தெரியும். ஆனால், அந்தப் பாவத்தில் அல்லது பாவங்களில் நாம் தொடர்ந்து ஈடுபடும் பொழுது, பாவமானது தனது வஞ்சனையின் மூலம், நம்மையுமறியாமல் நம்மை அடிமைப்படுத்தி, நமக்கு எஜமானாக மாறும்.

ஆம், பாவம் செய்ய ஆரம்பிக்கும்போது, நாம் விரும்பும் போது மாத்திரம் செய்து வந்த பாவங்கள், சிறிது காலமாகும்போது தன்னுடைய விருப்பதிற்கு நம்மை ஆட்டுவிக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது பாவம் செய்து வந்த நாம், ஒரு கட்டத்தில் பாவம் செய்யும் சந்தர்ப்பங்களைத் தேடி அலைய வேண்டி வரும் துவக்கத்தில் ஒன்றைப் பற்றிய நினைவு வரும் போது மாத்திரம் நாம் பாவம் செய்யும் நிலை இருந்திருக்கும். காலப் போக்கில் நம்முடைய நினை வுகளில்லாம் அந்தப் பாவம் நிறைந்து நம்மை நிலைகுலைய வைக்கும்.

ஒருவேளை, பாவம் எந்த வகையானதாக இருந்தாலும், அவைகளைச் செய்கிற மனிதன் அதற்கு அடிமையாயிருக்கிறான் என்பது தான் யதார்த்தமான உண்மை. இல்லை, இல்லை நான் விரும்பும் போது மாத்திரமே பாவம் செய்கிறேன் என்று ஒருவன் எவ்வளவுதான் அடித்துச் சொன்னாலும், அவன் அதற்கு அடிமைதான். ஏனெனில், பாவம் மற்றும் அதன் தன்மை பற்றியும், அவைகளைச் செய்யத் தீவிரித்துத் திரியும் மனிதன் பற்றியும் மிக நன்றாக அறிந்த இயேசு ஆண்டவரின் கூற்றைப் பாருங்கள். " *இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக; பாவம் செய்கிறவன் எவனும், பாவத்திற்கு அடிமையா யிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்*". என்றார் (யோவான் 8:34). மெய்யாகவே, மெய்யாகவே என்று இயேசு சொன்ன வார்த்தைகள் எப்படிப் பொய்யாக முடியும்?

இதே கருத்தை, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால், அப்போஸ் தலன் பவுல் ரோமாபுரியாருக்கு எழுதும்போது, இன்னும் விளக்கமாகச் சொல்லி யுள்ளார். ரோமர் 6:16-22 பகுதியை வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில் பாவத்திற்கோ அல்லது நீதிக்கோ அடிமையாயிருக்கிறான். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று ஒன்று இல்லை.

இப்பொழுது நம்முடைய நிலை என்ன? அதை ஏன் கேட்கிறீர்கள் என்கிறீர்களா? இன்றைக்கு நம்மில் எத்தனைபேர் பாவங்களுக்கு அடிமைப் பட்டு நம்முடைய வாழ்வை அழித்துக் கொண்டுள்ளோம்? விளையாட்டுக்காக ஆரம்பித்தவை இன்று விசுவ ரூபமெடுத்து ஆடிக் கொண்டிருக்கிறதே எப்படி? அவைகளுக்கு பயந்து நாம் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? குடியின் வெறியால் குடி முழுகிப்போன குடும்பங்களைக் கணக்கிட முடியுமா? புகையின் கொடுமையால் பொலிவிழந்து போன சரீரங்களை எண்ணத்தான் முடியுமா? சூதாட்டத் தால் சூறையாடப்பட்ட சொத்து, சுகங்களுக்கு அளவுதான் உண்டா? விபச்சார மயக்கத்துக்கு விட்டில் பூச்சிகளாகி விட்டு ஆட்கொல்லி நோய்க்கு அஞ்சி, அஞ்சி வாழ்ந்து கொண்டிருப்பவர்களை அடையாளம் தான் காண முடியுமா?

சரி, இந்த நிலை எப்படி வந்தது? பாவம், நம்மை வஞ்சித்தது, பாவம் நம்மை ஏமாற்றியது. நாம் விரும்பும் போது நம்மை விட்டு ஓடுகிறேன் என்று சொல்லி நம்மை நம்பவைத்து, அதனடிப்படையில் நம்மை செயலில் இறக்கி, இப்பொழுது இந்த நிலைக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. பாவத்தின் வஞ்சனை இப்பொழுதாகிலும் புரிகிறதா? தயவு செய்து உணர்வடையுங்கள்.

## II பாவம் அழகான தோற்றத்தைக் காட்டி நம்மை ஏமாற்றும்

ஒருவேளை, அழகு இரசனைக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால், நடைமுறையில் நன்மைக்கு ஏற்றதாக இல்லை. அழிவுக்கும், பெருந் தீமைகளுக்கும், வீழ்ச்சிக்கும் அது அடிப்ப டையாக இருந்தது என்று சரித்திரம் சாட்சி பகர்கிறது. இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. அழகை, ஓர் அழிக்கும் ஆயுதமாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவன் பிசாசு தான். இவ்வாயுதத்தை அவன் வெகு தந்திரமாகக் கையாண்டு, தேவ சாயலோடு சிருஷ்டிக்கப்பட்டு, நித்திய காலமாய் வாழும்படியாய் உண்டாக்கப்பட்ட மனிதனை ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும் மரிக்கும்படியாகச் செய்தான்.

ஆம், அப்பாவியாக இருந்த ஏவாள், அழகிலே மயங்கித்தான் பாவி யானாள். சர்ப்பம் சொன்ன விருட்சத்தைக் கண்டபோது, அவளுடைய பார்வைக்கு அது இன்பமாக இருந்திருக்கிறது என்று வசனம் சொல்கிறது.

அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். (ஆதி. 3:6) வசனத்தின் கடைசிப்பகுதி அவள் பறித்துப் புசித்தாள் என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். அதின் கனியைப் பறித்துப் புசிக்க வேண்டும் என்ற ஆவலை சர்ப்பம் மாத்திரம் தூண்டவில்லை. விருட் சத்தின் அழகும் சேர்ந்தே தூண்டி யிருக்கிறது.

ஒருவேளை, அந்த மரம் பார்வைக்கு இன்பமாக இருந்திருக்கா விட்டால், ஏவாள் அதின் பக்கமே போயிருக்கமாட்டாள். கனியைப் பறிக்கவும், புசிக்கவும் நேராமல் போயிருக்கலாம். அப்பொழுது, அதைத் தன் கணவனுக்கும் கொடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அப்பொழுது, தேவ கட்டளை மீறப்படாமல் இருந்திருக்கும். பாவம் உலகில் வந்திருக்காது. ஆணுக்கும், பெண் ணுக்கும், இந்தப் பூமிக்கும் கடுமையான சாபம் கிடைத்தி ருக்காது. மானிடம் இந்தப் பூமியில் அல்லல்படாத ஒரு வாழ்க்கைக்குப் பங்காளிகளாக மாறியிருக்கக்கூடும். யாருக்குத் தெரியும்?

ஆனால், எல்லாம் எதினால் வந்தது? அழகில் மயங்கினதால் வந்த வினை. இன்றைக்கும், மனிதனுக்கு சரீர உபாதைகளையும், ஆத்தும உபாதைகளையும் ஏற்படுத்தும் கடுந் தீமைகள் அழகிய தோற்றத்துடன் தான் சமுதாய சந்தையில் வலம் வருகிறது. உதாரணமாக, மது வகைகளை தகர டப்பாக்களில் அடைத்து வைத்து, பிளாஸ்டிக் டம்ளர்களில் ஊற்றிக் கொடுத்தால், மிகக் குறைவானவர்களே அதை விரும்புவர். குடிக்கும் பழக்கத்திற்கு ஆளாவோரும் மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பர். ஆனால், இன்று நிலைமை எப்படி? கண்ணைக் கவரும் மாடல்களிலான பாட்டில்களில் அடைக்கப்பட்டு, பளிச்சென்று வெளியில் தெரிகிற மாதிரியான கண்ணாடி கோப்பை மற்றும் கிண்ணங்களில் பரிமாறப்படுகிறது. அவைகளில் அது ததும்பும் போது, வேண்டாம் என்று நினைப்பவர்கள் உள்ளங்கள் கூடத் தடுமாறுகிறது. சரி, இன்று ஒரு நாள் இருக்கட்டும் என்று பொய்ச் சமாதானம் செய்து கொள்கிறது. ஞானி சாலமோன் இந்த அவல நிலை குறித்து எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள். “ மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்தி ரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும்; விரியனைப் போல் தீண்டும், உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும், உன் உள்ளம் தாறுமாறான வைகளைப் பேசும் ” . (நீதி. 23:31-33) என்று.

### III பாவம் விதைப்பதை அறுக்கத் தேவையில்லை என்று சொல்லி ஏமாற்றும்

மனிதன் இன்று இவ்வளவு தீவிரமாகப் பாவத்தில் கொஞ்சம் கூடப் பயமில்லாமல் ஈடுபடுகிறான் என்றால் அதற்குக் காரணம், அவைகளுக்குத் தண்டனை இல்லையென்ற அவனது ஆழமான நினைப்புதான். தண்டனைக்குப் பயப்படும் பயம் மனிதனுக்கு இயல்பாகவே உண்டு. அந்த இயல்பை மீறி அவன் நடந்து கொள்வதற்குக் காரணம் அவன் ஏமாற்றப் படுகிறான் என்பதே. அவனுக்கு முன்பாக வீசப்படும் கண்ணியில் அவன் மதி யில்லாமல் சிக்கி விடுகிறான்.

அந்த வேலையை பாவம் மிகத் தந்திரமாகச் செய்கிறது. அப்படியே, ஒருவேளை தண்டனை கிடைத்தாலும், அது இப்பொழுது கிடைக்கும் இன்பத்திற்கு ஈடாகாது என்று சொல்லி நூதனமாக தன் காரியத்தைச் சாதிக்கிறது.

ஆனால், செய்த தவறுகளுக்கு தண்டனை உண்டு என்று வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டின் நாட்களில், யோசுவாவின் மரணத் திற்குப் பிறகு, கானானில் எஞ்சியிருக்கிற சில ராஜாக்களோடு போரிட வேண்டிய கட்டாயம் இஸ்ரவேலருக்கு இருந்தது. கர்த்தருடைய அனுமதியோடு அந்த யுத்தங்களை வெற்றிகரமாக அவர்கள் நடத்தினர். ஒரு சமயம் அதோனி பேசேக் ராஜா தோல்வியுற்று இவர்களின் கைக்கு தப்பி ஓடிப் போகையில், அவனைப் பின் தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெரு விரல்களைத் தறித்துப் போட்டார்கள் (நியாயா. 1:6) அந்த நிலையில் அதோனி பேசேக் ராஜா எப்படிப் புலம்பியுள்ளான் என்று கொஞ்சம் கவனியுங்கள் உண்மை விளங்கும். " அப்பொழுது அதோனி பேசேக்; எழுபது இராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின் மேல் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் " என்றான் (நியாயா. 1:7).

பாவம் எவ்வளவு அசிங்கமானது என நாம் இப்போது பார்த்துள்ள படியால், அதிலிருந்து நம்மைக் காத்து கொள்ள மிகச் சிறந்த வழி ஒன்றுள்ளது. அதின்படி நாம் யாவரும் செய்வோம். தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்வோம் (பிர. 12:13). ஏனெனில், அவருடைய கற்பனைகள் நீதியுள்ளவைகள் (சங். 119:72).

ஆகவே, நீதியுள்ள அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, பாவமில்லாத ஒரு வாழ்க்கை வாழ, பரலோகத்தின் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் இரக்கம் கட்டளையிடுவாராக! ஆமென்.

†

தேவனுடைய வார்த்தை

# பிலொலோகஸ் போல் இருங்கள்

## Be like Philologus

**HARVEY PORTER**

பவுல் ரோமாபுரி சபைக்கு எழுதின நிருபத்தில் அவரால் பெயரிடப்பட்டிருக்கிற அநேகரில் கவனத்தை ஈர்ப்பவர் இவர். அங்கே பவுல் அச்சபை யாருக்கு வாழ்த்துதல்களைத் தெரிவிக்கும் போது அவர்கள் " கர்த்தருக்குள் பட்ட பிரயாசத்திற் காகவும், தன்னிடத்தில் அவர்கள் காட்டின அன்புக்காகவும் அவர்களை மெச்சினார். அவர் கர்த்தருக்குள் பிரயாசப்பட்ட " திரிபேனாளையும் (அழகானவள்) தி ரி பே ா ச ா ை ன யு ம் (மென்மையானவள்) வாழ்த்துகிறார். அவர் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பெர்சியாள் என்னும் பேர் கொண்ட பெர்சிய பெண்ணைப் பற்றியும் எழுதியிருக்கிறார் (ரோமர் 16:12). பின்பு, அவர் ரூபையும் (சிவப்பு முடி) அவனுடைய தாயும், தனக்கும் தாயாயிருந்த அந்த அம்மையாருக்கும் வாழ்த்துதல் களைத் தெரிவித்தார்.

பின்பு பதினைந்தாம் வசனத்தில் " கற்றல் நேசன் " என்னும் பொருள் கொண்ட " பிலொலோகசுக்கு வாழ்த்துதல்களைத் தெரிவித்தார். கிரேக்க மொழியில் " பிலோ " என்பது அன்பு அல்லது நேசம் என்று பொருள்படும். மேலும் "லோகேஸ்" என்பது" வார்த்தை " என்று பொருள்படும். எனவே, சொல் அர்த்த ரீதியாக பிலொ லோகஸ் என்பதற்கு " வார்த்தை களை நேசிக்கிறவன் " என்று பொருள்படும். இது எப்படி " கற்றல் நேசன் " ஆகும் என்பதை நம்மால் காண முடியும்.

இந்த பிலொலோகஸ் தன்னுடைய பெயருக்கேற்ப வாழ்ந்திருந் தால் இவர் ஒரு சிறந்த மாணவனாக இருந்திருப்பார், மேலும், ஒரு கிறிஸ்தவனாக இவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஜாக்கிரதை யுள்ள மாணவனாகவும் இருந்தி ருப்பார். "சீஷன்" என்கிற வார்த்தை " கற்றுக் கொள்கிறவன் " என்றும், " ரபீ " என்பது " போதகர் " என்றும் பொருள்படுவதால் இந்த பிலொலே ாகஸைப் போல் நாமும் கற்றுக் கொள்பவர்களாக இருக்க வேண் டும். வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிற வர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறு தல் தருவேன், நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும் (மத்தேயு. 11:28,29).

இது ஒரு தொடர்ச்சியான உறவு. நம்முடைய வாழ்க்கையில் இயேசு நம் போதகராக இல்லாத வேளையும், நாம் அவருடைய சீஷனாக இல்லாத வேளையும் ஒரு போதும் வருவதில்லை. அது நித்தி யம் வரை தொடர வேண்டும். ஆடு களுக்கு தங்களை எப்போதும் புல் லுள்ள இடங்களிலும், அமர்ந்த தண் ணீரண்டையிலும் வழி நடத்த ஒரு நல்ல மேய்ப்பன் தேவைப்படுகிறது.

ஒருவேளை, இந்த பரபரப் பான, வேகமான இக்காலத்தில் இப்படி யில்லாமலிருப்பது கர்த்தருடைய ஜனங்களின் மாபெரும் தோல்வி களுள் ஒன்றாக இருக்கலாம். நாம் போதுமான அளவு தேவ வார்த்தை யைப் படிப்பதில்லை. நாம் சபைக்கு பிரசங்கத்திற்காகவோ அல்லது வேத பாட வகுப்புக்கோ வாரத்திற்கு நான்கு மணி நேரம் மட்டுமே சபை கட்டி டத்தில் இருப்போம். ஒரு வாரத்தில் இதைவிட அதிகமான நேரம் பள்ளிக் கூடங்களும், கல்லூரிகளும் கூடுகின் றன. பெரும்பாலான வியாபார மைய ங்கள் தங்கள் வேலையாட்கள் வியா பாரத்தில் தொடர்ந்து ஈடுபட நேரத்திற்கு நேரம் சிறப்பு வகுப்புகளிலும், கருத் தரங்குகளிலும் கலந்து கொள்வதை கட்டாயமாக்கியிருக் கின்றன.

நாமனைவரும் வேதபாட வகுப்புக்காக சில நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒரு மாதத்திலோ அல்லது ஒரு வாரத்திலோ வேதா கமத்தின் ஏதாவது ஒரு புத்தகத்தைத் தெரிந்து கொண்டு நம்மால் முடிந்தவரை அநேக முறை வாசிக்க வேண்டும். அப்போது நாம் அதன் பொரு ளோடு நன்கு பரிச்சயமாகி விடு வோம். அதன்பின்பு, நமக்குப் புரியாத வசனப் பகுதிகளை வேதாகம அகராதிகள், வரைபட ங்கள், வியாக்கியானப் புத்தகங்கள், வேதாகம கைப் புத்தகங்கள் ஆகிய வற்றின் துணைகொண்டு புரிந்து கொள்ளலாம். இது ஐசுவரியமுள்ள மற்றும் பலன் அளிக்கக்கூடிய ஒரு காரியம். இதற்கு நேரம் அவசிய ப்படும். இது நாம் குறைவான மதிப்பு ள்ள காரியங்களை விட்டுவிட வேண்டும் என்று பொருள்படும். ஒவ்வொரு முக்கியமான முயற்சிக் கும் ஒழுங்கு அவசி யப்படுவதுபோல இதற்கும் ஒழுங்கு அவசியப்படுகிறது.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, இவ்விதமாகச் சொல் கிறார். " நீ வெட்கப்படாத ஊழியக்கா ரனாயும் சத்தியவசனத்தை நிதான மாய்ப் பகுத்துப் போதிக் கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிர தையாயிரு" (II தீமோத்தேயு 2:15).

ஜாக்கிரதையாக படிப்பது, சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிப்பதற்கு உதவிச் செய் யும். இது நம்மை தேவனுக்கு முன் பாக உத்தமர்களாக நிறுத்துகிறது மற்றும் இது உண்மையான வாழ்க் கையை வாழச் செய்கிறது.

" சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக் கும்" என்று இயேசு சொன்னார் (யோவான் 8:32). சங்கீதக்காரன்

இவ்விதமாகச் சொன்னார். “ நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் ” (சங்கீதம் 119:11). மறுபடியும் சங்கீதக்காரன், “ உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது ” (சங்கீதம் 119:105). “ என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் ” என்று தேவன் சொன்னதாக ஓசியா எழுதினார் (ஓசியா 4:6).

கற்றல் வாழ்க்கைக்கே அடிப்படையான ஒன்றாயிருக்கிறது. பச்சிளங்குழந்தைகள் இந்த உலகத்துக்கு பசி என்றால் என்ன என்பதைக் கற்றுக் கொள்ளும்படியாக வருகின்றன. தங்களை போஷிப்பவர்களை, ஆறுதல் படுத்துபவர்களை அவர்கள் துரிதமாக அடையாளங் கண்டுகொள்கிறார்கள். தங்களை நேசிப்பவர்களின் குரல்களை, தங்களுக்கு உதவி செய்பவர்களை அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். அவர்கள் மொழியைக் கற்றுக் கொள்கிறார்கள். எது இதமானது என்பதை கற்றுக்கொள்கிறார்கள். கற்றல் என்பது நம்முடைய மூச்சு உள்ள வரை தொடரும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த உலகத்தின் வழிகளை கற்றுக்கொள்வதை விட தேவனிடத்திலிருந்து சத்தியங்களை கற்றுக்கொள்வது அதிக முக்கியமானது.

நாமெல்லாரும் மாபெரும் போதகராகிய இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அனுதினமும் போஷிக்கப்பட வேண்டும். நாமெல்லாரும் “பிலொலோகஸ்” என்கிற பெயரை தத்தெடுத்துக் கொண்டு “ கற்றல் நேசர்களாக ” இருப்போம். அதன் பொருள் நம்முடைய பெயருக்கேற்ப நாம் வாழ வேண்டும். †

## ராஜாவின் பிள்ளைகள்

(Children of the King)

ராஜா வீட்டுப் பிள்ளையாக இருந்தா லும் சிம்மாசனம் எனக்கு இங்கே இல்லை, இப்பூமியில் பரதேசியாய் இருந்து கொண்டு என் பிரயாணத்தைத் தொடருகிறேன். என் ஆடைகளை நான் களைந்து, வாழ்க்கைக் கடலை நான் கடந்து செல்லும் போது வெள்ளை அங்கியையும், கிரீடத்தையும் வைத்துக் கொண்டு தேவன் எனக்காகக் காத்திருப்பார்.

என் மேன்மையைக் காட்டும்படி பிடித்துக் கொள்ள செங்கோல் எனக்கு இங்கு இல்லை. பூமியிலிருந்து விடுதலையாகும் வரை உடுத்த கந்தலான ஆடை மட்டுமே உண்டு. பாவமும், மரணமும் முடியும் போது நான் மீண்டும் வாழ்வேன்.

பரலோக ஆசீர்வாதங்களோடு தேவனுடைய நித்திய ஆளுகையில் பூமியின் மனிதர்கள் கொடுக்கும்படியான மகத்தான பட்டங்கள் இங்கு எனக்கு இல்லை. ஆனால், என் பிதாவின் வீட்டில் அவரோடு கூட நான் செல்லுவேன்.

அங்கே ராஜ குலப்பிறப்பு சுத்திகரிக்கப் பட்டவன் என்ற அந்தஸ்தைக் கொண்டு வரும் ராஜாவின் பிள்ளைகள் ராஜரீக நாமத்தைத் தரித்துக் கொள்வார்கள்.

ஓ, எப்படிப்பட்ட பரவசம் அங்கே என் ராஜாவின் முகத்தைப் பார்க்கும்போது. நித்தியமான மகிழ்ச்சி அந்தப் பரிசுத்த ஸ்தலத் தில். அவர் மகத்துவத்தைப் பார்த்து துதியின் பாடலை என் ஆத்துமா பாடும் ராஜாவின் பிள்ளைகளோடு நித்திய காலமெல்லாம்.

# சுவிசேஷம் The Gospel

DALTON KEY

●விசேஷம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. நித்திய ஜீவனைக் கொண்டுவருகின்ற செய்தியை உள்ளடக்கிய இந்த நற்செய்தி மனித அறிவின் விளைவாக உண்டாகவில்லை. ஆனால், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்டு ஒப்புக் கொடுக்கப் பட்டது (கலாத்தியர் 1:11,12). இந்த உண்மை சம்மந்தமாக பவுல், இளம் பிரசங்கியான தீமோத்தேயு விற்கு இவ்விதமாக எழுதினார். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (II தீமோத்தேயு 3:16). I கொரிந்தியர் 2:13-ன் படி சுவிசேஷச் செய்தியின் ஒவ்வொரு வார்த்தையும் தேவனால் ஊதப்பட்டது தான்.

*சுவிசேஷம் தேவனுடைய வல்லமையை உள்ளடக்கியது*

இந்த தேவ வல்லமை அணுவின் மையப் பகுதிக்குள் மனிதர்கள் கண்டுபிடித்திருக்கிற வல்லமை அல்ல. அதுபோல, நவீன மனிதனுடைய மின்சாதனங்களைக் கையாளும் திறமையினால் வெளிக் காட்டப்படும் வல்லமையோடும் இதை ஒப்பிட முடியாது. சுவிசேஷத்தில், இரட்சிப்பை உண்டாக்குகிற தேவ பெலன் இருக்கிறது. இருளின் பிள்ளையை ஒளியுள்ள தேவனுடைய பிள்ளையாக மாற்றும் வல்லமை சுவிசேஷத்தில் இருக்கிறது (ரோமர் 1:16).

*தேவனுடைய பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் வித்தாக சுவிசேஷம் இருக்கிறது.*

விதைக்கிறவனுடைய உவமையின் விளக்கத்தில் நம் கர்த்தர், " விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்; விதை தேவனுடைய வசனம் " என்று வெளிப்படுத்தினார் (மாற்கு 4:14; லூக்கா 8:11). அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொன்னார், " கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன் " என்று (1 கொரிந்தியர் 4:15).

*சுவிசேஷம் நித்தியமானது*

கிறிஸ்து இவ்விதமாக அறிவித்தார் " வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை " (மத்தேயு 24:35). காலங்களைக் கடந்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் செய்தி உலகத்திலேயே அதிகமாக விற்பனையாகும் புத்தகமாக பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகிறது. தேவன் தம்முடைய தாசனாகிய பேதுரு மூலமாக இப்படிச் சொன்னார் " கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் " (1பேதுரு 1:25).✝

# ஒரு வேலை மட்டுமே

## Only one Job

Louis Rushmore

இயேசு கிறிஸ்து முதலாவது பதினொறு அப்போஸ்தலர்களுக்கு தம்முடைய நேரடி போதனையின் மூலமாக, சபைக்கு ஒரே ஒரு வேலையைச் செய்யும்படியாகத் தான் கொடுத்தார். இரண்டல்ல, மூன்றல்ல செய்வதற்காக ஒரே ஒரு வேலையைத்தான் கொடுத்தார் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15,16; லூக்கா 24:46-49; அப்போஸ்தலர் 1:4-8). இந்த ஒரே வேலையை " பிரதானக் கட்டளை " என்று அழைக்கிறோம், இது இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள் என்கிற வரையறுக்கப்பட்ட கட்டளையின் விரிவாக்கமாகும் (மத்தேயு 10:5,6). அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று (மாற்கு 18:15) கூடுதலாக வலியுறுத்தப்பட்டிருக் கிறது.

அநேகர் கர்த்தருடைய சபையின் மூன்று வகையான ஊழியத்தை மேற்கோள் காட்டுகிறார்கள் அதாவது, பக்திவிருத்தி (1 கொரிந்தியர் 14:12) சுவிசேஷம் அறிவித்தல் (மத்தேயு 28:19,20); நன்மை செய்தல் (கலாத்தியர் 6:10). ஆனபோதிலும், கர்த்தருடைய சபையில் அங்கம்வகிக்கும் கிறிஸ்தவர்களுக்கு பக்திவிருத்தியை உண்டாக்குதல், நன்மை செய்தல் போன்ற பொறுப்புகள் இருக்கிறது. ஆனால், நம் கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து சபை செய்யும் படியாக ஒரே ஒரு வேலையைத் தான் கொடுத்தார். அது முழு உலகத் திற்கும் சுவிசேஷத்தை அறிவித்த லாகும்.

கிறிஸ்தவர்களுக்கு (சபைக்கு) தேவனை அவர் நியமித்திருக்கிற வழியிலே ஆராதிக்கும்படியான பொறுப்பு (சிலாக்கியம்) இருக்கிறது (யோவான் 4:23,24), ஆனால், கிறிஸ்தவர்களுக்கும், சபைக்கும் செய்யும்படியாக ஒரே ஒரு வேலை தான் இருக்கிறது. அது கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கொண்டு உலகத்தை சுவிசேஷமயமாக்குதலாகும். அதுபோலவே, கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ வாழ்வை (தீத்து 2:12), கிறிஸ்தவ சேவையை (யோவான் 12:16; எபிரெயர் 12:28) மதிக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆனால். இன்றும் கிறிஸ்தவர்களுக்கு ஒரே ஒரு வேலைதான் கொடுக்கப்பட்டிருக் கிறது. அது. உலகத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதலாகும். பெற்றோர்களுக்கு தாங்கள் பிள்ளைகள் சம்மந்தமான பொறுப்பு இருக்கிறது (எபேசியர் 6:4; II தீமோத்தேயு).

1:5; 3:15). ஆனால், கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு ஒரே ஒரு வேலை தான் இருக்கிறது. இரட்சிக்கும் கிறிஸ் துவைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்வது.

ஒரு கிறிஸ்தவனுடைய வேலை சுவிசேஷத்தினால் உலகத் தில் ஆத்துமாக்களை ஆதாயம் செய் வதாகும். சுவிசேஷத்தை அறிவித் தல் கர்த்தருடைய சபையின் அவசி யமான உந்தும் சக்தியாக இருக்கிறது. இன்று சபை சுவிசேஷத்தைப் பற்றி மற்றவர் களுக்குச் சொல்லத் தவறினால் நாளை கிறிஸ்துவின் சபை எந்த சமுதாயத்திலும், எங்கும் இல்லாம லேயே போய் விடும். ஓர் ஆத்து மாவின் விலையும் (மத்தேயு 16:26) சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக நம் கர்த்தர் கொடுத்த கட்டளையும் (மாற்கு 16:15; II தீமோத்தேயு 2:2) கிறிஸ்தவர்களும், திருச்சபையும் முக்கியம் என்று கருதும் மற்ற எல்லாக் காரியங்களைக் காட்டிலும் முக்கியமானதில்லையா? அநேக தனிப்பட்ட கிறிஸ்தவர்களும், எண் ணற்ற கிறிஸ்துவின் சபைகளும், இந்த பூமியில் வாழும் கோடிக்கணக் கான ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத் தை எடுத்துச் செல்வதில் எந்தளவு ஆர்வமாக இருக்கின்றன?

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்க ளுக்கும், கர்த்தருடைய சபைக்கும் செய்யும்படியாக ஒரே ஒரு வேலை யைத்தான் கொடுத்திருக்கிறார்.

அதாவது, நம்முடைய ஒரே வேலை ஆத்தும ஆதாயம் செய்வது தான் (எபிரெயர் 10:39; யாக்கோபு 1:21; I பேதுரு 1:9). ஆத்துமாக்களின் இரட்சிப்பை விட முக்கியமான ஒன்று இந்த உலகத்தில் இல்லை. ஒருவரு டைய ஜீவகிரீடம் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதை சார்ந்திருக்கிறது அருகிலும், தூரத்திலும் இழந்து போகிறவர்களுக்கு சுவிசே ஷத்தை எடுத்துச் செல்ல குறைவான விருப் பம் காட்டும் கிறிஸ்தவர்கள், அல்லது விருப்பம் காட்டாத தனிப்பட்ட கிறிஸ்த வர்கள் மற்றும் சபைகள் பரலோகத் தில் தேவனோடு சந்தோஷமாக நித்தியத்தைக் கழிக்கும் வாய்ப்பை இழக்கும் ஆபத்தில் இருக்கிறார்கள். (பிலிப்பியர் 4:1, I தெசலோனிக்கேயர் 2:19). இழந்து போன ஆத்துமாக்க ளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதில் உரிய கவனம் செலுத்தாத கிறிஸ்தவனோ அல்லது சபையோ நல்ல போராட்டத்தை போராடியதும் இல்லை, விசுவாசத்தைக் காத்துக் கொண்டதாகவோ அல்லது ஓட்டத் தை முடித்ததாகவோ இல்லை (I தீமோத்தேயு 4:7). இழந்து போன உலகிற்கு நேரடியாகவோ? அல்லது மறைமுகமாகவோ சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதை உங்கள் ஒரே ஒரு வேலையாக மனதில் தீர்மா னித்து விட்டீர்களா? வாழ்க்கையில் உள்ள மற்ற எல்லாவற்றையும் கீழாக்கி சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல மனதில் தீர்மானித்து விட்டீர் களா?

†

### தேவனுடைய வார்த்தை

# அதை விட்டு விலகாதிருப்பாயாக

## Turn Not From It

***Andrew S. Banjarnahor***

தேவனுடைய வார்த்தை முற்றிலும் சத்தியமானதும், நம் வாழ்க்கைக்குத் தவறே இல்லாத ஒரே வழி காட்டியாகவும் இருக்கிறது. தேவன் தம்முடைய பரிசுத்த மனுஷர்களிடத்தில் தம்முடைய வார்த்தையை இந்த பூமிக் குரிய வாழ்க்கை பற்றி மட்டும் நமக்கு போதிப்பதற்கு கொடுக்காமல், நாம் பரலோகம் போய்ச் சேருவதற்கான வழியைக் காட்டவும், நாம் நித்திய ஜீவனின் வாக்குதத்தத்தைப் பெற்றுக் கொள்ளவும் கொடுத்துள்ளார்.

கர்த்தரால் தெரிந்து கொள்ளப் பட்ட ஜனமாகிய இஸ்ரவேலை வழி நடத்தும் பொறுப்பை மோசேக்குப் பிறகு யோசுவா ஏற்றுக்கொண்ட போது நியா யப் பிரமாணத்தை கைக்கொள்வது சம்மந்தமாக யோசுவாவை தேவன் எச்சரித்தார். " என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத் தின்படியெல்லாம் செய்யக் கவனமா யிருக்க மாத்திரம் மிகவும் பலங் கொண்டு திடமானதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக. இந்த நியாயப் பிரமாண புத்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதி யிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய் " (யோசுவா 1:7-8).

யோசுவா வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமிக்கு இஸ்ரவேலர்களை வழி நடத்தியதில் வெற்றி பெற்றார். அவருடைய வெற்றியின் இரகசியம், அவர் நியாயப்பிரமாணப் புத்தகத்தின் போதனையை உறுதியாய் பற்றிக் கொண்டு, தேவன் தனக்கு போதித்த படியே அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருந்ததில் அடங்கியிருந்தது. உபத்திரவ வேளையில் ஜனங்கள் மெய்யான, ஜீவனுள்ள தேவனிடத்திலி ருந்து பின் வாங்கி வேறு தேவர்களிடத்தில் திரும்ப முயற்சித்த போது, யோசுவா தன்னுடைய அசையாத விசுவாசத் தை, இஸ்ரவேலர்களுக்கு சவால் விடும் படியாய் ஜீவனுள்ள தேவனுக்காகத் தானும் தன் வீட்டாரும் எப்படிப்பட்ட உறுதியான நிலையில் இருக்கிறோம் என்பதைக் காட்டினார் (யோசுவா 24:15).

இன்று நாம் வேதாகமத்தின் உண்மையான உபதேசத்திலிருந்து விலகாதிருந்தால் மட்டுமே உறுதியான கிறிஸ்தவர்களாக இருக்க முடியும். எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொன்னார் " சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங் கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத் தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் " (எபிரெயர் 3:12,13). சகோதரரே, நாமும் எச்சரிக்கையாயிருந்து, சத்தியத்தை விட்டு விலகாமல் தேவனுடைய பாதையில் தொடர்ந்து நடப்போம்.

†



# புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள்

## (NEW TESTAMENT WRITERS)

### DON HATCH

அதிய ஏற்பாட்டு எழுத்தாளர் கள் பலர், வாழ்க்கை வரலாறு பற்றி எழுதும் பிரபல எழுத்தாளர்களாக இருந்து உலக சரித்திரத்தால் அங்கீக ரிக்கப்பட்டவர்கள். தங்கள் இரட்ச கரின் நாமத்தினிமித்தம் அவர்கள் சந்தித்த சோதனை சூழ்நிலைகள், உபத்திரவங்கள் மற்றும் பாடுகள் எல்லா தலைமுறையினருக்கும் ஒரு ஞாபகார்த்தமாக விளங்குகிறது. இவர்கள் எழுத்துக்கள் தேவ ஆவியி னால் ஏவப்பட்ட புத்தகங்களில் மிகச் சிறந்ததாயிருக்கிறது. எழுத்து வாயி லாக அவர்கள் போதித்ததின் விளை வாக எண்ணற்ற தலைமுறையினர் நன்மையைத் தெரிந்தெடுத்து தீமை யின் மேல் வெற்றி சிறந்திருக்கிறார் கள் (ரோமர் 12:21). கீழ்க்காணும் பட்டியல் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் களைப் பற்றிய சுருக்கமான விவரிப்பாயிருக்கிறது:

யூதா : இவர் மிகுந்த தேவ பக்தியுடன் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றின ஒரு சீடன் என்பதைத் தவிர வேறு தகவல்கள் பெரிதாக இல்லை. இவர் கர்த்தருடைய சொந்த சகோதரர்களில் ஒருவர் என நம்பப் படுகிறது (மத்தேயு 13:55). இவரு டைய எழுத்துக்கள் தனித்துவம் வாய்ந்ததும், எளிமையானதாகவும் இருக்கி றது.

மாற்கு : இவர் பர்னபாவின் ஒன்று விட்ட சகோதரர். பல தேசங்க ளுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதில் பவுலுக்கு உடன் வேலையாளாக இருந்தார். இவருக்கு யோவான் என்னும் பெயரும் உண்டு (அப்போஸ்தலர் 12:12). இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு பற்றிய இவருடைய எழுத்துக் கள் புறஜாதிகளுக்கு இயேசு ஒரு மிகச் சிறந்த மாதிரி என்பதைக் காட்டு கிறது.

லூக்கா : இவர் பவுலின் நெருக்கமான நண்பரும், உடன் வேலையாளாகவும் இருந்தார். இவர் ஒரு வைத்தியராக அறியப்பட்டிருந் தார். இவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு பற்றி லூக்கா சுவிசேஷப் புத்தகத்திலும் ஆதி சபை யின் வரலாற்றை அப்போஸ்தலரு டைய நடபடிகள் புத்தகத்திலும், எழுதி யிருக்கிறார். இரண்டு புத்தகங்க ளிலுமே இவர் மிக ஜாக்கிரதையாக காரியங்களைக் கண்டுபிடித்து சம்ப வங்களைக் கால அடிப்படையில் பதிவு செய்திருக்கிறார்.

மத்தேயு : இவர் ரோம அரசாங்கத்திற்காக வரிவசூல் செய்த ஆயக்காரனாக இருந்தார். இது யூத உலகில் அதிகமாக வெறுக்கப்பட்ட ஒரு பதவியாக இருந்திருக்கலாம். இவரு டைய எழுத்துக்கள் யூத மதத்திற்கு ஏற்றவாறு அமைந்திருந்தது. மற்றும் இவருடைய தொகுப்பில் யூத போத னை பாணியைப் பின்பற்றினார். இவர் கிறிஸ்துவின் நாமத்தினிமித் தம் எத்தியோப்பியாவில் பட்டயத் தால் கொல்லப்பட்டதாக நம்பப்படு கிறது. இவர் புதிய ஏற்பாட்டில் முதல் புத்தகத்தை எழுதினார்.

யோவான் : இவர் இரத்த சாட்சியாக மரித்த யாக்கோபின் சகோதரன் (அப்போஸ்தலர் 12:11-20) இவர் இயேசுவுக்கு மிக நெருக்கமாக இருந்ததாகக் கருதப்படுகிறது. இவர் யோவான் ஸ்நானகன் அல்ல என்ப தை அறியும் போது குழப்பம் நீங்கும் (யோவான் ஸ்நானகன் புதிய ஏற்பாட்டில் எந்த நிருபத்தையும் எழுத வில்லை). வெளிப்படுத்தின விசே ஷத்தை எழுதின யோவான் தான் கடைசியாக வாழ்ந்த அப்போஸ்தலன்.

பேதுரு : இவர் கேபா அல்லது சீமோன் என்றழைக்கப்படுகிறார். 1 மற்றும் 2 பேதுரு நிருபங்களின் ஆசிரியர் இவர் தான். மீன் பிடித் தொழிலில் இவரும், இவருடைய சகோதரனாகிய அந்திரேயாவும் கூட்டாளிகள். பேதுருவின் வாழ்க்கை

பற்றி சிலவற்றையும், அவர் வாழ்ந்த காலத்தைப் பற்றி சிலவற்றையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்த கத்திலும், கலாத்தியர் புத்தகத்திலும் நாம் காண முடியும். பேதுரு தலை கீழாக சிலுவையில் அறையப்பட்ட தாக நம்பப்படுகிறது.

யாக்கோபு : யாக்கோபு என்னும் பேர் கொண்ட சீஷர்கள் மூன்று பேர் இருந்தார்கள் (மாற்கு 1:19; கலாத்தியர் 1:19; மத்தேயு 10:3). இந்த யாக்கோபு எல்லா வரலாற்று விவரிப்புகளிலிருந்து பார்க்கும் போது இயேசுவின் சகோதரர் போல் தெரிகிறது. யாக்கோபு புத்தகம் நடை முறை கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி பேசுகிறது. இது வரலாற்றின் சீர் திருத்த காலத்தின் போது வெறுக்கப் பட்ட புத்தகமாக மாறியது.

பவுல் : இவர் புதிய ஏற்பாட்டில் அநேகப் புத்தகங்களை எழுதின எழுத்தாளர். மூன்றில் ஒரு பகுதி யான புத்தகங்கள் இவருடைய கையெழுத்தை சுமந்து வருகிறது இவர் தான் இவைகளுக்கு ஆசிரியர். இவர் ஆரம்ப நாட்களில் சவுல் என அழைக்கப்பட்டார். பவுல் சுவிசேஷத் தினிமித்தம் ரோமாபுரியில் சிரச் சேதம் பண்ணப்பட்டதாக நம்பப்படு கிறது. இவர் எல்லாக் காலங்களிலும் செல்வாக்கு மிகுந்த ஊழியக்காரர் களில் ஒருவராக இருந்தார். †

### புறக்கணிப்பின் விளைவு


ஒரு நாள் ஒரு பண்ணையை ஏறிட்டுப் பார்த்தேன்
அது ஒரு நாளில் எனக்குச் சொந்தமாயிருந்தது;
களஞ்சியங்கள் இடிந்து தரையில் கிடந்தது
வயல்கள் புல் காடாயிருந்தது.

என் பிள்ளைகள் வளர்ந்த வீடு
நாங்கள் பலகாலம் வாழ்ந்த வீடு
இடிந்து கிடந்ததைத் திரும்பிப் பார்த்தேன்
பெருகி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

ஒரு நாள் என் ஆத்துமாவை ஏறிட்டுப் பார்த்தேன்
அங்கும் வளர்ந்து கிடந்ததைக் கண்டேன்
பார்த்த இடமெங்கும் முட்களும், புதர்களும்
விதை விதைத்தல் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

முக்கியமற்ற காரியங்களை கவனித்தபடியால்
வருடங்கள் பல கடந்து விட்டது.
உலகத்தின் காரியங்களில் நாட்டம் கொண்டு
பரலோக காரியங்களை நான் விட்டுவிட்டேன்.

– தெரிந்தெடுக்கப்பட்டது.




# மேலான வாக்குத்தத்தங்கள்


## *Better Promises*

***John Thiesen***

இன்றைய நாட்களில் அநேகர் கிறிஸ்துவுக்கான தங்கள் ஊழியத்தில் பழைய ஏற்பாட்டுக்கு திரும்ப முயற்சி செய்கிறார்கள். அவர்கள், நாம் ஆராதனைக்காக சனிக் கிழமையில் கூட வேண்டும். ஏனென்றால் மோசே யூதர்களுக்கு அப்படிச் செய்ய சொல்லியிருக்கிறார் என்று சொல் கிறார்கள். மேலும், மோசேயின் பிரமாணத்தில் தடை செய்யப்பட்டுள்ள பன்றி இறைச்சி அல்லது வேறெந்த இறைச்சியையும் புசிக்கக் கூடாது என்றும் சொல்கிறார்கள்.

தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்த இரண்டு உடன் படிக்கைகளுக்கு இடையில் உள்ள வித்தியாசத்தை எடுத்துச் சொல்லத் தவறியது, சபையின் ஆரம்ப நாட்களிலிருந்தே சொல்ல முடியாத குழப்பத்தை தேவ ஜனங்களுக்கு மத்தியில் உண்டாக்கியிருக்கிறது. ஒருவேளை, ஜனங்கள் பழைய உடன்படிக்கையை விட்டுவிட்டு புதிய உடன்படிக்கையில் கிறிஸ்துவி னிடத்தில் வரும்படியாய் அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு சிறந்த வழி, இரண்டு உடன்படிக்கைகளின் கீழ் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களை வேறுபடுத்திக் காட்டுவதே.

**தேச மற்றும் சர்வதேச வேறுபாடுகள்.** மோசேயின் பிரமாணம் என்றழைக்கப்பட்ட முதல் உடன்படிக்கை யூதர்களோடு மட்டும் செய்யப் பட்டது, வேறு எந்த தேசத்தின் ஜனங்களோடும் அல்ல. மோசே யூதர்களிடத்தில் இவ்விதமாகச் சொன்னார். “ அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லா ரோடும் பண்ணினார் ” (உபாகமம் 5:3). ஆனால், சுவிசேஷம் எல்லோருக்கு மானது. யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இயேசு தம்முடைய சீடர்களிடம் “ உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் ” என்று சொன்னார் (மாற்கு 16:15).



பூமிக்குரியது மற்றும் பரத்திற்குரியது. முதலாம் உடன்படிக்கை மாம்ச பிரகாரமானது அல்லது சரீரப்பிரகாரமானது. இஸ்ரவேலர்களுக்கு சொந்தமான இடமாக இந்த பூமியில் கானான் தேசம் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அவர்கள் அதை இந்த பூமியில் வாழும் நாட்களில் மட்டுமே சுதந்தரிக்க முடியும் (உபாகமம் 12:1). ஆனால், சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்கள் ஆவிக்குரியது, நித்தியமானது. கிறிஸ்தவனுடைய சுதந்திரம் அழியாதது, மாசற்றது, வாடாதது. அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டி ருக்கிறது (I பேதுரு 1:45)

தற்காலிகமானது, நித்தியமானது. ஓர் இஸ்ரவேலன் அந்த உடன்படிக்கையைக் கைக் கொண்டால், நல்ல ஆரோக்கியம், பிள்ளைகள், செழிப்பான நிலங்கள், மந்தைகள் என வாக்குத்தத் தம் செய்யப்பட்டன, நித்திய ஜீவனை சுதந்தரிப்பது சம்மந்தமாக எதுவுமே குறிப்பிடப்படவில்லை (உபாகமம் 7:13-15). ஆனால், கிறிஸ்தவனுக்கு உயிர்த்தெழுதலில் ஒரு மகிமையான புதிய சரீரமும், ஒருவரும் பறித்துக் கொள்ள முடியாத பரலோக வீடும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது (1கொரிந்தியர் 5:1; II பேதுரு 3:12). புதிய உடன்படிக்கை மேலான வாக்குத்தத்தங்களை உடையது என்று எபிரெய எழுத்தாளர் சொன்னதில் எந்த ஆச்சரியமும் இல்லை (எபிரெயர் 8:6).

இன்று ஜனங்கள் தங்கள் நம்பிக்கைக்காகவும், நடைமுறைக் காகவும் மோசேயின் பிரமாணத்துக்கு திரும்பச் செல்ல முயற்சி செய்வதில் எவ்வித பிரயோஜனமும் இல்லை. முதலாவதாக, அவர்கள் அந்த உடன் படிக்கைக்குள் அனுமதிக்கப்படக்கூட மாட்டார்கள்; ஏனென்றால், அது பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்களுக்கானது. புற ஜாதிகளுக்கானதல்ல. ஆனால், குறுகிய நாட்கள் இஸ்ரவேல் தேசத்தில் வாழ்வதற்காக இயேசுவின் உயிர்த்தெழுதல், பரலோகம் மற்றும் நித்திய ஜீவனின் மேலான வாக்குத்தத்தங்களை விட்டுவிட யார் விரும்புவார்?

†

## நீ ஏன் ஒரு கிறிஸ்தவனாக இருக்க வேண்டும்?

## Why should you be a christian

**JACK HARRIMAN**

ஆவிக்குரிய ஆசீவாதங்க ளினிமித்தம்: பரலோக தகப்பனை நோக்கி ஜெபிக்கும் உரிமை போன்ற ஆசீர்வாதங்கள் (I பேதுரு 3:12), ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டதை அறி வதிலிருந்து வரும் சமாதானம், சந்தோஷம் (II தீமோத்தேயு 2:10), ஒருவருடைய வாழ்க்கையில் தேவன் கிரியை செய்கிறார் என்பதை பற்றிய அறிவு (ரோமர் 8:28) இன்னும் மற்ற எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களால் மட்டுமே அனுப விக்கப்படுகிறது.

நல்ல முடிவை பயன்படுத் துவதினிமித்தம் : இந்த பூமியில் பூரணமான ஜீவனை அடையவும் (யோவான் 10:10) இந்த வாழ்க் கைக்குப் பிறகு நித்திய ஜீவனை அடைவதற்கும் தீர்மானிப்பது பொது அறிவு சார்ந்த ஒரு நல்ல முடிவு (மத்தேயு 25:46). சர்வ வல்லமை யுள்ள நித்திய தேவனோடு தகப்பன் - பிள்ளை உறவில் இருப்பது நல்ல சிறப்பான ஒரு முடிவு.

வாழ்க்கைக்கு சரியான நோக்கத்தை கொடுப்பதினிமித்தம்: நோக்கமில்லாத மனிதன் செத்தவனைப் போன்றவன். ஒரு கிறிஸ்தவன் வாழ காரணம் இருக்கிறது. அவன் தேவனை மகிமைப்படுத்த வாழ் கிறான் (மத்தேயு 5:16). அதைப் போலவே மற்றவர்களுக்கு போதிக்க அவன் வாழ்கிறான் (மாற்கு 16:15).

அது உன் கடமையாக இருப்பதினிமித்தம் : முதலாவது, நீ உனக்குக் கடன்பட்டிருக்கிறாய். இரண்டாவது, நீ உன் குடும்பத்துக்கு கடமைப்பட்டிருக்கிறாய். மூன்றாவது, நீ சக மனிதர்களுக்கும், நாட்டிற்கும் கடமைப்பட்டிருக்கிறாய்.

தேவனுக்கு உன் சேவை தேவைப்படுவதினிமித்தம் : சுவிசேஷம் அறிவிக்கப்படும் நோக்கத்திற்காக மனிதர்களிடத்தில் ஒப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது (IIகொரிந் தியர் 4:7) கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்கிறவர்கள் கொஞ்சம் பேர் தான் (மத்தேயு 9:37). ஆகவே, நீங்கள் தேவைப்படுகிறீர் கள்.

தேவனுடைய அன்பினி மித்தம் : தேவன் உங்களை நேசிக் கிறார் (யோவான் 3:16). கிறிஸ்து உங்களை நேசிக்கிறார் (ரோமர் 5:8). இந்த அன்பு வேறு எதையும் நீங்கள் தெரிந்து கொள்ள விட்டு விடாதபடி நீங்கள் கிறிஸ்தவனாக மட்டும் இருக்க நெருக்கி ஏவ வேண்டும் (IIகொரிந் தியர் 5:14).

பரலோக பலன் உண்டு என்ப தினிமித்தம் : பரலோகம் என்பது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத மகா பெரிய, நாம் மிகவும் விரும்புகிற

ஓர் இடம். உங்களால் பரலோகத்தை இழந்து போக முடியாது. நீங்கள் பரலோகத்தை இழந்துவிட்டால் எல்லாவற்றையும் இழந்துவிட்டீர்கள்.

நரக பயத்தினிமித்தம் : நரகத்தின் பயங்கரத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அது புறம்பான இருளை உள்ளடக்கிய ஓர் இடம் அங்கே அக்கினி அணைவதில்லை, புழு சாவதில்லை, அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாகும் என்று இயேசு சொல்லியிருக்கிறார். நான் அங்கே போக விரும்பவில் லை, நீங்கள் அங்கே போக விரும்பு கிறீர்களா?

ஆம், கிறிஸ்தவனாயிருப்பதற்கு அநேக நல்ல காரணங்கள் இருக்கின்றது. வாழ்க்கை நிச்சயமற்ற தாக இருக்கிறபடியாலும், உங்கள் இரட்சிப்புக்காக வேறொரு நாளை தேவன் வாக்கு செய்யாததாலும் (IIகொரி. 6:1,2), நீங்கள் தேவனுக்குச் சேவை செய்ய குறைவான காலமே எஞ்சி இருக்கிறபடியாலும், நீங்கள் இன்றே ஒரு கிறிஸ்தவராகுங்கள். (IIகொரிந்தியர் 6:1,2) தேவனுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய விலையேறப் பெற்ற சமயம் உங்களுக்கு குறைவாக இருப்பதாலும் இன்றே நீங்கள் கிறிஸ்தவனாக வேண்டும். †

## தலைவர்கள் – Leaders

தேவனுக்கு தம் சபையில் தலைவர்கள்
அவருக்குத் தேவை. ஏனெனில்,
தலைவர்களில்லாமல்
சபை விழுந்து போகுமே.

தலைவர்கள் தேவை
மந்தையை அமைதியாக அழைத்துச் செல்ல
தண்டிக்க அல்ல.
மென்மையான கைகளால் தட்டிக் கொடுக்க.

விமர்சனம் செய்பவர்களும்,
வம்பளப்பவர்களும்
நிறைய இருக்கிறார்கள்.
தேவனுடைய வேலையை செய்யக்கூடியவர்கள்
அநேகர்
இல்லை என நான் பயப்படுகிறேன்.


தலைவராயிருப்பது எளிதானதல்ல
தலைமைத்துவம் சுலபமானதென்று தேவன்
ஒருபோதும் வாக்குதத்தம் செய்யவில்லை.

இந்த உலகத்தை விட்டு
கடந்து போகும் நாள் வரும்போது
தலைவர்களில் ஒருவனாக
நானிருக்க என்னை அனுமதித்ததற்காக
உமக்கு நன்றி தேவனே
என்று சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

நான் உம்மையும், உம் குமாரனையும்
நேசிக்கிறேன் கர்த்தாவே
செய்ய வேண்டிய காரியங்களை
செய்யும் வேளை இதுவல்லவோ.
நான் எவ்விதத்திலாவது விழும்போது
என்னை மன்னியும் தேவனே

நான் என் ஆசீர்வாதங்களை
எண்ணிப் பார்த்து
என்னுடைய நாட்களில்
தலைவர்களில் ஒருவனாயிருக்க
நீர் என்னை அனுமதித்ததிற்காக
நன்றி கூறுவேனாக!

**SARAH DANIEL**




வாழ்வதற்கான உபதேசங்கள்

# நீங்கள் இதை விசுவாசிக்க முடியும்

## *You Can Believe It*

***Carroll Sites***

ஆத்துமாவின் இரட்சிப்பு மற்றும் ஞானஸ்நானம் சம்மந்தமாக ஏன் இத்தனை வேறுபாடான உபதேசங்கள் காணப்படுகின்றன? சபைக்கு வெளியிலிருக்கும் பாவி ஞானஸ்நானம் பெறுவது அவசியமா? ஜனங்களுக்கு சுவிசேஷம் போதிக்கப்பட்டு அவர்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், மீட்பர் என்றும் ஏற்றுக் கொண்டாலும், எப்பொழுது அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்? பின்வரும் வாக்கியங்களை ஜாக்கிரதையாக பரிசோதித்து இவைகளைப் புரிந்து கொள்வதில் ஏதாவது சிரமம் இருக்கிறதா? என்று பாருங்கள்.

1. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் மேலான வேலைக்கு உயர்த்தப்படுவான்.
2. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவனுக்கு ஒரு புதிய வாகனம் கொடுக்கப்படும்.
3. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவனுக்கு ஒரு மாத விடுமுறை கொடுக்கப்படும்.
4. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவனுக்கு இலவசமாக வெளிநாட்டு பயணம் ஏற்பாடு செய்யப்படும்.
5. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவனுக்கு 25 ஆயிரம் சம்பளமாக கொடுக்கப்படும்.
6. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16:16)

முதல் ஐந்து வாக்கியங்களை எடுத்துக் கொண்டால், அவைகள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பலனை வாக்குத்தத்தம் செய்கின்றன. ஒருவர் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் பலனுக்கான உரிமை கோர முடியாது என்பது தெளிவாகப் புரிகிறது.

இப்போது எண் 6 எப்படி இருக்கிறது? இது வித்தியாசமாக இருக்கிறதா? மேற்சொல்லப்பட்ட ஆறு வாக்கியங்களும் உங்களுக்கு புரிகிறதா? உங்களுக்கு புரிந்து விட்டது என்று நான் எண்ணுகிறேன். இப்போது பெரிய கேள்வி என்னவென்றால், உங்களால் இதை ஏற்றுக்கொள்ள முடியுமா? அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய தேவன் தாமே உங்களுக்கு ஞானத் தைத் தருவாராக !

†

உங்களால் இதை ஏற்றுக் கொள்ள முடியுமா?



# பரலோகத்தின் ஆசீர்வாதங்கள்

## *The Blessings Of Heaven*

**WAYNE JACSON**

நாம் இப்பொழுது இருக்கின்ற நிலையிலிருந்து பரலோக மேன்மையின் ஆழத்தை அறிய வேண்டிய அளவுக்கு அறிய முடியாவிட்டாலும், பரலோகம் பற்றி வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருப்பவைகளைக் கொண்டு, அந்த அழகின் ஆசீர்வாதங்கள் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ள முடியும்.

1. பரலோகம் பூமிக்குண்டான பாடுகளிலிருந்து இளைப்பாறுதல் கிடைக்கக் கூடிய ஓர் இடம். பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று (வெளி. 14:13). ...நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம் (எபி. 4:11).

2. பரலோகம், அறுவடைக்கான ஓர் இடம், இந்தப் பூமியானது, முடிவிலே பரலோகத்தில் சுகித்திருக்கும்படி தங்கள் கீழ்ப்படிதலுள்ள செயல்பாட்டின்படி பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கும் ஓர் இடம். (மத். 6:19). பரலோக எண்ணிக்கையைக் கூட்ட நாம் உதவுவோமானால், நமக்கு மிகப்பெரிய வெகுமதி வைக்கப்பட்டிருக்கிறது (1 கொரி. 3:14).

3. பரலோகம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஓர் இடம். கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பவர்கள் ஒரு நாளில் கிறிஸ்துவாகிய எஜமானால், நல்லது, உத்தமும், உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்.... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்பார் (மத். 25:21). பரலோகத்தில் பிரவேசிப்பவர்கள் எல்லோரும் சாத்தானின் சேனைக்கெதிராக மகத்தான வெற்றி கொண்ட

தினிமித்தம் களி கூருவார்கள் (வெளி. 12:12; 19:7). நாய்களும், சூனியக்கார ரும், விபசாரக்காரரும், கொலை பாத கரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள் (வெளி. 22:15).

4. பரலோகம் நீதிக்கான ஓர் இடம். தீட்டுள்ளதும் அருவருப்பை யும் பொய்யையும் நடப்பிக்கிறது மாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்ப தில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி. 21:27). நாய்களும், சூனியக் காரரும், விபசாரக்காரரும், கொலை பாதகரும், விக்கிரகாராதனைக்கார ரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார் கள் (வெளி. 22:15).

5. பரலோகம் பொறுப்புகள் உள்ள ஓர் இடம். விண்ணுலகமா னது எவ்வித செயல்பாடும் அற்ற ஓர் இடமாக இருக்காது. அவருடைய ஊழியக்காரர் அவரை சேவிப்பார்கள் (வெளி. 22:4). இயேசுவானவர் பயன்படுத்தின உவமைகள் ஒன் றில், ஓர் எஜமான் தன் ஊழியக்காரர் பத்துப் பேரிடம், பத்து ராத்தல் திரவி யங்கள் கொடுத்து தான் திரும்பி வருமளவும் வியாபாரம் பண்ணுங் கள் என்றார். இறுதியில், அவர்கள் கணக்கு ஒப்புவிக்க அழைக்கப்பட்ட போது, அவர்கள் அதை பயன்படுத்தி னதற்குதக்கதாக பலனளிக்கப்பட்டது (லூக். 19:17,19).

6. பரலோகம், திரும்பவும் ஒன்று சேர்க்கப்பட்டு, அங்கீகாரம் கிடைக்கக் கூடிய ஓர் இடம். முற்பிதாக் கள் மரித்த போது, அவர்கள் தங்கள் ஜனத்தோடே சேர்க்கப்பட்டார்கள். (ஆதி. 25:8; 35,29) யாக்கோபும், தாவீதும் தங்கள் மரணத்திற்குப் பிறகு தங்களுடையவர்களோடு ஒன்று சேர்க்கும்படி எதிர்பார்த்தார் கள் (ஆதி. 37:35; 2 12:33). கர்த்தர், நாம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்போம் என்று போதித்துள்ளார் (மத். 8:11). பவுலடியார் தான் யாருக்கு பரலோக பயணத்திற்கான உதவியைச் செய் தாரோ அவர்களினிமித்தம் கர்த்த ருடைய வருகையின் போது மகிழ்ச் சியடைவேன் என்று கூறியுள்ளார் (1தெச. 2:19,20) இது எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய அங்கீகாரம் பற்றித் தான் தெளிவாகப் பேசுகிறது.

இப்படிப்பட்ட மகத்தான ஆசீர் வாதங்கள் நமக்கு முன்பாக இருக்கிற படியால், இந்த இடத்தில் நாம் முடிவி லே சேர்க்கப்படும்படி, நாம் ஜாக்கிரதையாய் பக்தி வாழ்க்கையை நடத்துவது அவசியம். †

## இரட்சிப்பு



# திரள் கூட்டத்திலிருந்து வெளியேறும் விருப்பம்

## Willingness to leave the crowd

**Garell L.Forehand**

நாம் பயணிக்கும் பாதைகள் முடிவிலே நம்மை எங்கே கொண்டு போய்ச் சேர்க்கும் என்பது குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று இயேசு குறிப்பிட்டுள்ளார். இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் (மத். 7:13,14).

கூட்டத்தோடு சேர்ந்து இருப்பது எல்லோருக்கும் விருப்பமான ஒன்றுதான். சுவை மிகுந்த உணவுக்காக நீண்ட வரிசையையும் பொருட்படுத்தாது நிற்பது, கண்ணுக்கினிய காட்சிகளைக் காண போக்குவரத்து நெரிசலைப் பார்க்காமல் பயணம் செய்வது போன்றவை பொதுவாக பழக்கப்பட்ட ஒன்று. இங்கே பிரச்சினை என்னவென்றால், இந்த கூட்ட சிந்தை, ஆன்மீக காரியங்களிலும் மனதிற்குள் ஊடுருவி விட்டதே. பல நேரங்களில், ஆவிக்குரிய ரீதியில், பெரும்பான்மை சிந்தைக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து விடுகிறோம். மிகப் பெரும்பாலோர் தவறிலே இருக்கிறார்கள் என்பது கற்பனை செய்து பார்ப்பதற்கே சிரமமாக இருக்கிறது. ஆனால், கிறிஸ்து ஆவிக்குரிய ரீதியில், உண்மைத் தன்மையோடிருக்கவே நம்மை அழைக்கிறார். குறைவான

எண்ணிக்கையில் பயணம் செய்யப் படும் பாதையைக் கவனிக்கும்படி சொல்லுகிறார். இந்த வேண்டு கோளை அவர் உலகம் முழுமைக் கும் விடுத்திருந்தாலும், அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் என்ற பரிதாப நிலையை அவர் அறிந்தே இருக்கிறார்.

எப்போதும் மாறிக் கொண்டே போகும் மனித கண்ணோட்டத்தால், ஒழுக்க நியதிகள் தீர்மானிக்கப்படுவ தில்லை. நன்மை எது, தீமை எது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கர்த்தர் விரும்பு கிறார். ஆனால், அப்படித் தீர்மா னிப்பது கூட்டத்தைப் பார்த்து இருக் கக்கூடாது என்று கூறுகிறார். கர்த்தர் மோசேயிடம், தீமை செய்யத் திரளான பேர்களைப் பின்பற்றாதிருப் பீர்களாக என்று கூறுகிறார் (யாத். 23:2). பெருங்கூட்டம் தப்பாக இருக்க முடியும். உண்மையில், எல்லா வற்றைப் பார்க்கிலும் மிக முக்கிய மான ஆத்தும காரியத்தில், கூட்டம் தவறாக இருக்கும் என்று இயேசு கூறியுள்ளார். நியாயத்தீர்ப்பின் நாளில் திரளாக நிற்கும் கூட்டத்தார் இரண்டு பிரிவாக பிரிக்கப்படமாட்டார்கள். பரலோகத்தில் நித்திய ஜீவன் பற்றி இயேசு பேசும்போது, அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர் என்றே கூறி யுள்ளார்.

ஆகவே, உண்மையில். குறைவானவர்களே பயணிக்கும் பக்திப் பாதை பற்றி சில காரியங்கள் சொல்லப்பட்டாக வேண்டும். குறை வான எண்ணிக்கையில் உள்ள எல்லாமே இக்கருத்தினடிப்படையில் சரியானதே என்று நாம் ஏற்றுக் கொள்ளாமல், நாம் கவனிக்கும் ஒவ்வொன்றைக் குறித்தும் கிட்டப் போய் காரியங்கள் சரியாக இருக் கிறதா என்று பார்க்க வேண்டும். அது, கர்த்தருடைய ஒத்தாசையால் இப் பூமிக்குண்டான வாழ்க்கையின் முக்கியமான காரியத்தில் சரியான முடிவை எடுத்தேன், அதுதான் என்னை இப்பொழுது பரலோகவாசி யாக மாற்றியது என்று சந்தோஷ மாகச் சொல்ல வைக்கலாம். †

ஓர் உண்மையான பரிசுத்தவான், மற்றவர் களின் நலனுக்காகத் தான் செலவழிக்கப்படு வதில் மகிழ்ச்சி அடைவான். அதற்காகும் விலையைக் குறித்து கவலைப்படமாட்டான்.

- Anon

இரட்சிப்பு

# ஏன் அப்போஸ்தலர்கள் காத்திருந்தார்கள்?

## WHY THE APOSTLES WAITED

OP BAIRD

இயேசு ஆண்டவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு, அப்போஸ்தலர்கள் செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்த வேலையைச் செய்யும் படியாக அவர்களுக்குப் பிரதான கட்டளையைக் கொடுத்தார். தங்கள் வேலையைத் துவங்கும் முன்பாக, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை எருசலேமில் காத்திருங்கள் என்று கூறினார். (லூக். 24:44-49).

இது நான்கு கேள்விகளை எழுப்புகிறது. 1. அது என்ன வேலை? 2. பெலன் என்பது என்ன? 3. ஏன் அவர்கள் காத்திருக்கும்படி சொல்லப்பட்டார்கள்? 4. காத்தி ருக்கும்படியாகச் சொல்லப்பட்ட இடம் ஏன் எருசலேமாக இருந்தது?

### அந்த வேலை

இயேசு தம்முடைய சீடர்கள் செய்யும்படியாகக் கொடுத்த கட்டளையின் விபரம் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நூல்களின் கடைசி அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. இயேசு, எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும், மனந்திரும்பு தலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சி களாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக். 24:46-49).

இயேசு அவருடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த வேலை அவர்கள் உலகமெங்கும் போய் எல்லோருக்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டுமென்பது.

### அந்த பெலன்

இயேசு தம்முடைய சீடர்களுக்கு அனுப்புகிறேன் என்று வாக்களித்த "பெலன்" பரிசுத்த ஆவி. அப்போஸ்தலர்களுக்குக் கட்டளை கொடுத்த போது, இயேசு பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள் என்றார் (அப். 1:8).

இயேசு சிலுவையிலறையப்படுவதற்கு முன்பாக, ஆவியானவரை அனுப்புவதாக தம்முடைய அப்போஸ்தலர்களிடம் வாக்களித்தார். அந்தத் தேற்றர வாளன் அல்லது ஆவியானவர், அவர்களுக்குப் போதித்த எல்லாவற்றையும் நினைவுபடுத்தி போதிப்பார். அத்தோடு, அவர் அவர்களுடன் இருந்தபோது அவர்

களுக்குப் போதிக்காத காரியங்களையும் சொல்லுவார். (யோவான் 14:25,26; 16:12-14) இந்த பெலனுக்காகத்தான் அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருக்கும் படியாகச் சொல்லப்பட்டார்கள்.

## ஏன் அவர்கள் காத்திருந்தார்கள் ?

சுவிசேஷம் இரட்சிப்புக்கு தேவபெலனாயிருக்கிறது (ரோமர் 1:16). இது மிகவும் முக்கியமாகிறது. எந்தக் கூட்டலும், குறைத்தலும் இல்லாமல் அவர் கொடுத்த படியாகவே கிறிஸ்துவின் நற்செய்தி நமக்கு இருக்கிறது. ஆகவே தான், இயேசு தம்முடைய சீடர்களைக் காத்திருக்கும்படி சொன்னார். இந்தப் பரிபூரணமான செய்தியைப் பிரசங்கிக்கும்படியாக ஆவியானவர் அவர்களுக்குப் பெலனைக் கொடுக்கும் வரைக்கும், பிரசங்கிக்கும் வேலையை அவர்கள் துவங்கும்படியாக அவர்களுக்கு அனுமதி கொடுக்கமாட்டார். இந்தப் பூரணமான செய்தியை அவர்கள் பிரசங்கித்த வசனங்களை எழுதிக் கொடுத்தனர். இதன் மூலம் எல்லாச் சந்ததியிலும் வாழும் ஜனங்கள் கேட்கவும், எல்லா வல்லமையோடும் இரட்சிக்கும் தேவனுடைய சத்தியத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது.


எல்லா ஜனங்களுக்கும் இது ஓர் எச்சரிப்பாக இருக்க வேண்டும். ஆம், தங்களுடைய ஞானத்தின்படியல்ல, வேத வசனங்களில் உள்ளபடி அவைகளை விசுவாசித்து போதிக்கும்படியாக, பரிசுத்த ஆவியினாலே தேவன் கொடுத்த உபதேசத்தை நாம் இந்த ஓர் இடத்தில் தான் காண முடியும்.

## ஏன் எருசலேம்?

ஆவியின் பெலனுக்காக அல்லது வல்லமைக்காக அப்போஸ்தலர்கள் காத்திருக்கும்படியான இடமாக எருசலேம் இருந்தது. ஏனெனில், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனம் புறப்பட்டுச் செல்லுமென்று பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது. ஏசாயா தீர்க்கன், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனமும் புறப்படும் (ஏசாயா 2:2,3) என்று கூறியிருந்தார். எருசலேமிலிருந்து பிரசங்கம் ஆரம்பிக்கும் என்று இயேசு சொல்லியிருந்தார். (லூக். 2:46,47).

## முதலில் பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தி

வாக்குத்தத்தின்படி, எருசலேமில் பெலன் அல்லது வல்லமை வந்தது. நற்செய்தி அதன் முழுத் தன்மையுடன் பிரசங்கிக்கப்பட்டு பாவமன்னிப்புக்கான நற்செய்தியின் காரியங்கள் போதிக்கப்பட்டது (அப். 2-ம் அதி). இயேசு தான், ஆண்டவரும், கிறிஸ்துவுமென்று விசுவாசிக்கும்படியாக ஜனங்களுக்கு சொல்லப்பட்டது. நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று சொல்லப்பட்டது. (அப். 2:38). அந்நாளில் 3000 பேர் நற்செய்தியின் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொடுத்துக் கீழ்ப்படிந்தனர். இன்றைக்கு ஒரு மனிதன் அன்றைக்கு அவர்கள் எதை விசுவாசித்தார்களோ அதை விசுவாசித்தால், அவர்கள் கீழ்ப்படிந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் பெற்றுக்கொண்ட பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும் நிச்சயம் பெற்றுக்கொள்ள முடியும். இது ஒரே சுவிசேஷம், இது ஒருபோதும் மாறாது.



## இரட்சிப்பு
# அவர் நம்மை இரட்சித்தார்
# He Saved Us

வசனப்பகுதி : தீத்து 3:1 -7

**Leon Barnes**

நீங்கள் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த நாட்களில் உங்கள் பெற்றோர்கள் உங்களைப் பார்த்து ஒழுங்காயிருக்க வேண்டும் என்று சொன்ன போது ஏற்பட்ட அந்த குழந்தை உணர்வு இப்போது உங்க ளுக்கு ஏற்படுகிறதா? சில வேளைகளில், வேத வாக்கி யங்களை நாம் வாசிக்கும்போது, என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அநேக போதனைகள் இருக்கின்றன. அவைகளை வாசிக்கும்போது, நாம் மறுபடியும், மறுபடியும் ஒழுங்காயிருக்க வேண்டும் என்று நாம் சொல்லப்படுவது போல உணர்கிறோம். ஆயினும், ஒழுங்காயிருக்க வேண்டும் என்பது தவறான காரியங்களை செய்யாமலிப்பதற்கோ அல்லது நாம் செய்ய வேண்டும் என்று அறிந்திருந்ததைச் செய்வதற்கோ எந்த அதிகாரத்தையும் தருவதில்லை. அது, அநேக நேரங்களில் சரியானதைச் செய்ய வேண்டும் என்று நம்மில் ஒரு தாக்கத்தைக் கூட ஏற்படுத்துவதில்லை.

தீத்துவுக்கு எழுதின இந்தப் பகுதிக்கு நாம் வரும்போது, அன்றாட வாழ்க்கை சம்பந்தமாக பலதரப்பட்டவர்களுக்கு தீத்து போதிக்க வேண்டியவைகள் பற்றி பவுல் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர்கள் ஒருவருக்கொருவர் சாந்தமாயும், ஒருவருக் கொருவர் அக்கறையாயும் இருந்து, தீங்கு செய்யாமலிருக்க ஜாக்கிரதை யாயிருக்கப் பவுல் விரும்புகிறார். அவர்கள், ஏற்கனவே தங்களுக்கு முன்பாக இருந்த போதனைகளில் தடுமாறிக் கொண்டிருக்கும் போது, வாழ்வதற்கான மேலுமான இந்தப் போதனைகள் அதிகம் என்று அவர்கள் நினைக்கத் தொடங்கலாம் என்று பவுல் உணர்ந்ததை நாம் கவனிக்க வேண்டும். ஆகையால், பவுலடியார், நாமனை வரும் புதிதும், தேவபக்திக்கானதுமான வாழ்க்கையை வாழ்வதற்கான வல்லமை பற்றி விளக்குகிறார்.

### நீங்கள் எங்கே இருந்து வந்தீர்கள் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்

நாம் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ முயற்சி செய்வதில் முதலாவது செய்ய வேண்டிய காரியமாக பவுல் சொல்லுவது, நாம் எங்கே இருந்து வந்தோம் என்பதை நினைத்துக் கொள்ள வேண்டுமென்பது. ஏனெனில், " முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும், அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும். பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும். ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம் ". வசனம் 3. கிறிஸ்துவைப்

போல நாம் இருக்க வேண்டும் என முயற்சித்தால் கூட நம் பலவீனத்தைக் குறித்து இது ஞாபகப்படுத்துகிறது. அநேகமாக நாம் அடிக்கடி கேட்கும் ஒரு வாக்கியம், தேவன் என்னோடு கடைசிவரை இன்னும் வரவில்லை என்பது. இந்த வாக்கியம் நம்மை நாம் தேவனைப் பற்றிய காரியத்தில் வளர வேண்டியிருக்கிறது என்கின்ற உண்மையை உணரச் செய்கிறது.

நாம் கிறிஸ்தவர்களாவதற்கு முன் எங்கே இருந்தோம், நம் தோல்விகள் என்னவாயிருந்தது. தேவனுக்காக வாழ நாம் எந்த அளவுக்கு தேறியிருக்கிறோம் என்பதை எண்ணினால், மற்றவர்களை நாம் கடுமையாக நடத்தாதபடி நம்மை காத்துக் கொள்ளும். இது நாம் கர்த்தருடைய சாயலில் வளர்கிறோம் என்பது குறித்து நம்மை உற்சாகமாக உணரச் செய்யும். இது நாம் முற்றிலும் தேறின நிலையை அடைய இன்னும் சில தூரம் போக வேண்டும் என்பதை நமக்கு நினைவு படுத்துகிறது.

### அவர் நம்மை இரட்சித்தார் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்

நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் நம்மை உற்சாகப்படுத்துகின்ற இரண்டாவது காரியம் நாம் எப்படி இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பது பற்றிய நினைவுதான். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (வசனம் 5).

நாம் எப்படிக் கிறிஸ்தவனானோம் என்பதை வழக்கமாகக் குறிக்கும் காரியத்தில் ஓர் அபாயம் இருக்கிறது. நாம் மனமாற்றம் அடைந்தது பற்றியோ, நற்செய்திக்குக் கீழ்ப்படிவது பற்றியோ அல்லது ஞானஸ்நானம் அடைந்தது பற்றியோ பெரிதாகப் பேசலாம். இவைகளெல்லாம் சரிதான். ஆனால், இவைகள் இரட்சிப்புக்கு நாம் என்ன செய்தோம் என்பதை முக்கியப்படுத்துவது போல தெரிகிறது. நாம் இரட்சிப்படைவதற்கு, மீட்கப்படுவதற்கு, நீதிமான்களாக்கப்படுவதற்கு வேத வசனங்கள் பெரும்பாலும் செய்ததற்கு இணையானவைகளைப் பேசக்கூடாது. கிறிஸ்தவ வாழ்க்கையில் அநேகர் சோர்ந்து போவதற்கான காரணம், நம்முடைய மனமாற்றத்தில், கிறிஸ்தவ வாழ்க்கையில் கர்த்தருடைய பங்கை மறந்து நாம் என்ன செய்தோம் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருவது.

அவர் நம்மை இரட்சித்தார். அவர் தம்முடைய தயையினாலும், அன்பினா லும் அப்படிச் செய்தார். அது நாம் செய்த நீதியின் கிரியைகளினால் அல்ல. அது அவருடைய இரக்கங்களின்படியானது. நமக்கு நாமே முக்கியத்துவம் கொடுப்ப தற்குப் பதிலாக தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் கிறிஸ்தவத்தைப் பற்றிய நம் முழுக் கண்ணோட்டத்தில் என்ன ஓர் ஆச்சரியமான வித்தியாசத்தை உண்டாக்கும்! இது உடனடியாகவே வேலை செய்யும். நம்மை நாம் உயர்வாக நினைத்துக் கொள்வதற்குப் பதிலாக நம்மால் முடிந்ததெல்லாம் நன்றி உணர்வுடன் இருப்பதுதான்.

தேவன் நம்மை எப்படி இரட்சிக்கிறார்? மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும். இது யோவான் 3:5க்கு இணையான வசனம். அங்கே இயேசு நிக்கொதேமுவிடம் அவன் இரட்சிக்கப்பட வேண்டுமென் றால் மறுபடியும் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்க வேண்டும் என்று விளக் கினார். மறுஜென்ம முழுக்கு என்பது, ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது நடைபெறுகிறது. அந்த நேரத்தில் நம் பாவங்கள் கழுவப்படுகின்றன (அப்போஸ்தலர் 22:16). நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறோம் (கலாத்தியர் 3:26,27) அப்படிச் செய்வதன் மூலம் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம். நாம் புது சிருஷ்டிகளாகிறோம் அல்லது கர்த்தருக்கு முன்பாக நாம் மறுபடியும் பிறக்கிறோம்.

நம்மை இரட்சிப்பது ஞானஸ்நானம் அல்ல என்பதை கவனியுங்கள். தேவன் நம்மை இரட்சிக்கிறார். மறுபிறப்பின் மூலமாக அவர் நம்மை இரட்சிக்கிறார். வேறு ஏதாவது விதத்தில் அவர் நம்மை இரட்சிக்க முடியுமா? நிச்சயமாக முடியும் ஏனென்றால், அவர் தேவன். அவர் எப்படி விரும்புகிறாரோ அப்படி அவரால் நம்மை இரட்சிக்க முடியும். நீங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று தேவன் சொல்கிறாரோ அதைச் செய்ய மறுக்கும் போது, அவருடைய சித்தத்தை நீங்கள் நிராகரிக்கும்போது அவர் உங்களை இரட்சிப்பாரா? இது முற்றிலும் வித்தியாசமான ஒரு காரியம். நம்மை இப்படியாக இரட்சிக்க வேண்டுமென்று தேவனுக்குச் சொல்ல நாம் யார்? நாம் உண்மையாகவே தேவனுக்கு நம்மை அர்ப்பணித்து விடும் போது இரட்சிப்பிற்காக அவர் என்ன விரும்புகிறாரோ அவர் என்ன கட்டளையிடுகிறாரோ அதைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்.

ஞானஸ்நானத்தில் கழுவப்பட நம்மை நாம் அவருக்கு அர்ப்பணிக்கும் போது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்து நம்மைப் புதிதாக்குகிறார். அவர் வந்து நமக்குள்ளே வாசம் செய்கிறார் (அப்போஸ்தலர் 2:38). நம்மை நாமே பார்த்துக் கொள்ளும் படியாக பராமரித்துக் கொள்ளும்படியாக நாம் தனியாக விடப்படவில்லை. அவர் நமக்குள்ளே வாசம் செய்கிறார். நம்முடைய சரீரங்கள் நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியின் ஆலயமாக மாறிவிடுகிறது (1 கொரிந்தியர் 6:18,20). பரிசுத்த ஆவியிடமிருந்து நமக்கு சிறிய வரம் கிடைக்கவில்லை. மாறாக, " தேவன் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் பரிசுத்த ஆவியை நம் மேல் சம்பூரண மாய்ப் பொழிந்தருளினார் " என்று பவுல் சொல்கிறார் (வசனம் 6).

## நாம் சுதந்தரராயிருக்கிறோம்

தேவன் கட்டளையிட்டிருக்கிறவைகளைச் செய்வதில் ஏற்படும் சவால்களை பார்த்துக் கொண்டிருக்கும் போது தேவன் நமக்கு நினைப்பூட்டும் கடைசி காரியம் சிறந்தது இன்னும் வரவேண்டியதாயிருக்கிறது. நாம் தேவனுடைய சுதந்தரராயி ருக்கிறோம். தேவன் பரலோகத்துக்கு சொந்தக்காரராய் அதன் எல்லா மகிமை யோடும் வாசம் செய்கிறார். அவர் சர்வவல்லவர், சர்வ வியாபி, சர்வஞானி, அவர் அன்புள்ளவர், இரக்கங்களால் நிறைந்தவர், என்னால் அவருடைய நன்மையைப் புரிந்து கொள்ள முடியாது. நாம் அவருடைய சுதந்தரராயிருக்கிறோம்.

†

சபை

# எது உண்மையான சபை?

# WHICH ONE IS THE REAL CHURCH?

*JIMMY JIVIDEN*

ஏராளமான சபைகள், கொள்கைப் புத்தகங்கள், மத குருக்கள் போன்றவற்றின் காரண மாக மதக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. அவர்கள் எல்லாருமே ஒரே கர்த்தரை பின்பற்றுவதாகத்தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இப்படிப் பட்ட சூழ்நிலையில், மனிதன் என்ன செய்ய வேண்டும்?.

மனிதன் தன்னுடைய உணர்வுகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கேற்ற ஒன்றை முறைப்படி ஆராய வேண்டுமா? குருட்டுத் தனமாக தன்னுடைய முன்னோர் களின் மத நம்பிக்கை முறைமை களைப் பின்பற்ற வேண்டுமா? அல்லது தற்போது இருக்கிற மதப் பிரிவுகளோடு ஒத்துப்போக வேண்டு மா? அல்லது உணர்வுகள் வந்து தன்னை நிரப்பக் காத்திருந்து, அந்த உணர்ச்சிவசப்பட்ட நிலை தேவனி டத்திலிருந்து தனக்குக் கிடைத்த சிறப்பு வெளிப்பாடு என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

உண்மை அல்லாததை உண்மை என்று சொல்லிக்கொள்ளு கிறவர்களுக்கும், அதைப் பொய் என்று சொல்லிக் கொள்ளுகிறவர் களுக்கும் மத்தியில், மனிதன் எப்படிப் போலியிலிருந்து உண்மையான தை வேறுபடுத்திக் காட்ட முடியும்? உண்மையான கர்த்தர் ஒருவரே என்று சொல்வது நியாயமானதும், வேத வசனத்தினடிப்படையிலானது மாகும். அதைப் போலவே, உண் மையான சபை ஒன்றே ஒன்று தான் என்று சொல்வதும் நியாயமானதும், வேத வசனத்தின் அடிப்படையிலா னதுமாகும் (எபேசியர் 4:4,5).

இப்போது கேள்வி என்ன வென்றால், இந்த சபை எப்படி அடை யாளம் கண்டு கொள்ளப்படும்?

இயேசு கிறிஸ்துவின் சபை மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டதல்ல. ஒரு கலாச்சாரப் பின்னணியிலிருந்து உருவானதுமல்ல. சபை தெய்வீக மானது, பரிசுத்தமானது, அசைக்க முடியாதது. சபை தேவனால் திட்ட மிடப்பட்டது, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டது, அது பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக் கிறது. சபையானது வேதவாக்கிய

ங்களில் தேவனுடைய விருப்பம் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. நாம் வேத புத்தகத்தை திறந்து பார்க்கும்போது அதில் போலி யிடமிருந்து உண்மையானதை வேறுபடுத்திக்காட்டும் தரம் மற்றும் தகுதியம்சங்களை நாம் காண முடியும்.


இதைப் பற்றி யோசியுங்கள். †

**பொ**துவாகவே, அநேக ஜனங்கள் நல்லவர்களாக இருப்பதற்கு முயற்சி செய்கிறார்கள், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் மரிக்கும்போது, நல்லவர்களாக இருப்பது கடவுளை திருப்தி படுத்தும் என்று நிச்சயமாக நம்புகிறார்கள். எல்லா மதங்களும் நல்லவர்களா யிருப்பதை அவசியப்படுத்துகிறபடியால் நல்லவர்களாக இருப்பது ஒரு முக்கியமான காரியம் என்று முடிவுக்கு வருகிறார்கள்.

ஆம், எல்லா மதங்களும் ஒரளவுக்கு தனிப்பட்ட முறையில் நல்லவர் களாயிருப்பது பற்றியும், சமூக முறையில் நல்லவர்களா யிருப்பது பற்றியும் போதிப்பது உண்மைதான். கேள்வி என்ன வென்றால், மனிதர்கள் நல்லவர்களாயிருப்பது தேவன் நம்மை ஏற்றுக் கொள்வதற்குப் போதுமானதா? எந்த ஒரு மதமும் இப்படிப்பட்ட உபதேசத்தை போதிப்பதில்லை, எல்லாமே மன்னிப்பையும், நன்மையையும், ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக சிலவகையான நன்கொடைகளையோ, பலிகளையோ வற்புறுத்துகின்றன.

ஆனால், ஒரே ஒரு மார்க்கம் தான் மனிதனால் தன்னை இரட்சித்துக் கொள்வது முடியாத காரியம் என்று சொல்கிறது; ஒரே ஒரு மார்க்கம் தான் இரட்சகரைத் தருகிறது; அந்த ஒரே மார்க்கம் இயேசு கிறிஸ்து உலகத்திற்கு கொண்டு வந்த மார்க்கமாகிய கிறிஸ்தவம் தான்.

– இது இயேசு கிறிஸ்து நித்திய பலி
என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.



# பிராந்திய சபைக்கான தேவனுடைய மாதிரி

*God's pattern for a Local Church*

**Clarence Deloach Jr.**

தெசலோனிக்கே சபையானது பவுலால் அவருடைய இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 18). பின்பு, தெசலோனிக்கேயர் எப்படி இருக்கிறார்கள் என்பதை அறிவதற்கு பவுல் தீமோத்தேயுவை அனுப்பினார். தீமோத்தேயு பவுலிடம் திரும்பின போது அவர்களுடைய விசுவாசத்தையும், அன்பையும் குறித்து நற்செய்தி யைக் கொண்டு வந்தான் (1 தெசலோனிக்கேயர் 3:6). அப்போது பவுல் சபையில்

தேவன் விரும்புகின்ற தன்மைகளை வலியுறுத்தி சபைக்குக் கடிதங்களை எழுதினார்.

### அது ஒரு இரட்சிக்கப்பட்ட சபையாக இருந்தது

**நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து** (1 தெச. 1:4). அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்தார்கள் (1:1). அவர்களுடைய மனமாற்றம் உண்மையானதாக இருந்தது. அவர்கள் விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள் (1:9). தேவனுக்காக மக்களை சந்திக்கும் காரியத்தில், எந்த ஒரு சபையும் தேவனால் தொடப்பட்டு, தேவனால் மாற்றப்படவில்லையென்றால் அவர் களால் வல்லமையாகச் செயல்படமுடியாது. பிராந்திய சபைக்கான தேவ னுடைய மாதிரி உண்மையான தனிப்பட்ட மனமாற்றத்துடன் தொடங்கு கிறது.

### அது ஒரு ஒப்புக் கொடுக்கப்பட்ட சபையாக இருந்தது

**எங்களையும், கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி (1:6).**

பவுலும் அவருடைய உடன் வேலையாட்களும் அவர்கள் மத்தியில் கிறிஸ்துவுக்கு மாதிரிகளாக இருந்தார்கள். மாதிரி என்பது ஒரு வல்லமையான காரியம். அவர்கள் எதைக் கண்டார்களோ அதை அப்படியே செய்தார்கள். தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினிடத்தில் தங்களை ஒப்புக் கொடுக்கும் போது, அவர்கள் கிறிஸ்துவைப் போல் இருப்பார்கள். அது தான் ஒற்றுமைக்கு ஆதாரமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் பின்பற்றும் போது, ஒருவரோடு ஒருவர் ஒத்துப்போவதில் எந்தப் பிரச்சனையும் இருக்காது.

### அது ஓர் ஆத்தும உணர்வுடைய சபையாக இருந்தது

ஆதிக்கிறிஸ்தவர்கள் முன்மாதிரியுள்ள தங்கள் வாழ்க்கையினால் அந்த முழு பிராந்தியத்திலும் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். அவர்களுடைய சந்தோஷத்தையும், நடத்தையையும் கண்ட மக்கள் கிறிஸ்துவினிடத்தில் ஈர்க்கப்பட்டார்கள். உண்மையான சுவிசேஷம் என்பது வெறும் பேச்சல்ல. அது வாழ்க்கையாயிருக்கிறது! நம்முடைய நடத்தையி லிருந்து சுவிசேஷம் இயற்கையாக வளர்கிறது. நற்செய்தி என்பது வாயி னாலும், வாழ்க்கையினாலும் வெளிப்படுத்தப்பட வேண்டிய ஒன்று.

### அது ஊழியஞ்செய்கிற சபையாயிருந்தது

**ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, அவர்கள் விக்கிரகங் களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள். (1:9).**

நாம் சும்மா இருக்கும் படியாக இரட்சிக்கப்படவில்லை, ஆனால், ஊழியம் செய்வதற்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் ஊழியக்காரர்கள். கிறிஸ்து நம்முடைய எஜமானா யிருக்கிறார். நம்முடைய ஊழியத்தின் மாதிரி என்ன? இயேசுவைப் பாருங்கள்! மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் மூலமாக அவரைப் பின்பற்ற வேண்டும்! அவர் இழந்து போனவர்களைத் தேடினார். இருளில் இருந்தவர்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டு வந்தார். அவர் காயப்பட்ட வர்களுக்கு நம்பிக்கையைக் கொண்டு வந்தார். அவர் சிறு பிள்ளைகளை சந்தித்தார். அவர் துக்கத்தில் இருந்தவர்களுக்கு ஆறுதலை அளித்தார், தனி மையில் இருந்தவர்களை உற்சாகப்படுத்தினார், பசியில் இருந்தவர்களை போஷித்தார். வசனங்களை போதித்தார். அவர் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார் என்று பேதுரு சொன்னார் (அப். 10:38). இயேசுவின் ஊழியமும், வாழ்க்கையும் அவருடைய சரீரமாகிய சபைக்கு மாதிரியாயிருக்கிறது.

### அது காத்திருக்கிற சபையாக இருந்தது


அவர்கள் இயேசுவின் இரண்டாம் வருகை குறித்த எண்ணம் உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய குமாரனுக்காக காத்திருந்தார்கள் (10). அவர்களுடைய காத்திருப்பு ஊழியத்திற்கு தூண்டுகோலாக இருந்தது. இயேசுவின் வருகையைக் குறித்து நாம் அசட்டையாயிருக்க வேண்டாம். ராஜாவின் வேலையில் நம்மை நாம் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள அவருடைய வருகை நமக்கு ஊக்கம் அளிப்பதாக. †

**தீர்மானம்**

ஒவ்வொரு நாளிலும்
ஜெபிப்பதற்கு நேரம் ஒதுக்கவும்,
வேதம் வாசிக்கவும்,
நண்பருக்கு உதவவும் தீர்மானித்தேன்.
ஆனால், வாரம் முடியும் போது
நான் ஏற்கனவே தீர்மானித்த காரியங்களைச் செய்ய மீண்டும்
முடிவெடுக்க வேண்டுமென்பதைக் கண்டு கொண்டேன்.

*JESSE GRANVILLE*

# கிறிஸ்துவின் சபை




**கல்லை அடித்தளமாகக் கொண்டது.** இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் (மத்தேயு 16:18). கிறிஸ்துவின் சபை, யோனாவின் குமாரனாகிய சீமோன், இயேசு, " ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து " என்று செய்த அறிக்கையின் உறுதியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது.

போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1 கொரிந்தியர் 3:11). தேவன் வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லாகிய கிறிஸ்துவை மூலைக்குத் தலைக்கல்லாக்கினார் (சங்கீதம் 118:22; அப்போஸ்தலர் 4:11) அந்தக் கல்லின் மேல் கட்டப்படாதவைகள் எவைகளோ அவைகள் விழுந்து போய் விடும். என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் (மத்தேயு 15:13).

**கிறிஸ்துவால் கட்டப்பட்டது.** " நான் என் சபையைக் கட்டுவேன்" (மத்தேயு 16:18). சபை கிறிஸ்துவுடையது. அவர் தாமே அதை கட்டினார். அவர் தம்முடைய மரணத்தினாலும், உயிர்த்தெழுதலினாலும் அந்த அஸ்திபாரத்தைப் போட்டார். அவர் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும் ஏற்படுத்தினார் (1 கொரிந்தியர் 12:58), அவர் தம்முடைய இரத்தத்தினாலும், அவர்களுடைய சாட்சி வார்த்தைக ளினாலும் இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் சபையில் சேர்க்கிறார். (அப்போஸ்தலர் நடபடிகள் 2:47). அவர் தொடர்ந்து தம்முடைய சபையைக் கட்டிக் கொண்டிருக்கிறார், ஆவியினாலே பரிசுத்த ஆலயத்தையும், தேவனுடைய வாசஸ்தலத்தையும் கட்டிக் கொண்டிருக்கிறார், ஜீவனுள்ள கற்களுக்கு மேல் ஜீவனுள்ள கற்களை வைத்துக் கொண்டிருக்கிறார் (1 பேதுரு 2:5-7).

**இரத்தத்தால் வாங்கப்பட்டது.** கிறிஸ்துவின் சொந்த இரத்தத்தினாலே கர்த்தருடைய சபையானது வாங்கப்பட்டது (அப்போஸ்தலர் 20:28).

ஓர் இளம் வாலிபன் பலமணி நேரங்கள் முயற்சி செய்து, கடினமாக உழைத்து தன் முதல் கலைப் படைப்பாக மரத்தினாலான ஒரு படகை செதுக்கினான்,

அதை மிகுந்த கவனத்துடனும், அதிக முயற்சியுடனும் உருவாக்கினான். அவன் ஒரு சிறிய ஆற்றில் அதில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது, தன் படகைத் தொலைத்து விட்டான். அவன் ஓலமிட்டு அழுது தன் இழப்பை வெளிப்படுத்தினான். அவன் தன் சொந்த கைகளினாலே உருவாக்கின ஒரே பொருள் அதுவாக இருந்த படியால் அவன் அதை அதிகமாக நேசித்தான்.

அதற்காக அநேக வாரங்கள் துக்கப்பட்டபிறகு, ஒரு நாள் அதைக் கண்டான். வேறொரு பையன் அதை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான், அவன், தான் அந்த படகைக் கண்டெடுத்ததாக ஒத்துக் கொண்டான், ஆனால் அதை உரிய வனுக்குக் கொடுக்க மனதில்லாதிருந்தது. " கண்டெடுத்தவர்கள் வைத்துக் கொள்ளலாம் " என்று சொன்னான்.

பேச்சு வார்த்தைக்குப் பிறகு, அந்தப் படகைக் கண்டு பிடித்தவன் அதை உருவாக்கினவனிடம் விற்க சம்மதித்தான். படகை உருவாக்கினவன் அதை அளவுக்கதிகமாக நேசித்தபடியால், தான் சேமித்து வைத்த பணத்தையெல்லாம் வைத்து அதை வாங்கினான். வாங்கின படகை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய், அதை முத்தமிட்டு, மார்போடு அணைத்துக் கொண்டு, இது என்னுடையது; நான் உன்னை உருவாக்கினேன், நான் உன்னை வாங்கினேன் என்று தன் இரட்டிப்பான மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். கிறிஸ்துவுக்கு சபை இப்படித்தான் இருக்கிறது.

**நரகத்தால் சேதப்படுத்த முடியாதது** பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்தேயு 16:18). அந்த ராஜ்யம் கைகளால் செய்யப்பட்டதல்ல, அது அழிக்கப்பட முடியாது அல்லது ஒரு போதும் அழிந்து போவதில்லை (மத்தேயு 16:19; தானியேல் 2:44).

மரணத்தின் அதிகாரத்தால் தேவன் கிறிஸ்துவை சிங்காசனத்தில் வைப்ப தை தடுக்க முடியவில்லை, தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரச் செய்திருக்கிறார்.

தேவனுடைய வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும். 1 பேதுரு 1:23-25; ஆகவே, சபையும் என்றென்றும் நிலைத்திருக்கும். தேவனுடைய வார்த்தை ராஜ்யத்தின் விதையாயிருக்கிறது (லூக்கா. 8:10,11). சுவிசேஷம் எப்போதெல்லாம், எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ நேர்மையுள்ள ஆத்துமாக்கள் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் ஏற்றுக் கொள்ளும்போது அங்கே சபை இருக்கிறது.

சபை மரணபரியந்தம் துன்பப்படுத்தப்பட்டது, ஆனால், மரணம் அதை மேற்கொள்ள முடியவில்லை. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள், அழிவுள்ளது அழியாமையையும், சாவுக்கேதுவானது சாவாமையையும் தரித்துக் கொள்ளும். அப்போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும் (1 கொரிந்தியர் 15:53,54). பாதாளமும், கல்லறையும் நரகத்திற்குள் தள்ளப்படும். மரணத்தால் சபையை மேற்கொள்ள முடியவில்லை. உண்மையுள்ள சபை மரணத்தை மேற்கொள்ளும்.

பூமியில் துடிப்போடு செயல்படுகின்ற சபை, பரலோகத்தில் ஜெயங்கொள்ளுகிறபோது, அந்த வெற்றியில் முழுமையாகப் பங்கு கொள்ளும்.

†

# சபை வளர்ச்சியும், எண்ணிக்கையும்

## CHURCH GROWTH AND NUMBERS

*Jerry Jenkins*

எண்ணிக்கையை வலியுறுத்துவது வேத அடிப்படையிலானதா? எண்ணிக்கையில் மட்டும் நாம் விருப்பமுள்ளவர்களாயிருந்தால் அது அப்படியல்ல. புள்ளி விவரங்களை வைத்து நாம் பெருமைப்பட்டு கொண்டு, ஆத்துமாக்களை மதிக்காமல் அவர்களை கீழான நிலையில் வைத்தால் அது மிகவும் தவறானது, எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சியை மட்டும் வலியுறுத்துவது வேத அடிப்படையிலானதல்ல.

சபையின் முதன்மையான பணி கிறிஸ்துவை அறியாமல் இருக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும், வாலிபர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும், போதிப்பதும்தான். இழந்து போனவர்களை மனமாற்றமடையச் செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் பலன்களை கணக்கிடுவது வேத அடிப்படையிலானது தான், இதைத் தான் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதாகம எழுத்தாளர்கள் மிகச் சரியாக செய்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் 2:41 : " தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் ".

அப்போஸ்தலர் 4:4: " வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது ".

அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:14 : " திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் ".

அப்போஸ்தலர் 6:1: " அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள் ".

அப்போஸ்தலருடைய நடபடிகள் 6:7 : " தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள். "

அப்போஸ்தலருடைய நடபடிகள் 9:31 : " அப்பொழுது யூதேயா கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின".

அப்போஸ்தலருடைய நடபடிகள் 9:35 : " லித்தாவிலும், சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். "

அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:1: " அதன் பின்பு அவன் தெர்பைக்கும், லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூத ஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன். "


அப்போஸ்தலருடைய நடபடிகள் 21:20 : " அதை அவர்கள் கேட்டுக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். பின்பு அவர்கள் அவனை நோக்கி; சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம் பேர் விசுவாசிகளாயிருக்கிறதைப் பார்க்கிறீரே, அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். "

எண்ணிக்கை அடிப்படையிலான சபை வளர்ச்சி ஆதி திருச்சபையின் ஓர் அங்கமாக இருந்தது. இந்த வளர்ச்சி குறைந்ததாக எங்குமே குறிப்பிடப்படவில்லை, ஆனால் நேரத்திற்கு நேரம் இந்த எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சி குறிப்பிடப்பட்டு சபை உற்சாகப்படுத்தப்பட்டிருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது. புதிய ஏற்பாட்டு சபையை மீட்டமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நாம் வளர்ச்சிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் முதன்மைத்துவத்துவத்தையும், முக்கியத்துவத்தையும் மீட்டமைக்க வேண்டும். நாம் ஓர் இலக்கை ஏற்படுத்தி அதை அடையப் பாடுபடுவோம். அதற்கென நாம் உற்சாகப் படுத்தப்படுவோம்! சபை எல்லா விதத்திலும் தொடர்ந்து மேம்பட வேண்டிய அவசியத்தை சபை அறியச் செய்வோம்.

எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சி மட்டுமே பிதாவால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என நாங்கள் நினைக்கிறோம் என்று தயவு செய்து எண்ணிவிடாதீர்கள் அதேநேரத்தில், நாம் விரல்விட்டு முகங்களை எண்ணக்கூடிய அளவில் எண்ணிக்கையைக் குறைத்து விடவும் கூடாது. நாம் நம்முடைய வளர்ச்சிக் குறைவை நியாயப்படுத்த " தரத்தில், ஆவியில் நாங்கள் வளர்கிறோம் " என்பதை ஒரு சாக்காக வைத்துக் கொள்ள வேண்டாம். †

**சிந்தனைக்கு**

- கிறிஸ்தவர்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறார்கள் சர்க்கரையாகவும் இருக்க வேண்டும்.
- இடுக்கமும், நெருக்கமுமான வழியில் போக்குவரத்து நெரிசல் இல்லை.
- கிழிந்து போன ஆடை விரைவில் தைக்கப்பட முடியும். ஆனால், கடின வார்த்தைகள் பிள்ளையின் இருதயத்தை நொறுக்கிப்போடும்.



# புதிய ஏற்பாட்டு சபையும், அதன் ஆராதனையும்

## The New Testament Church and its Worship

*Dennis R. Smith*

முதல் நூற்றாண்டிலிருந்தே, இயேசு கிறிஸ்துவால் வடிவமைக்கப் பட்டு, அப்போஸ்தலர்களால் போதிக் கப்பட்ட ஆராதனையின் மாதிரியி லிருந்து மெய்க் கிறிஸ்தவம் வேறு திசை நோக்கி சென்று கொண்டிருக் கிறது. மக்கள் என்ன விரும்புகிறார் களோ அதைத் தான் தேவனுக்கு செலுத்துகிறார்கள். திறமையைக் காட்டும் பொழுதுபோக்கு அம்சங்கள், நாடக ஏற்பாடுகள், இசைக் கச்சேரிகள், சிறப்பு நாள் ஏற்பாடுகள் (கிறிஸ்துமஸ், பெரிய வெள்ளி, ஈஸ்டர்) போன்ற வைகள் கிறிஸ்தவ வட்டாரங்களில் வழக்கமான ஒன்றாகி விட்டன. இங்கே கேள்வி என்னவென்றால், இவைக ளைச் செய்வதற்கு அதிகாரத் தை ஒருவர் வேதாகமத்தில் எங்கே கண்டுபிடிக்க முடியும்?

மிக எளிதான ஆராதனை முறையை, முதல் நூற்றாண்டு சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வேதாக மத்தில் காணமுடியும். பெரும் பாலும் ஆராதனை ஆதிக்கிறித்தவர்களின் தனிப்பட்ட வீடுகளில் செய்யப்பட்டி ருக்கிறது (அப். 2:46; 1 கொரி. 16:19). சபை வரலாற்றை எழுதிய ஆரம்ப கால எழுத்தாளர்கள் ஜெபம், பிரசங் கம், பாடல், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல், காணிக்கை போன்ற எளிதான காரியங்களை உள்ளடக் கிய எளிதான ஆராதனை தான் செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறார்கள்.

வேதாகமம் எங்கே பேசுகிற தோ அங்கே பேச வேண்டும், வேதா கமம் எங்கே அமைதியாயிருக்கிற தோ அங்கே அமைதியாயிருக்க வேண்டும் என்கிற வேண்டுகோள் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தி யில் பிரபலமாகி வருகிறது. இப்படிப் பட்ட மக்கள் வேதாகமம் உண்மை யாகவே தங்கள் கால்களுக்கு தீப மும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக் கிறது என்பதை உணர்ந்து கொண்டு வருகிறார்கள் கிறிஸ்துவின் சபை நம்புகிற, நடைமுறைப்படுத்துகிற ஒவ்வொன்றுக்கும் வேதாகமத்தை மட்டும் உபயோகப்படுத்துகிறதை அவர்கள் பாராட்டுகிறார்கள். நெடுங் காலமாக மத உலகம் மத குருக்களின் அதிகாரத்தின்கீழும், இறையியல் கருத்துகளின் கீழும் கட்டப்பட்டிருக் கிறது. இவைகளை ல்லாம் மக்களை வேதாகமத்தின் எளிதான காரியங்களை அறிந்து கொள்ளாமல் இருக்கச் செய்திருக் கின்றன, அது மட்டுமல் லாமல் புதிய ஏற்பாட்டு வசனங்களால் அதிகாரம் கொடுக்கப்படாத பாரம்பரிய மான, மதச் சடங்காச்சாரமான ஆராத னை வேதாகமத்தின் எளிதான காரியங்க ளுக்கு மாற்றாக வைக்கப்பட்டது. இது, அநேகர் மத்தியில் அவர்களால் வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்கின்ற எண்ணத்தை உருவாக்கிவிட்டது. எனவே, அவர்கள் வேதாகமத்தை தங்கள் வழிகாட்டியாக பின்பற்ற வேண்டிய புத்தகமாக, ஆளும் புத்தகமாக பயன்படுத்தத் தவறுகிறார்கள்.

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக் கிறது; தேவனுடைய மனுஷன் தேறி னவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதே சத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக் கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள் ளவைகளாயிருக்கிறது என்று வேதா கமம் அறிவிக்கிறபடியால் (II தீமோத் தேயு 3:16,17), வேதவாக்கியங்களை அதேவிதமாக துல்லியமாக பயன் படு த்துவது அவசியமாயிருக்கிறது.

✝

# ஆரோக்கியமான ஆராதனைக்கான இரகசியங்கள்

# Secrets to Healthy worship

**Glenn Colley**

சில கிறிஸ்தவர்கள் சபை கூடி வருதலை விட்டுவிட்டு, புத்துணர்ச்சி பெற்றது போலும், தரத்தில் மேம்பட்டது போலும் தெரிகிறார்கள், சிலர் ஒன்று மில்லாத காரணத்திற்காக சபை கூடி வருதலை விட்டு விடுவதை கவனித் திருக்கிறீர்களா? உறுதியான, ஆரோக்கியமான ஆராதனைக்கு சில இரகசி யங்கள் இருக்கின்றன. இவைகள் நம் எல்லோருக்கும் அவசியமாயிருக்கிறது.

தேவன், ஆரம்பத்திலிருந்தே தன்னுடைய படைப்பாகிய மனிதன் தன்னை ஆராதிக்க வேண்டும் என எண்ணம் கொண்டிருந்தார். ஆராதனை என்பது தாழ்மை மற்றும் பணிவிற்கான மனித வெளிப்பாடாயிருக்கிறது. ஆராதனைக்கான தேவனுடைய விருப்பமும், காயீனுடைய விருப்பமும் ஒன்றோடொன்று ஒத்துவராதபடியால், காயீனுடைய கையினால் முதல் கொலை நடந்தது. காயீனிடத்தில் தாழ்மை குறைவுப்பட்டது. இயேசு எது சரியான ஆராதனை என்று நமக்கு போதித்திருக்கிறார், ஆவி, உண்மை ஆகிய இரண்டும் வலிமையான தூண்கள் மீது நிற்கிற வீட்டைப் போல் இருக்கிறது. (யோவான் 4:24). ஆராதனையின் போது இந்த இரண்டில், ஒன்றை வலியுறுத்திவிட்டு, மற்றொன்றை அசட்டை பண்ணுகிற கிறிஸ்த வர்கள் இருக்கிறார்கள். ஆனால், இயேசு இரண்டும் அவசியம் என்று சொல்கிறார். உண்மையோடு தேவனை ஆராதிப்பது என்பது புதிய ஏற்பாட்டில் அவர் அங்கீகரித்திருக்கிற மாதிரியின்படி ஆராதிப்பது (அப்போஸ்தலர் 20:7).

ஆவியோடு ஆராதிப்பது என்ன என்பதற்கு இயேசுவின் வார்த்தை களைச் சிந்தித்துப் பாருங்கள். நிச்சயமாக, இது தற்போது இருக்கின்ற கிறிஸ்தவ உலகில் உற்சாக மிகுதியால், உணர்ச்சிவசப்பட்டு கைகளையும், கால்களையும் அசைப்பதைக் குறிக்காது. ஆரோக்கியமான ஆராதனைக்கு நம்முடைய இருதயங்களை எப்படிப் பக்குவப்படுத்துவது என்பதை கற்றுக் கொள்ள நாம் வேதாகமத்திற்கு திரும்புவோம்.

சகோதரர் பாடலை அறிவிக்கும் போது சபையார் பாடுவார்கள், நாம் நம்முடைய குரல்களால் துதிகளை ஏறெடுப்போம். ஆயினும், ஆராதிப்பவர் களின் இருதயங்களைப் பாருங்கள். அங்கே என்ன இருக்கிறது? பாடல் களில், சில நம்முடைய இளம் வயதிலிருந்தே பாடப்பட்டு வருகிறது,

அவைகள் நமக்கு நன்கு பரிச்சியமாயிருக்கிறபடியால் வெறுமனே வாய்களை அசைக்கிறோம். ஆனால், பாடல்களில் இடம் பெற்றிருக்கிற கருத்துக்களை சிந்திப்பதேயில்லை. கொலோசெயர் 3:16-யை கவனித்துப் பாருங்கள். “கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி....” என்றுள்ளது பாடல் ஆவியோடு இருக்க விரும்பினால் தேவன் என்மீது பாராட்டும் ஐசுவரியமுள்ள கிருபையின் நினைவுகளால் என் இருதயத்தை நிரப்ப வேண்டும். ஒரு காலத்தில் பாவத்தால் கறைப்பட்டிருந்த என் ஆத்துமாவை முற்றிலுமாகக் கழுவி சுத்திகரித்ததை நான் நினைத்துப் பார்க்க வேண்டும். அதன் பின்பு நான் பாட வேண்டும்.

நம்முடைய ஜாக்கிரதையான கவனம் அவசியப்படுகின்ற மற்றுமொரு ஆராதனையின் பங்கு ஜெபம், நான் அவசரமாக மன விருப்பமில்லாமல் ஜெபம் செய்வேனென்றால் நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. ஆனால், ஒரு வேளை, அதற்கு மாறாக, நான் ஜெபிப்பதற்கு முன்னால் தேவனுடைய நன்மை என் மீது இல்லாவிட்டால் எப்படிப்பட்ட நம்பிக்கையற்ற நிலையில் இருப்பேன் என்பதை கவனமாக தியானிக்க வேண்டும். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று பவுல் எழுதினார். அதோடு எல்லாவற்றிலேயும் ஸ்தோத் திரஞ் செய்யுங்கள் என்றும் எழுதினார் (II தெச. 5:17,18). விண்ணப்பத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக உண்மையான நன்றி நிறைந்த இருதயத்தோடு செலுத்தப்படும் நன்றிதான் ஐசுவரியமுள்ள, ஆரோக்கியமான ஜெபத்திற்கு காரணமாகிறது.

ஆராதனையின் மற்றுமொரு பங்காகிய கர்த்தருடைய பந்தியை வாரத்தின் முதல் நாள்தோறும் அனுசரிப்பது அலுப்பாகவும், வழக்கமானதாக வும், உயிரற்றதாகவும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். கர்த்தருடைய பந்தியில் நீங்கள் பங்கு பெறும்போது தங்கள் இருதய நிலை சரியாக இல்லையென்றால் அவர்கள் சொல்வது சரியாயிருக்கும். ஆயினும், கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பாக கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம் மற்றும் தங்கள் பாவத்தின் மீது இயேசுவின் இரத்தம் கொண்ட தாக்கம் போன்றவைகளால் தங்கள் இருதயங்களை நிரப்பினால் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் ஒவ்வொரு முறையும் புதியதாகவே, புத்துணர்வை ஏற்படுத்துகிறதாகவே இருக்கும். 1 கொரிந்தியர் 11:24,25 வசனங்களில், நாம் நம் எஜமானுக்கு கீழ்ப்படிந்தபடி அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவு கூரும்படி கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும் என்று பவுல் சொல்கிறார். பின்பு, 28 ஆம் வசனத்தில், பவுல் இவ்விதமாகச் சொல்கிறார். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித் தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன்.

நம்மில் அநேகர் பணம் செலவு செய்வதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்கிறோம். நாம் ஆராதனைக்கு வரும்போது நல்ல இருதயத்தை வைத்துக் கொள்வது கடினமாக இருக்கும். பணம் சம்பாதிப்பது கடினம். ஆகவே, சபையின் வேலைக்கு என் காணிக்கை குறைவாக இருக்கக்கூடும் என்று நாம் காரண காரியங்களைச் சொல்லலாம். நான் காணிக்கை கொடுக்கும் போது நான் உண்மையாகவே சந்தோஷமாயிருக்க எப்படி என் இருதயத்தை சரிபடுத்திக் கொள்வது? அதற்கான பதில் இதோ; நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் (1 கொரிந்தியர் 16:2). ஒரு கிறிஸ்தவன் கொடுக்கும்போது நம்முடைய கர்த்தர் தன்னை எவ்விதத்தில் எல்லாம் செழிக்கச் செய்திருக்கிறார் என்பதை ஆழ்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும். கர்த்தர் நமக்கு செய்த எல்லாவற்றையும் தியானித்துக் கொண்டே நாம் காணிக்கை கொடுக்கும் போது உதாரத்துவத்துடனும், உற்சாகத்துடனும் கொடுப்பது மிக எளிது.

கடைசியாக, நன்றாக பிரசங்கம் செய்வதற்கான இரகசியம் 1 பேதுரு 4:11-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது: ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்... பிரசங்க மேடை உற்சாகமானதாகவும், சவால் விடத்தக்கதாயும், பார்வையாளர்களின் நேரத்திற்கு மதிப்பை உண்டாக் கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். நம்முடைய பிரசங்கங்களை தேவ னுடைய வார்த்தைகளால் நிரப்ப வேண்டும். பிரசங்கங்களில் வேத வசனங் களை முழுமையாகப் பயன்படுத்தாமல், அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பயன்படுத்துவோமானால், நாம் பயங்கரமான தவறு செய்கிறதாகவே நான் நம்புகிறேன். பிரசங்கங்கள் வேத வசனங்களால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக நம்முடைய ஞானத்தைக் கொண்டு செய்யப்படும் பிரசங்கம் மெழுகு வர்த்தியின் வெளிச்சத்தை, பிரகாசமான சூரிய ஒளியோடு ஒப்பிடுவது போன்றதாகும். தேவனை நேசிக்கிற மக்கள் தேவனுடைய வார்த்தைக்காக பசியாயிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆரோக்கியமான ஆவிக்குரிய ஆகாரமில்லாமல் நாம் அவர்களை ஒருபோதும் வெளியே அனுப்பாமல் இருப்போமாக.

இவைகள் தான் ஆரோக்கியமான ஆராதனைக்கு இரகசியங்களாக இருக்கின்றன. இவைகள் தேவன் யார் அவருக்கு முன்பாக நான் எவ்வளவு சிறியவனாக இருக்கிறேன் போன்ற எளிதான புரிந்து கொள்ளுதலை நமக்கு இவை தருகிறது. அவருடைய கிருபையும், அன்பும் எனக்கு தேவை. இவை கள் இரண்டையும் தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினதன் மூலமாக பொழிந்தருளியிருக்கிறார். நாம் எப்போதும் ஆவியோடும், உண்மை யோடும் அவரை ஆராதிப்போமாக!.



ஆராதனை

# அதிகாலமே உம்மைத் தேடுவேன்

# EARLY WILL I SEEK THEE

Jeril(Ppolly)Cline

என்னுடைய மெத்தைப் படுக்கை குளிர்ச்சியான தரையின் மீது போடப் பட்டிருந்தது. அது சூரியனை நோக்கி இருந்தது. சூரியக் கதிர்கள் மெல்லிய கதவு வழியாக ஊடுருவியது. ஆனால், என்னை அதிகாலை வேளையில் எழுப்பவில்லை அந்த அறையின் குளிரோ அல்லது சூரியனின் வெப்பமோ எழுப்பவில்லை. மணியோசையும், என்னுடைய சிறிய தோட்டச் சுவரின் மறுபக்கத்தில் கேட்ட புதுமையான முணுமுணுப்பும் தான் என்னை எழுப்பியது. நான் எங்கே இருக்கிறேன் என்பதை நினைவுப்படுத்திக் கொள்ளவே நான் போராடினேன்.... நான் இருந்த இடம் டோக்கியோ ... டோக்கியோவில் நகரின் மையப்பகுதியில் ஒரு கிறிஸ்தவரின் வீட்டில் இருந்தேன். அப்படியென்றால் அந்த சத்தம்? பக்கத்து வீட்டில் இருந்த ஒரு புத்த சாமியார் அதிகாலையில் தன்னுடைய கடவுளை தொழுது கொள்ள எழுந்து கொண்டார்.

கலிபோர்னியா அவினியுவில் உள்ள என் வீட்டிலிருந்து சில வீடுகள் தள்ளியிருக்கிற வஹியாவா, ஹவாய் பகுதியில் அதிகாலையில் எழுந்து மக்கள் அன்னாசிப் பழம் மற்றும் கரும்பு தோட்டத்திற்கு வேலைக்கு போகும்போது, ஒரு சிறிய இடத்தில் நின்று தங்கள் முன்னோர்களுக்கு வைக்கப்பட்டிருந்த சிலை அருகில் தங்கள் சோற்றுப்பானை அல்லது மாங்காய், பப்பாளி போன்ற வைகளைப் படைத்து நல்ல யோகத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் பிரார்த்தனை செய்தார்கள்.

நீங்கள் நீண்ட ஆடைகளை உடுத்திக்கொண்டு ஓதுகின்ற முஸ்லீம்களை பார்த்திருப்பீர்கள். அவர்கள் முழங்கால் படியிட்டு, உரத்த சத்தமிட்டு, மார்பு களை அடித்துக்கொண்டு அல்லாவை நோக்கிக் கூப்பிடுவதைப் பார்த்திருப் பீர்கள். ஒரு தவறான கடவுளிடத்தில் இத்தனை அர்ப்பணிப்பு! இந்தியாவின்மிகப்பெரிய மக்கள் தொகையையும்,

அவர்களுடைய கடவுள்களையும் நாங்கள் இன்னும் குறிப்பிடவில்லை. ஆயினும், இவர்களுக்கெல்லாம் பொதுவாக ஒன்றிருக்கிறது. அவர்களுடைய அர்ப்பணிப்பு அதிகாலையில் தங்கள் கடவுள்களைத் தேட வழிவகுக்கிறது! வேலை, பள்ளி அல்லது விளையாட்டை ஆரம்பிப்பதற்கு முன்பாக அவர்கள் செய்ய வேண்டிய ஒன்றி ருக்கிறது.

நான் ஆசியாவுக்குச் செல்ல பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த போது, சகோதரர் ஒடிஸ் கேட்வுட் இரும்பு திரை நாடுகளுக்கு வேதாகமத்தை எடுத்துச் சென்றதை சொல்லக் கேட்டேன். ஒரு கர்த்தருடைய நாளில், அமெரிக்கர்கள் ஆராதனை செய்த விதத்தை விவரிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர்கள் நாள் முழுவதும் ஆராதனைக்காக இருந்தார்களா? அவர்கள் தங்கள் வேலைக்கு செல்வதற்கு முன்பாக பக்தி காரியங்களில் ஈடுபட ஒவ்வொரு நாளின் அதிகாலையிலும் வந்தார்களா? கிறிஸ்தவர்கள் சுதந்திரமாக ஆராத னை செய்ய வாய்ப்பு இருக்கும் போது, ஆராதனையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள நினைக்கும் கிறிஸ்தவர்கள் பற்றி என்ன சொல்லுவது?

இப்போது, என்னைப் பற்றி என்ன? நான் அதிகாலையில் எழுந்தி ருக்கும் நபர் அல்ல. என் கணவர் அப்படிச் செய்பவர், ஆனால், நான் அப்படி யல்ல. ஓ, உண்மையாகவா? ஆம், நான் வேட்டையாட, மீன்பிடிக்க, வேறு பல காரியங்களுக்காக நேரமே எழுந்திருப்பேன். ஓ, உண்மையாகவா?.

அதிகாலையில் உம்மை நான் தேடுவேன்...நான் கஷ்டத்தில் இருக்கும்போது எனக்கு ஏதோ ஒன்று அவசியப்படுகிறபோது... என் குழந்தை சுகவீனமாயிருக்கும் போது...., .... உம்மை நான் தேடுவேன்? ஆனால், உண் மையாகவே, எப்போது நான் உம்மைத்தேடுவேன்? நான் உம்மை அறிந்து கொண்டு உம்மைத் துதிக்கும்படி? நீர் எனக்கு எவ்வளவு விலையேறப் பெற்றவர்.... உம்முடைய பிரசன்னம்... உம்முடைய எண்ணங்கள் ... உம்முடைய மனநிலைகள் .... உம்முடைய பதில்கள்?

செத்துப்போன கடவுளை ஆராதிப்பவர்கள் அதிகாலையில் எழுந்து, காணமுடியாத கால்களையும், கேட்கமுடியாத காதுகளையும், மரக்கட்டை யிலான, அல்லது கல்லினாலான இருதயத்தை கனப்படுத்த தங்களை ஒழுங்கு படுத்த முடியுமென்றால், நிச்சயமாக ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களால் அதிகாலையில் எழுந்திருக்க முடியும்!.

நான் வெறுமனே சரீரப்பிரகாரமாக மட்டும் பேசவில்லை, ஆவிக்குரிய பிரகாரமாகவும் பேசுகிறேன். நியாயாதிபதிகள் நான்கு, ஐந்து அதிகாரங்களில் இஸ்ரவேல் பிள்ளைகளை எழுப்பி விடும்படி தெபோராள் அழைக்கப்பட்டாள். சோம்பலாய் இருந்த அவர்களை எழுப்ப வேண்டியதா யிருந்து! ஆவிக்குரிய இஸ்ரவேலில் சரியில்லாமல் இருந்த காரியங்களைச் சரிபடுத்த அவர்களை எழுப்ப வேண்டியதாயிருந்தது.

யோசேப்பு தன் வாழ்வின் ஆரம்பத்திலேயே கர்த்தரைத் தேடினான். தாவீது தன் சிறுவயதிலேயே கர்த்தரைத் தேடினான். தானியேல் சிறை வாசத்தில் இருந்தார், ஆயினும், அவர் இளம் வாலிபனாக இருந்த உலகத்தின் மனம் போன போக்கிற்கு தன்னைக் கறைப்படுத்தக் கூடாது என்று தன் மனதில் தீர்மானித்திருந்தார்.

ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளையாகிய இயேசுவுக்கு, தேவனுக்குள் மட்டும் காணப்படும் அந்த உறவு அவசியப்பட்டிருக்கிறது. இயேசுவின் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே இயேசு தேவனைப் பற்றி கேட்பதும் அது சம்மந்தமான கேள்விகளுக்கு பதில் அளிப்பதுமாக காண்கிறோம். இயேசுவே சிறு பிள்ளையாக இருந்தபோது தேவனை தேடினதோடு, அதிகாலையில் இருட்டோடே எழுந்து, தனிமையான இடத்திற்குப்போய், தன் பூலோக வாழ்வில் ஜெபித்திருக்கும் போது (மாற்கு 1:35), நிச்சயமாகவே நான் அப்படிச் செய்ய வேண்டிய மிகப்பெரிய தேவையில் இருக்கிறேன்.

தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும், விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது (சங்கீதம் 63:1).

உங்கள் குழந்தை பள்ளிக்குச் செல்வதற்கு முன்பாக தேவனுடைய வார்த்தையை குழந்தையினிடத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பெலனுக்காகவும், ஞானத்துக்காகவும் ஜீவனுள்ள தேவனை நீங்கள் சார்ந்தி ருக்கிறீர்கள் என்பதை குழந்தைக்குப் போதியுங்கள். குழந்தையின் வாழ்க்கை யின் ஆரம்பத்திலேயே அதன் கேள்விகளுக்கு பதில் அளிக்கக் கூடியவர் யாருமில்லை என்பதை அறிந்துகொள்ளட்டும். உங்கள் குழந்தை சூரிய உதயத்திற்கு முன்பு உங்கள் அறைக்குள் வருவதாக இருந்தால், உங்களை ஜெபத்தில் காணட்டும், குழந்தை உங்களை ஆவலுடன் வெளியே தேடி, உள்ளே ஜெபத்தில் பார்க்கும்படி நீங்கள் அதிகாலமே உங்கள் பிதாவைத் தேடுங்கள். ✝

---

**அவர் அதிகாலையிலே திரும்பி தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம் பண்ணினார் (யோவான் 8:2).**

**வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே நாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக் கொண்டு வேறு சில ஸ்திரீ களோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள் (லூக்கா 24:1).**

**அவர்கள் அதைக்கேட்டு, அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித் துப் போதகம் பண்ணினார்கள் (அப்போஸ்தலர் 5:21).**

# ஆராதனைக்கான சரியான மனநிலை

# The Proper Attitude Toward Worship

W.T. ALLISON



கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் (சங்கீதம் 122:1). ஆராதனை சம்மந்தமாக இப்படிப்பட்ட மனநிலையை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் வெளிப்படுத்தினால் விளைவுகள் என்னவாயிருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்க முடியுமா? சங்கீதக்காரன் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை, அவருடைய ஜனங்களெல்லாருக்கும் முன்பாகவும், கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரங்களிலும் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்கிற உண்மையை அறிந்திருந்தார் (சங்கீதம் 116: 18, 19).

ஆராதனை இயற்கையானது, ஆனால், மிக கடினமானது. வாழ்க்கையின் அங்கமாக இருக்கின்ற ஏதோ ஒன்று ஏன் கடினமானதாக இருக்க வேண்டும்? ஏனென்றால், ஆராதனை முழு மனிதனையும் (உடல், மனம் மற்றும் ஆவி) உள்ளடக்கியது. பொதுவாக மனதையும், உடலையும் ஈடுபடுத்துகிற வேலைகளை செய்வது சுலபமானது, உதாரணமாக, புல்தரையை செதுக்கிவிடுவது, இலைகளை ஒரு பக்கமாக

சேர்ப்பது, வீட்டை சுத்தம் செய்வது, டைப் அடிப்பது போன்றவைகள். ஆனால், ஆராதனை ஒரு மனிதனு டைய ஆவியை ஈடுபடுத்துகிறது. ஆராதனையில் நம் முழு இருதயத் தையும் செலுத்த வேண்டும் (யோவான் 4:24).

தேவனுடைய ஜனங்கள் ஆராதனையில் பங்கு பெறுவதற்கு ஒரு கோயில் மணி எழுப்பும் ஓசை அழைப்பை விட மேலான அழைப் பைக் கேட்கிறார்கள். ஒரு தேவனு டைய பிள்ளையை, சக பரிசுத்த வான்களுடன் கூடி தேவனைப் போற்றித் துதித்து ஆராதிக்க, ஆவிக் குரிய ஆசை தான் தூண்டுகிறது. இருதயத்திற்குள் இருக்கும் பாடலைப் பாட வேண்டும் என்கிற ஆசை, தேவ னுக்கு ஒரு வெகுமதியை கொடுக்க வேண்டும் என்கிற ஆசை, சேவை செய்ய வேண்டும் என்கிற ஆசை இவைக ளெல்லாம் தான் ஒரு தேவ னுடைய பிள்ளையை ஆராதிக்க வைக்கிறது. நம்முடைய ஆராதனை நேரம் வியாபாரிகள் நிறைந்த விற்ப னைக் கூடம் போலோ அல்லது எதிர் எதிர் கோஷங்களை எழுப்புகிற விளையாட்டு அரங்குகள் போலோ அல்லது போட்டி மனப்பான்மை நிறைந்த ஒரு கூட்டம் போலவோ மாறிவிட ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து, குனிந்து முழுங்காற்படியிடக்கட வோம் வாருங்கள் (சங்கீதம் 95:6).

**ஆராதனை என்றால் என்ன?**

கிறிஸ்தவ ஆராதனை என்பது நம் சிருஷ்டிகருக்கு செலுத்தப்படும் ஒரு மரியாதை செயலாகும். அதன் பொருள், பணிந்து சாஷ்டாங்கமாய் காலில் விழுந்து, தேவனுக்கு மரியா தை செலுத்துவது என்பதாகும். ஆராதனை என்பது தேவனுடைய பரிசுத்தத்தால் நம்முடைய மன சாட்சியை உயிர்ப்பிக்க வேண்டும் இதன் மூலம், தேவனுடைய சத்தி யத்தால் மனதைப் போஷிக்க முடியும். தேவனுடைய கற்பனைகளால் சுத்திகரிக்கப்பட முடியும். தேவனை நேசிக்க இருதயத்தைத் திறக்க முடியும். தேவ சித்தத்திற்காக நம்மை ஒப்புக் கொடுக்க முடியும்.

**ஆராதனை என்பது தேவனுடைய கவனத்தை நாம் ஈர்த்து நம்முடைய கவனத்தை அவருக்குக் கொடுப்பதாகும்.** இயேசு தன்னுடைய ஊழியத்தில் தன் மதிப் புள்ள நேரத்தை கிணற்றருகே நின்ற பெண்ணின் கவனத்தை ஈர்க்க செலவு செய்தார் (யோவான் 4). அவள் அந்த பிரச்சனையை தவிர்க்க முயற்சி செய்தாள், ஆனால், இயேசு தொடர்ந்து விடாமுயற்சியுடன் அவ ளை தேவனுடைய உறவில் மறுபடி யும் கொண்டு வந்தார்.

ஆராதனை நினைவு கூருவ தாயிருக்கிறது. பஸ்கா ஆராதனை யானது யூதர்களுக்கு தேவன் செய்த எல்லாவற்றையும் நினைவு கூரும்

படியாக கொடுக்கப்பட்டது. கர்த்தரின் பந்தி நமக்கு ஒரு நினைவு கூருத லாக உள்ளது. நம்முடைய மோச மான ஆராதனை மோசமான நினை வு கூருதலின் விளைவாயிருக்கிறது. இதன் காரணமாகவே இரண்டு பேர் ஓர் ஆராதனையில் கலந்து கொண் டாலும் ஒருவர் ஊக்கப்படுத்தப்படு கிறார், மற்றொருவருக்கு அலுப்புத் தட்டுகிறது. ஒருவர் இயேசு சிலுவை யில் செய்த தியாகத்தை மறந்து விட்டார்.

**ஆராதனை தேவனோடும், தேவனுடைய குடும்ப அங்கத்தினர் களோடும் கொள்ளும் ஐக்கியமா யிருக்கிறது.** கர்த்தருடைய ஜனங்கள் பந்தியில் பங்கு பெறும் போது பரஸ்பர ஐக்கியம் கொள்கிறார்கள். கர்த்த ருடைய குடும்பத்தார் கர்த்தர் செய்த எல்லாவற்றின் மதிப்பை உணரும்படி யாக, கர்த்தருடைய பந்திக்காகக் கூடி வரும்படி, கிறிஸ்த வர்கள் அந்தத் தருணத்தை எதிர் நோக்குகிற வர்களாக இருக்க வேண்டும்.

**ஆராதனை தேவனுக்கு செய்யப்படும் சேவையாயிருக் கிறது:** எனக்குப்பிறன் யார்? என்கின்ற மாபெரும் கேள்விக்கு பதிலளிக்கும் போது இயேசு தேவையில் இருப்பவர்க ளுக்கு சேவை செய்ய வேண்டும் என்று போதித்தார் (லூக்கா 10:29). ஆசாரியனும், லேவியனும் ஆராத னையில் உயர்ந்து காணப்பட்டார் கள், ஆனால், சேவை செய்வதில் தாழ்ந்து காணப்பட்டார்கள். ஒரு வார நீதியுள்ள வாழ்க்கைக்குப் பதிலாக ஒரு மணி நேர ஆராதனை யை சமப்படுத்த முயற்சி செய்கிறவன் முட்டாளாக இருக்கிறான். ஆனால், உண்மையான ஆராதனை, உத வாக்கரை சபை அங்கத்தினரை பொறுப்புள்ள ஒரு வேலைக்காரனாக மாற்றுகிறது. மனிதன் எதை ஆராதிக் கிறானோ அதைப் போலாகிறான். நான் தேவனை ஒழுங்காக ஆராதித் தால் நான் தேவனைப் போல் மாறு வேன். அவருடைய குமாரனின் சாய லைப் பெற்றுக் கொள்வேன். (II கொரி. 3:18). அவருடைய பணி என் பணியாகும்.

**ஆராதனை துதித்தலாயிருக் கிறது.** கிறிஸ்தவம் துதியின் சிறகுகளில் சுமந்து செல்லப்படுகிறது. பாவமன்னிப்பில் தேவனுடைய கிருபையை அனுபவித்தவர்கள் தங்கள் இருதயங்களில் பாடல் களையும், உதட்டில் துதிகளையும் வைத்திருக்கிறார்கள். சபையில் யாருக்கெல்லாம் வருகைப் பிரச்சனை இருக்கிறதோ அவர்களுக் கெல்லாம் ஆராதனை பிரச்சனையும் இருக்கிறது.

அர்த்தமுள்ள ஆராதனைக்கு அநேக ஆவிக்குரிய மதிப்புகள் இருக் கின்றன. வாழ்க்கையானது, நம்மு டைய ஆவிக்குரிய ஆற்றலைக் குறைக்கும் சில்லறைக் காரியங்கள்,

எரிச்சல்கள், துக்கங்கள் மற்றும் கலைந்துபோன கனவுகள் போன்ற அன்றாட நிகழ்வுகளால் நிறைந்திருக் கிறது. ஆராதனை ஒரு வழங்கல் கூடமாக, மறுபடியும் எரிபொருளை நிரப்பும் ஓர் இடமாக, தாகமுள்ள ஆத்துமாக்களுக்கு ஒரு பாலைவனச் சோலையாக இருக்கிறது. ஆராத னை தேவன் மீது நாம் கொண்டி ருக்கும் பக்தியை ஆழப்படுத்தும். தேவனிடத்தில் கிட்டிச் சேராமல் இயேசுவின் மரணத்தை யாரால் தியானிக்க முடியும்? ஆச்சரியமான கிருபை என்றும் உம்மண்டை தேவ னே என்றும், தேவனிடம் கிட்டிச் சேராமல் யாராலும் பாட முடியுமா?

அர்த்தமுள்ள ஆராதனை நம்முடைய உபதேசத்தைப் பாதுகாக் கிறது. உபதேசம், ஒழுக்க நெறிகள் போன்றவற்றையும் மற்றும் ஆராத னையையும் பிரிக்க முடியாது. ஆராதனை உபதேசத்தைத் தாங்கு கிறது. தேவனுடைய ஜனங்கள் ஆராதிப்பதை விட்டுவிட்டால் அவர் கள் சத்தியத்திற்காக நிற்பதை விட்டு விடுவார்கள், அதைப்போல எப்படி நீதியாக வாழ்கிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்படுவதையும் விட்டு விடுவார்கள்.

ஒரு கிறிஸ்தவன் தேவனை தன்னுடைய இருதயம், மனம் மற்றும் ஆவியோடு ஆராதிக்கும் போது, தன் ஆத்துமாவிலிருந்து பாரத்தை இறக்கி வைக்க முடியும். நம் பயங்கள், கவலைகள் மற்றும் குற்றங்கள் நம்மை பாரப்படுத்து கின்றன. அவைகள் நம் சமாதானத் தையும், சந்தோஷத்தையும், நம் சரீரங்களை அழிக்கக் கூடிய ஆற்றல் எரிகளாக இருக்கின்றன. ஆராதனை யில், நம் பாரங்களை இறக்கி வைக்க முடியும் (1 பேதுரு. 5:7).

நாம் விசுவாசத்திலிருந்து விழுந்து போகாதபடி ஆராதனையில் இருக்கும் வல்லமை நமக்கு உதவு கிறது (எபிரெயர் 10:22,25). எபிரெயர் பத்தாம் அதிகாரத்தில் நாம் காணும் விசுவாசத்தில் உறுதியாயிராத அந்த யூதர்கள் கிறிஸ்துவினிடத்தில் கிட்டிச் சேரும்படியாகவும், நம்பிக்கையில் உறுதியாயிருக்கவும், அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும் படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடி வருதலை விட்டுவிடாமல் இருக்கவும் அழைக்கப்பட்டார்கள். இதுபோன்ற வசனப்பகுதிகள் எத்த னை சகோதரர்களை வழிவிலகிச் செல்லுதலிருந்து நிறுத்தியிருக்கிறது என்பது தேவனுக்கு மட்டுமே தெரியும். ஆராதனையில் பங்குபெறு வதினால், கிறிஸ்தவர்கள், கிறிஸ்து வுக்குள் ஒரு நங்கூரத்தைக் காண முடியும். மேலும், இது அவர்கள் பின் வாங்கிப் போவதைத் தடுக்கும். முடிக்கும் தருவாயில் இருப்பதால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனை

உண்மையாக ஆராதிக்கக் கூடுத லான முயற்சி எடுக்க வேண்டும் என்று உற்சாகப் படுத்துகிறேன். இது நம் பாவங்களினிமித்தம் தேவனு டைய அன்புக்கு நாம் பாத்திரராக இல்லாவிட்டாலும் கூட தேவன் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை உணர நம் இருதயங் களை உற்சாகப்படுத்தும். ஆயினும், அவர் தம்முடைய குமாரனை நம் பாவங்களுக்காக மரிக்க இந்த உலகத் திற்கு அனுப்பினார்.

உண்மையான ஆராதனை தேவனுடைய வார்த்தைக்கு ஆவிக் குரிய பிரகாரமாக குருடாயிருக்கிற நம்முடைய கண்களைத் திறக்கும். நம்முடைய கண்கள் திறக்கப்படும் போது தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதன் மூலமாகவும், போதிக்கப்படுவதன் மூலமாகவும் அதிக அதிகமான மாபெரும் தேவனு டைய சத்தியங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன.

தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பது நம் வருங்கால உயிர்த்தெழுதலுக்கான நம்முடைய நம்பிக்கையை அதிகரிக் கிறது. மரணம் பட்சபாதம் பார்ப்பதில் லை. புவிஈர்ப்பு சக்தியை நம்மால் எதிர்க்க முடிந்தாலும் கூட மரணத் தை நம்மால் எதிர்க்க முடியாது. ஆராதனையில் தேவன் தம்முடைய குமாரன் மரித்தோரிலிருந்து எழுப்பி னார் என்று நாம் நினைப்பூட்டப்படுகி றோம். அதே வல்லமையால் தே வன் மரித்தோரிலிருந்து நம் சரீரங் களை உயிரோடு எழுப்புவார்.

மனிதன் என்றும் மேல் நோக் கிப் பார்ப்பவன், அவன் தேவ னுடன் சரியான உறவில் இருக்கும் வரை திருப்தியடைவதில்லை. இந்த ஏக்க மானது நம் கண்களை, இருதயத் தை, ஆத்துமாவை ஆராதனையில் தேவனை நோக்கி ஏறெடுக்கும் போது திருப்தியாக்குகிறது. நம் உடைந்த இருதயங்களுக்கு ஆறுதல் ஆராத னையில் தான் கண்டடைய முடியும். நாம் தேவனிடத்தில் நம்முடைய இருதயங்களை ஊற்றும் போது நம் முடைய ஜீவியங்களுக்கான உந்தும் சக்தியை நாம் அனுபவிக்க முடியும். நாம் அர்த்தமுள்ள ஆராதனையில் ஈடுபடும் போது தேவனைப் பிரியப்ப டுத்துகிறோம் என்கிற திருப்தியிருக் கும்.

இந்த ஆசீர்வாதங்கள் எல்லாம் நமக்குக் காத்திருக்கிறபடியால் கர்த்த ருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் (சங்கீதம் 122:1).

நம்மை உண்டாக்கின கர்த்த ருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து, முழங்காற்படியிடக்கட வோம் வாருங்கள் (சங்கீதம் 95:6).

பிரத்யேகமானது



# நான் யார்?

## WHO AM I

கீழ்க்காணும் வசனங்களை வைத்து அந்த வேதாகம கதாபாத்திரம் யார் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. என் தகப்பனார் ஒரு விக்கிரக ஆராதனைக்காரராக இருந்தார் (ஒரு வேளை அவர் நானோர் என்கின்ற சந்திரக் கடவுளை வணங்கியிருக்கலாம், அந்த கடவுளுக்கு பெரும்பாலும் மனித பலிகள் செலுத்தப்பட்டன) எனவே, நான் விசுவாசத்தில் வளர்க்கப்படவில்லை (யோசுவா 24:2)

2. எனக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தார்கள். (ஆதியாகமம் 11:26;20:12)

3. என்னுடைய சொந்த இடம், ஊர் என்னும் கல்தேயர் தேசத்துப் பட்டணம், ஆனால், என் வாழ்க்கையின் பெரும் பகுதியை கானான் தேசத்தில் நாடோடியாகவும், மந்தை மேய்ப்பவனாகவும் செலவிட்டேன் (ஆதியாகமம் 11:28; 13:14-18).

4. 25 ஆண்டுகளாக நானும் என் மனைவியும் எங்கள் உறவு பற்றி பொய் சொன்னோம், ஏனென்றால், நான் அவள் கணவன் என்பது தெரிந்தால் என் உயிர் பறிக்கப்படும் எனபயந்தேன் (20:13).

5. நான் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்துத் திரும்புகிறபோது, உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த மெல்கிசேதேக்கு என்னை ஆசீர்வதிக்க வந்தான் (14:17-20).

6. தேவன் எனக்கு குமாரனை வாக்குத்தத்தம் பண்ணி அவன் மூலமாக பெரிய தேசங்கள் எழும்பும் என வாக்குரைத்து என்னோடு உடன்படிக்கை செய்து கொண்ட போது, அவர் என் பெயரையும், என் மனைவி பெயரையும் மாற்றினார் (17:1-19).


7. அந்நியர்களை உபசரிக்கிற காரியத்தில் மம்ரேயின் சம பூமியில் ஒரு முறை கர்த்தருக்கும், அவருடைய இரண்டு தேவதூதர்களுக்கும் இறைச்சியும், அப்பமும், வெண்ணையும், பாலும் கொடுத்தேன் (18:1-8).

8. சோதோம், கொமொராவை தேவன் அழிக்கத் திட்டமிட்ட போது குறைந்தது பத்து நீதிமான்கள் இருந்தால் அந்த பட்டணங்களைத் தப்புவிக்க வேண் டும் என தேவனை கேட்டுக் கொண் டேன் (ஆதியாகமம் 18,19).

9. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் விதமாக செத்துப் போன சரீரத்திலிருந்து குமாரனை உருவாக்கியவர், அவனை மரணத்திலிருந்து உயிரோடே எழுப்ப முடியும் என விசுவாசித்தேன் (ஆதி. 22).

10. நான் விசுவாசத்தின் தகப்பன் என்று அழைக்கப்பட்டேன், பூமியிலுள்ள வம்சமெல்லாம் என்னுடைய சந்ததி மூலமாய் ஆசீர்வதிக்கப்படும் என்று எனக்கு வாக்குத் தத்தம் செய்யப்பட்டது (கலாத்தியர் 3:7). †

பதில் 75 ம் பக்கம்



# விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமைக்காக தெய்வீகத் திட்டம்

## *The Divine Plan For Unity Among Belivers*

**Reggie Guanasundaram**

என்னுடைய தேசத்தில் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கு இருக்கும் மாபெரும் தடை தேவனையும், இயேசு கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியானவரையும் விசுவாசிப்பவர்கள் மத்தியில் காணப்படும் எண்ணற்ற பிரிவினைகள் தான், இதைப்பற்றி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் 17:20,21 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஜெபத்தில் சொல்லியிருக்கிறார். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிற வர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிற தற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

நம் கர்த்தர் ஒருபோதும் வீணாக ஜெபித்ததேயில்லை. தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்கும்படியாக ஜெபித்தார். இந்த

ஜெபத்திற்கான பதில், அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசு சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த பிறகு கி.பி. 33-ல் பெந்தெகொஸ்தே நாளில், முதல் முறையாக மன்னிப்பிற்கான நிபந்தனைகளை அறிவித்தார். அப்போஸ் தலருடைய நடபடிகள் 2:41:47 வசனங்களில் ஏறக்குறைய 3000 யூதர்கள் கீழ்ப்படிந்து சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

அதேவிதமாக ஒற்றுமைக்காக நம் கர்த்தரின் ஜெபத்திற்கு பதில் அளிக்கப் படும் விதமாக ஒற்றுமைக்காக வேதாகமத்தில் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அது எவ்வித சந்தேகமும், கேள்வியுமின்றி பின்பற்றப்பட்டிருக்கிறது, கீழ்ப்படி யப்பட்டிருக்கிறது.

**ஒற்றுமைக்கான திட்டம் என்ன?**

A I கொரிந்தியர் 1:10-ல் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியர் களுக்கு எழுதும்போது, " சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர் களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் " இந்த வேண்டுகோளில் பவுல் பிரிவினையைக் கண்டிப்பதோடு மட்டும் விட்டு விடாமல் " ஒரே காரியத்தைப் பேசவும் " என்று சொல்லி அதற்கான தீர்வையும் கொடுத்துள்ளார்.

எல்லாவற்றையும் விட முக்கியமான கேள்வி என்னவென்றால், நாம் எல்லோரும் எப்படி ஒரே காரியத்தைப் பேச முடியும்? I பேதுரு 4:11-ல், பேதுரு இந்தக் கேள்விக்கான பதிலைக் கொடுக்கிறார், ஒருவன் போதித்தால் தேவனு டைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென். ஆகவே, தேவன் எங்கெல்லாம் பேசியிருக்கிறாரோ அங்கெல்லாம் நாம் பேசி, தேவன் எங்கெல்லாம் அமைதியாயிருக்கிறாரோ அங்கெல்லாம் நாம் அமைதியாயிருந்தால் நாம் எல்லோரும் இசைந்திருப்போம். பிணக்கம் மற்றும் பிரிவினை போன்றவைகள் வேதாகமம் போதிக்கிறவைகளிலிருந்து வருவதில்லை. ஆனால், ஒற்றுமை வேதாகமம் போதிக்கிறவைகளிலிருந்து வருகிறது.

B. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியர் 3:16-ல், ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக என்று போதிக்கிறார். ஒரு சட்டத்தை ஏற்றுக்கொள்வதும் கடைபிடிப்பதும் முக்கியத்துவம் வாய்ந்தது. உலக முழுவதும் உள்ள மக்கள் கொடுக்கப்பட்டுள்ள சட்டங்களை கடைப்பிடிக்கிற

படியால் உலகப்பிரகாரமான காரியங்களை ஒற்றுமையாக நடத்துகின்றனர். எடை அளவுகள், நீளம் மற்றும் வேறு அளவுகோல்கள் நம்முடைய அனுதின ஜீவியத்தை ஆளுகை செய்கின்றன. அதே விதமாக எல்லா ஜனங்களும் சர்வ வல்லமையுள்ள தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற சட்டத்தை ஏற்று அதைக் கடைப்பிடித்தால் என்ன அற்புதமான, ஒற்றுமையான இடமாக இந்த உலகம் இருக்கும்!

C. அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயர் 3:17-ல் இவ்விதமாக சொல்லியிருக்கிறார். வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். அநேகர் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் இயேசுவின் நாமத்தினாலே செய்வதென்றால் என்ன என்று குழம்பிக் கொள்கிறார்கள். இது இயேசுவின் அதிகாரத்தில் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று பொருள்படும். ஆவிக்குரிய காரியங்களில் எல்லோரும், இயேசு கிறிஸ்து அதிகாரங் கொடுத் திருக்கிற காரியங்களை மட்டும் பேசவும், செய்கிறதுமாக இருந்தால் அது பூரண உடன்பாடாயிருக்கும்.

தேவனுடைய வார்த்தையோடு எதையும் சேர்க்கவோ, எடுத்துப் போட வோ நமக்கு கட்டளை கொடுக்கப்படவில்லை. இந்த எச்சரிக்கை வேதாகமத்தில் மூன்று வேறுபட்ட இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. வேதாகமத்தின் ஆரம்பத்தில் (உபாகமம் 4:2)
2. வேதாகமத்தின் மத்தியில் (நீதிமொழிகள் 30:6)
3. வேதாகமத்தின் இறுதியில் (வெளி. 22:18,19)

வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள வசனப் பகுதி யின்படி தேவனுடைய வார்த்தையோடு நாம் எதையாவது கூட்டினால் இந்தப் புத்தகத்திலே எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் நம்மேல் கூட்டுவார், நாம் எதையாவது எடுத்துப்போட்டால் ஜீவ புத்தகத்திலிருந்து தேவன் நம்முடைய பெயரை எடுத்துப் போடுவார்.

கடைசியாக, I கொரிந்தியர் 4:6-ல், எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நாம் வாசிக்கிறோம். மற்றுமொரு ஆங்கில மொழியாக்கத்தில் வேதவாக்கியங்களில் என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதை மட்டும் பின்பற் றுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

**மனிதன் அறிந்து கொள்ள வேண்டும்**

**I தேவன் சம்மந்தமாக**

a) மனிதர்களையும், மற்ற எல்லாவற்றையும் தேவன் சிருஷ்டித்தார் என்று அறிந்து கொள்ள வேண்டும் (ஆதியாகமம் 1:1,31).

b) சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது (கொலோசெயர் 1:16).

c) அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப். 17:28)

d) எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோ 1:17)

e) சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார் (எபிரெயர் 1:3)

**II** ஒரு சிருஷ்கராக மனிதனுக்கு என்ன தேவை என்று தேவனுக்கு நன்றாகத் தெரியும்.

**III** ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார் (II பேதுரு 1:3)

மனிதனுக்கான தேவனுடைய போதனைகள் மனிதனை தேறினவனாக்கும் (II தீமோத்தேயு 3:16,17)

**V** தேவனுடைய வார்த்தை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் உறுதிபடுத்தப்படும் (எபிரெயர் 2:4)

**VI** தேவனுடைய வார்த்தை ஒரு விசுவாசிக்கு ஒருமுறை ஒப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. (யூதா 3)

பின்பு, ஏன் மனிதன் தேவன் நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிற போதனைகளோடு கூட்டவோ, எடுத்துப்போடவோ விரும்புகிறான் அல்லது ஏதாவது ஒரு விதத்தில் அவருடைய வார்த்தையை ஏன் மாற்றுகிறான்? தேவன் தம்முடைய வார்த்தையின் தன்மையைப் பற்றி வெளிப்படையாக சொல்கிறார்.

1. தேவனுடைய வார்த்தை ஒருபோதும் ஒழிந்துபோவதில்லை (மத்தேயு 24:35; சங்கீதம் 119:89)
2. தேவனுடைய வார்த்தைதான் நம்மைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும் (யோவான் 12:48).

வேதாகமம் வெளிப்படையாக தெரிவிக்கும் காரியங்களுக்கு விரோதமாக, மனிதன் அதிருப்தியுடன் கீழ்க்காணும் காரியங்களை உணரத் தவறுகிறான்:

1. மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் (நீதிமொழிகள் 14:12).

2. மனிதன் தன் சுய எண்ணத்தினாலோ அல்லது மனுஷருடைய போதனைகளை பின்பற்றுவதினாலோ செம்மையான வழியில் தன்னைக் கண்டடையும் நம்பிக்கையைப் பெற்றிருக்க முடியாது. எரேமியா 10:23-ல் நாம் வாசிப்பவைகளை வைத்து இதை உறுதிப்படுத்த முடியும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

இப்போது எழுகிற கேள்வி என்னவென்றால், மனிதனால் தன்னுடைய நடைகளை எப்படி நடத்தமுடியும்? இதற்கான பதிலை நாம் IIகொரிந்தியர் 5:6-ல் காண்கிறோம். நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.

மனிதன் விசுவாசித்து நடக்க வேண்டிய இந்த விசுவாசம் என்ன? ரோமர் 10:17-ல் தேவனுடைய வார்த்தையை கேட்பதினாலே விசுவாசம் வரும் என்று விசுவாசிக்கிறோம். எனவே, தேவனுடைய வார்த்தையின்படி நடப்பது மனிதனுடைய தலையாயக் கடமையாயிருக்கிறது. இயேசு தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்த நாட்களிலேயே இதைச் சொல்லிவிட்டார், மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் (மத்தேயு 4:4) என்று.

எல்லா மனுஷரும் தேவன் எங்கே பேசியிருக்கிறாரோ அங்கே பேசினால், நம் கர்த்தர் கொடுத்திருக்கிற கற்பனைகளின்படி வாழ்ந்தால், கர்த்தருடைய அதிகாரத்தின்படி எல்லாவற்றையும் சொன்னால், செய்தால் தேவனுடைய வார்த்தையோடு ஒன்றையும் கூட்டாமல், எடுத்துப்போடாமல் இருந் தால், எழுதப்பட்டிருக்கிறவைகளுக்கு மிஞ்சி எண்ணாதிருந்தால். தேவனி டத்தில், இயேசு கிறிஸ்துவினிடத்தில், பரிசுத்த ஆவியினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிற எல்லா விசுவாசிகளிடத்திலும் நாம் ஒற்றுமையாக இருக்க முடியும். நாம் நம்முடைய ஒரே பிதாவுக்கு பிள்ளைகளாயிருக்க முடியும் (கலாத்தியர் 3:56; மல்கியா 2:10). அவருடைய ஒரே குடும்பத்தில் நாம் அங்கத்தினர்களாக இருக்க முடியும் (I தீமோத்தேயு 3:15), அந்தக் குடும்பம் நம் கர்த்தரும், இரட்சகருமாய் இருக்கிற இயேசு கிறிஸ்துவினால் கட்டப்பட்டது (எபேசியர் 4:4-6, மத்தேயு 16:18). அதற்கு அவர் ஒருவரே அஸ்திபாரமாயிருக்கிறார் (I கொரிந் தியர் 3:11). அதற்கு அவரே தலையாயிருக்கிறார் (கொலோசெயர் 1:18).

மனிதனுடைய திட்டங்கள் எல்லாம் தோற்றுப்போகும். ஆனால், ஒற்றுமைக்கான தேவனுடைய திட்டம் ஒருபோதும் தோற்றுப்போவதில்லை என்பதை நம்முடைய மனதின் மேலே வைப்போம். தேவன் தம்முடைய திட்டத்தை மனிதனுக்கு கொடுத்திருக்கிறபடியால் அதை நிறைவேற்ற நாம் வேலை செய்வோம். †

G
U
I
L
T
Y
OR



# FOR GIVEN ?

# குற்ற உணர்வுடன் இருக்கிறீர்களா அல்லது மன்னிக்கப்பட்டு விட்டீர்களா?

**Frances Parr**

நம்மில் யார் அவ்வப்போது குற்ற உணர்வால் பாதிக்கப்படாமல் இருப்பது? தெரிந்தவர்கள், நண்பர்கள், மற்றும் குடும்பத்தார் குற்ற உணர்வுக்கான காரணங்களை கொடுக்கிறார்கள். மக்கள் நம்மால் நிறைவேற்ற முடியாத, நிறைவேற்ற விரும்பாத காரியங்களை நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார்கள். சில வேளைக ளில் விற்பனையாளர்கள் தங்கள் பொருள்களை விற்க குற்ற உணர்வை பயன்படுத்துகிறார்கள். அவர்கள் நீங்கள் விலையுயர்ந்த புத்தகங்களை வாங்கத் தூண்டப்படும்படி உங்கள் குழந்தையின் கல்வியைப் பற்றி உங்களுக்கு கவலையில்லையா? என்று உங்களைப் பார்த்துக் கேட்பார்கள்.

கிறிஸ்தவர்கள் குற்ற உணர்வால் பாதிக்கப்படுபவர்கள். அநேகர்

இதற்கு முன்பு வாழ்ந்த வாழ்க்கை பெரு மைப்படும்படியாக இருக்க வில்லை. கிறிஸ்துவைப் போல் வாழ கடினமாக முயற்சி செய்பவர்கள் கூட சோதிக்கப்பட்டு தேவனுக்கு பிரிய மில்லாத காரியங்களை செய்வார்கள்.

குற்ற உணர்வு என்பதற்கு மொழி அகராதி, ஏதோ ஒரு நாணயக் கேடான செயலை செய்து விட்டு அதற்கு பொறுப்பேற்பது என்று அர்த்தம் கொடுக்கிறது. மேலும், ஏதோ ஒரு தவறான காரியத்தை செய்து விட்டு அதற்காக வருத்தப்படுவது என்று பொருள்படும்.

உண்மையாகவே, இந்த உலகத்தில் நீண்ட நாட்கள் வாழ்ந்த எந்த மனிதனும் தவறு செய்வதிலி ருந்து தப்பித்துக் கொள்வதில்லை. இது மனித இயல்பு. தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் மக்களுக்கு குற்ற உணர்வு என்பது ஓர் இயற்கை யான பதிலாயிருக்கிறது.

சரி, தவறு என்பவைகளுக்கு இந்த உலகம் அளவுகோல்களை வைத்திருக்கிறது, குற்றத்தின் அள விற்கேற்ப தண்டனை மாறுபடும். உதாரணமாக, இன்னொரு மனித உயிரை எடுப்பது அல்லது கொலை செய்வது மாபெரும் அத்துமீறல். அதற்கு மரண தண்டனை கொடுக்கப் படுகிறது. ஆனால், மற்றவர்களு டைய உணர்வுகள் புண்படக்கூடாது என்பதற்காக சொல்லப்படும் பொய் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படுவ தில்லை, சில வேளைகளில், அது நகைச் சுவையாக மாறி விடுகிறது. பழங்கால அமெரிக்காவில் கால்நடை களை திருடுவது மரண தண்டனைக் குரிய குற்றமாகும், சீட்டு விளையாட் டில் ஏமாற்றுபவனை சுட்டு வீழ்த்து வது அவனுக்கு உண்டான பலனாக கருதப்பட்டது.

தேவன் பாவத்தை வித்தியாச மாகப் பார்க்கிறார். பாவத்தில் சிறியது, பெரியது என்றெல்லாம் கிடையாது, ஆனால், எல்லா பாவங்களுக்குமே அவருக்கு அருவருப்பானது. ரோமர் 1:29,30 வசனங்களில் பவுல் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை, பெருமை போன்றவைகளை கொலை, தேவனை வெறுத்தல் போன்றவைகளுக்கு சமமாக பட்டிய லிடுகிறார். இந்தப் பூமியில் ஞானி களுக்கெல்லாம் ஞானியாக இருந்த சாலொமோன் நீதிமொழிகள் 6:16,17 வசனங்களில் இவ்விதமாகச் சொல் கிறார். ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள் அவையா வன; மேட்டிமையான கண், பொய் நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை. துராலோசனை யைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி,

சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் ஆகிய இவை களே.

தேவனுடைய உணர்வுகள் இவ்விதமாக இருந்த போதிலும் தேவன் மன்னிக்கிறார். பெந்தெ கொஸ்தே நாளில் பேதுரு தான் செய்த பிரசங்கத்தில், எருசலேமில் கூடியிருந்த திரளான ஜனங்களைப் பார்த்து, அவர்கள் நீண்ட நாட்கள் காத்திருந்த இரட்சகரை தேவன் அனுப்பியிருந்தார் என்று சொன் னார். ஆனால், ஜனங்கள் இயேசு வை அடையாளம் கண்டுகொள்ளா மல் சிலுவையில் அறைந்து விட்டார் கள். அவர்களை இரட்சிக்க வந்த தேவனுடைய குமாரனையே அவர் கள் கொலை செய்ததை கற்பனை செய்து பாருங்கள். பாவத்தைக் குறித்து அவர்கள் கண்டித்து உணர்த் தப்பட்டபோது அவர்களுக்கு எப்படிப் பட்ட பயம் மற்றும் திகில் இருந்திருக் கும் என்பதை உங்கள் மனக்கண் களில் காணுங்கள். அவர்கள் உடனடி யாக நாங்கள் என்ன செய்ய வேண் டும்? என்று கேட்டார்கள். இது ஒரு நம்பிக்கையற்ற நிலையாகத்தான் இருந்திருக்கிறது. நீங்கள் மனந் திரும்பி ஞானஸ்நானம் பெறும்போது உங்கள் பாவம் மன்னிக்கப்படும் என்பது பேதுருவின் பதிலாயிருந் தது. அவர்களுடைய பாவம் பயங்கர மாக இருந்த போதிலும் அதற்கு சுபலமான தீர்வு இருந்தது.

தர்சு பட்டணத்தைச் சேர்ந்த சவுல் சுற்றிலும் இருந்த கிறிஸ்தவர் களைத் தேடி முழு குடும்பத்தையும் சிறையில் அடைத்து கொலை செய் தான். அவர் தன்னைப் பற்றி சொல் லும் போது, பாவிகளில் பிரதான பாவி என்றார் (1 தீமோத்தேயு 1:15). ஆயினும், தேவன் அவரை எடுத்து, மன்னித்து உலகம் இதுவரை அறிந் திராத வல்லமையான பிரசங்கி யாராகவும், எழுத்தாளராகவும் மாற்றி னார். குற்ற உணர்வோடு அவர் புரண்டு கிடக்காமல் பவுலாக பெயர் மாற்றப்பட்ட சவுல் பிலிப்பியர் 3:13, 14ல் இவ்விதமாகச் சொல்கிறார். "சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணு கிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக் காக இலக்கை நோக்கித் தொடரு கிறேன் ".

குற்ற உணர்வு நாம் வாழ்க் கையில் முன்னேறும்படி சில மாற்றங்களை, சீர்திருத்தங்களை செய்யும்படி நம்மைத் தூண்டும் போது மட்டுமே பிரயோஜனமுள்ள தாயிருக்கிறது. இப்படிப்பட்ட உணர் வுகளை மன்னிக்கப்பட்ட பிறகும்; காலங்கடந்த பிறகும் மனதில்

வைத்து வைப்பது எவ்வித பலனை யும் கொடுக்காது என்பது மட்டுமல்ல, அது சரீரத்திற்கு தீங்கையும் உண்டாக் கும். மேலும், கிறிஸ்தவ வாழ்வில் நம்மை செயலிழக்கச் செய்யும்.

நாமெல்லாரும் அநேக விஷ யங்களில் தவறுகிறோம் என்று யாக்கோபு 3:2 சொல்கிறது. நாம் அப்படித் தவறுவோம் என்பதை தேவன் அறிந்திருந்தபடியால் முதல் மனிதனை அவர் உண்டாக்கு வதற்கு முன்பு மீட்பின் திட்டத்தைத் தீட்டியிருந்தார். வேதத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிற ஒவ்வொரு தனிப்பட்ட சம்பவத்திலும் தனிப்பட்ட நபர்கள் தேவனுக்குப் பிரியமில்லாத காரி யங்கள் செய்ததும் பதிவு செய்யப்பட்டி ருக்கிறது. மனந்திரும்பி, தேவனு டைய மன்னிப்பைக் கேட்டவர்கள் அதைப் பெற்றுக் கொண்டிருக்கிறார் கள்.

தாவீது பத்சேபாளுடன் விபச் சார உறவில் ஈடுபட்டதன் விளை வாக பிறந்த குழந்தை இறந்தவுடன் துக்கமும், மிகுந்த வருத்தமும் நிறைந்தவராய் காணப்பட்டார். ஆனால், இன்னும் நம்பிக்கை இருந் தபடியால் அவர் உபவாசித்து ஜெபித் தார். குழந்தை இறந்தபோது, அவர் எழுந்து, தன் உடைகளை மாற்றிக் கொண்டு தேவனைத் தொழுது கொண்டார். தன்னுடைய நடத்தை யைக் குறித்து கேள்வி கேட்கப்பட்ட போது அவர் இவ்விதமாக விளக்கம் அளித்தார். அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்க வேண்டி யது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப்பண்ணக்கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை என்றான் (II சாமுவேல் 12:23). தாவீது தன்னால் முடிந்தவரை எல்லாவற்றையும் செய்தார்.

பெந்தெகொஸ்தே நாளில் தேவன் தம்முடைய குமாரனைக் கொலை செய்த ஜனங்களை மன்னித்தது போல, நீங்களும், நானும் செய்த எந்த பாவத்தையும் மன்னிப்பார். நாம் முதலில் இயேசு வை ஏற்றுக்கொண்ட பிறகு, மனந் திரும்பி தேவனிடத்திலிருந்து மன்னிப்பைக் கேட்க வேண்டும். தேவனுடைய கிருபை நம்மை மூடு கிறது. அவர் நாம் இது வரை செய்த எல்லாவற்றையும் மறந்து விடுகிறார். தேவன் முற்றிலுமாக மறந்து விட்ட ஏதோ ஒன்றைக் குறித்து நாம் ஏன் நம் மனதை வேதனைப்படுத்திக் கொள்ள வேண்டும்?.

எனவே, நாம் பவுலைப் பின் பற்றுபவர்களாக இருப்போம் - அதா வது பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி பந்தயப் பொருள் – அதாவது, அவருடன் கூடிய நித்திய ஜீவனுக்காக இலக்கை நோக்கித் தொடருவோம்!. †

---

**நான் யார்? பதில் : ஆபிரகாம்**

---

# இன்று இன்றே வாழ்தல்
# Living Today Today!
*Owen Cosgrove*

**யா**ராவது வருங்காலத்தைப் பற்றி கவலைப்பட்டால் "நேரம் வரும் போது அதை சமாளிக் கலாம்" என்கின்ற பழஞ்சொல் ஒன்று உண்டு. நம் கர்த்தர் அதை வித்தியாசமான விதத்தில் சொல்லி யிருக்கிறார். " ஆகையால், நாளைக் காகக் கவலைப் படாதிருங்கள்; நாளை யத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் " என்று (மத்தேயு 6:34) .

இன்றைய நாளுக்கான சுமையையும், நாளைய சுமை யையும் சுமக்கும் பெலன் யாருக்கு மில்லை. வாழ்க்கைப் பயணம் ஒவ்வொரு படியாக மேற்கொள்ளப் படுகிறது.

இன்று என்பது தவணை முறையில் கட்டணத்தைச் செலுத்து வதாகும். முழுத்தொகையையும் செலுத்த வேண்டிய நேரம் இது வல்ல. நாளைக்கான தொகை நாளை வரை அவசியமில்லை. செலுத்த வேண்டிய தொகையை மொத்தமாக ஒரே நாளில் செலுத்த முயற்சிப்பது நம்மை திவாலாக்கி விடும். நம்மை அழித்துவிடும். ஆனால், ஒவ்வொரு நாளாக செலுத்து வதென்பது நம் கடமைகளை செய் வதற்கும், பொறுப்புகளை நிறை வேற்றுவதற்கும் ஏற்றதாயிருக்கும்.

உங்கள் இதயம் உடனடியாக உடலுக்கு ஒரு வாரத்திற்கு தேவை யான எல்லாவற்றையும் சப்ளை செய்ய முயற்சித்தால் அது தன்னைத் தானே அழித்துக் கொள்ளும். ஆனால், இதயம் ஒவ்வொன்றாக துடித்து, வேலை செய்து, ஓய்வு எடுத்து இவ்விதமாக செயல்படும் போது அநேக வருடங்கள் அது நன்றாக வேலைச் செய்யும்.

நேர எல்லைக்குட்பட்டுத் தான் வாழ்க்கை வாழப்பட வேண் டும். அங்குலம் அங்குலமாக செய் தால் அவதி இல்லையென்றும், அடிக்கணக்கில் செய்தால் அலைக் கழிப்பு என்றும் ஒருவர் சொல்லி யிருக்கிறார். கவலை என்பது உபத் திரவத்தை கடனாக வாங்குவது என்று பொருள்படுகிறது. எல்பர்ட் ஹப்பர்ட் என்கின்ற அமெரிக்க எழுத் தாளர், " எதிர்பார்த்தலில் சந்தோ ஷங்கள் மிகப் பெரியவைகளாக இருந்தால் இதுவும் உண்மையான உபத்திரவம் என்பதை நினைவில் கொள்ளுங்கள் " என்று சொல்கிறார்.

H.W. பீக்கர் என்பவர் இவ்விதமாக எழுதினார் " நாம் உபத்திரவத்தை கடன் வாங்கி

வருங்காலத்தை எதிர்நோக்கி எப்படிப்பட்ட புயல் வருகிறது என்று பார்த்து, அவைகள் வருவதற்கு முன்பே நம்மை கஷ்டப்படுத்தி, துன்பம் வருவதற்கு முன்பே நாம் அதை எப்படித் தடுக்கலாம் என்று திட்டம் தீட்டும் போது தேவன் மீது இருக்கின்ற சரியான நம்பிக்கையை நாம் இழந்து விடுகிறோம். நம்மை நாம் கற்பனையான ஆபத்துக்களினால், சோதனைகளினால், தோல்விகளினால் சித்திரவதைப் படுத்துகிற போது, நாம் ஏற்கனவே பயத்தைப் போக்குகிற அந்த பூரண அன்பை விட்டுப் பிரிந்து போய் விட்டோம்".

தேவன் மீது ஜெபத்துடன் கூடிய, நன்றியுடன் கூடிய நம்பிக்கை எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தைக் கொண்டு வருகிறது (பிலிப்பியர் 4:4-6). இன்று உண்மையுள்ளவர்களாக வாழுங்கள். இதைத் தான் உங்களால் செய்ய முடியும். இதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும். தேவனிடத்தில் நம்பிக்கையாயிருங்கள், பயப்படாதிருங்கள்.

†

## நம்முடைய பிள்ளைகள் பரலோகம் செல்வார்களா?

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அதை அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி. 22:6)

ஒரு கணக்கெடுப்பு இப்படியாகச் சொல்கிறது:

1. பெற்றோர்கள் இரண்டு பேரும் சபை காரியங்களில் முழுமையான ஈடுபாடு கொள்ளும்போது 93% பிள்ளைகள் விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.
2. பெற்றோர்களில் யாராவது ஒருவர் சபைக் காரியங்களில் ஈடுபாடு உடையவராயிருக்கும் போது 73% பிள்ளைகள் விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.
3. பெற்றோர்கள் குறைவான ஈடுபாடு உடையவர்களாயிருக்கும்போது 53% பிள்ளைகள் விசுவாசமுடையவர்களாயிருக்கிறார்கள்.
4. பெற்றோர்கள் இருவரும் அவ்வப்போது ஆராதனையில் பங்கு கொள்கிறவர் களாயிருந்தால் 6% பேர் விசுவாசத்தில் தொடர்கிறார்கள்.

இந்த நான்கில் எது உங்கள் குடும்பத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது?

இப்பொழுது கூட நீங்கள் திருந்த நினைத்தால் திருந்தலாம்!.

## அவர்கள் எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்

# They Forsook all and Followed Him

*Jerry Bates*

தலைப்பில் இடம் பெற்றுள்ள வார்த்தைகள் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, மற்றும் யோவான் போன்றவர்கள் தங்கள் மீன்பிடி படகுகளை விட்டு விட்டு மனுஷரைப் பிடிக்கிறவர்களானது சம்மந்தமானது, இது லூக்கா 5:11-ல் இடம் பெற்றிருக்கிறது. பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இயேசுவைப் பின்பற்றுவதற்கு இவர்கள் அதிகமாக இழந்திருக்கிறார்கள். அவர்கள் தலை சாய்க்க இடமில்லாத ஒரு மனிதனைப் பின்பற்றுவதற்காக குடும்பத்தை, வருமானம் தரும் தொழிலை விட்டார்கள் (லூக்கா 9:58). நிச்சயமாகவே, அவர்கள் விட்டதைவிட அதிக நன்மையானதைப் பெற்றார்கள். இயேசுவைப் பின்பற்றுவதற்கு அவர்களுக்கிருந்த அந்த விசுவாசத்திற்காகவும், தைரியத் திற்காகவும் நாம் நிச்சயமாக அவர்களை மெச்ச வேண்டும்.

அவர்களுடைய முழுமனதோடு கூடிய அர்ப்பணிப்புக்காக அவர்களை மெச்சும் போதும், அவர்களைப் பார்த்து ஆச்சரியப்படும் போதும், இயேசு நமக்கு இந்த மீன்பிடிக்கிறவர்களுக்குக் கட்டளையிட்டது போல நாமும் எல்லா வற்றையும் விட்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என கட்டளையிடவில்லை என்று சொல்லி, நம் அர்ப்பணிப்புக் குறைச்சலை நியாயப்படுத்த முயற்சிக் கிறோம். நாம் ஒரு சீடனாயிருப்பதற்கு எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அல்லது விற்றுவிட்டு இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பாக கட்டளை இல்லை என்பது உண்மைதான். நமக்குக் கட்டளை இல்லாதபடியால் அநேகர் கிறிஸ்துவுக்கென்று கொஞ்சமாக அர்ப்பணித்துக் கொண்டு, கிறிஸ்துவின் உணமையான சீஷர்கள் என நம்பிக் கொண்டு வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் கிறிஸ்துவிடம் அன்பு செலுத்துவதை விட உலகத்தின் காரியங்களின் மீது அதிகமாக அன்பு செலுத்துகிறார்கள்.

இயேசு நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்? அந்த மகத்தான மனிதர்களிடம் எதிர்பார்த்ததை விட நம்மிடம் குறைவாக எதிர்பார்க்கிறாரா? நிச்சயமாகவே, கிறிஸ்து நம்மிடமிருந்து குறைவாகவே எதிர்பார்ப்பார். நாம் அவருடைய

ராஜ்யத்தின் அப்போஸ்தலர்களாக இருக்கும்படி அழைக்கப்படவில்லை. கிறிஸ்து இரட்சிக்கும் சுவிசேஷத்தை இழந்து போன உலகிற்கு போதித்த போதும், அவர் தம்முடைய இறுதி பலியாக மரணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போதும், நாம் தனிப்பட்ட முறையில் அவரோடு இருக்கும் படியாக அழைக்கப்படவில்லை.

ஆயினும், நாம் வேதவாக்கியங்களை சற்று நெருக்கமாக ஆராய்ந்து பார்க்கும்போது, அந்த கேள்விக்கான பதில் இல்லையென்று நான் நினைக்க வில்லை. இயேசு சீஷர்களிடம் எதிர்பார்த்ததை விட நம்மிடம் குறைவாக எதிர்பார்க்கவில்லை. நாம் அவரைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டு மென்றால் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் மற்றும் எல்லா அப்போஸ்தலர்களும் செய்தது போலவே நாமும் செய்ய விருப்பமுடையவர் களாயிருக்க வேண்டும். உதாரணமாக, லூக்கா 14:26,27 வசனங்களைக் கவனியுங்கள். யாரொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும் சகோதரரையும், சகோதரி களையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட் டான். (வசனம் 26) இங்கே, இந்த உலகத்தில் எந்த உறவும், நம்முடைய நெருக்கமான குடும்ப அங்கத்தினர்கள் உட்பட, இயேசுவை விட முக்கிய மானதாக இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறார். வசனம் 27 நாம் விருப்பத்தோடு செய்ய வேண்டிய தியாகத்தைப் பற்றி வெகுவாகப் பேசுகிறது. அதை சிலுவையை சுமப்பதோடு ஒப்பிட்டுப் பேசுகிறது. நாம் அந்த அளவுக்கு தியாகம் செய்வதற்கு விரும்பவில்லையென்றால், கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவராக நாம் எண்ணப்பட முடியாது.

இதை இயேசு தாமே சொல்கிறார். இயேசு பின்பு செல்லுஞ் செலவைக் கணக்கு பார்ப்பது குறித்து சில உதாரணங்களைக் கொடுக்கிறார், அவரைப் பின்பற்ற நாம் செல்லுஞ் செலவை கணக்குப் பார்க்க வேண்டுமென்று மறைமுகமாகச் சொல்கிறார். இயேசு சீடனாவதை கோபுரத்தை கட்டமனதா யிருக்கும் ஒரு மனுஷனோடும், யுத்தஞ் செய்யப் போகிற ஒரு ராஜாவோடும் ஒப்பிட்டுப் பேசுகிறார். ஒவ்வொரு விஷயத்திலும் அந்த மனிதன் தன்னால் அந்த திட்டத்தைத் தொடர்ந்து செய்து வெற்றிகரமாக முடிக்க முடியுமா என்று செல்லுஞ் செலவை கணக்குப்பார்ப்பான். அடுத்ததாக, இயேசு இந்தப் பகுதியை இவ்வித மாகச் சுருக்கிக் கூறுகிறார். " அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் " (லூக்கா 14:33) என்று.

இவைகள் நாம் சிந்திக்கும்படியான, ஏன் பயமுறுத்தும் வார்த்தைகளாயிருக்கின்றன. ஆனால், நாம் உண்மையாகவே நமக்கு உண்டானவை களையெல்லாம் விற்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், எல்லா வற்றையும் இயேசுவுக்கு அர்ப்பணிக்க நாம் விருப்பமுடையவர்களாய் இருக்க வேண்டும். நம்மிடத்தில் எவ்வளவு விசுவாசம் இருக்கிறது, நாம் எத்தனை முறை ஆராதனையில் கலந்து கொண்டிருக்கிறோம் அல்லது நாம் தேவ னையும், இயேசுவையும் எந்த அளவுக்கு நேசிக்கிறோம் என்று நாம் சொல்லிக் கொள்வதெல்லாம் முக்கியமல்ல. கேள்வி என்னவென்றால், என்னுடைய வாழ்க்கையில் யார் முக்கியமானவர்? இயேசு முதலாவது இடத்தில் இருந்தால், மற்றதெல்லாம் அதற்குப் பின்பு தான்.

நாம் கிறிஸ்துவின் சீடனாவதற்கு உண்மையாகவே நம் உடைமை களையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனபோதிலும், இயேசு நம் முழு இருதயத்தோடு கூடிய அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் நம் வாழ்க்கையே கிறிஸ்துவுக்கு ஜீவ பலியாக இருக்க வேண்டுமென்று சொன்னார் ( ரோமர் 12:1). பவுல் தன்னுடைய எல்லா முந்தைய சரீரப்பிரகாரமான சிலாக்கியங்களையும், சாதனைகளையும் குப்பையாக எண்ணினதைக் குறிப்பிடும் போது இதை உதாரணமாக விளக்கினார் (பிலிப்பியர் 3:7,11). தங்கள் கடந்தகால சாதனை கள் பற்றி ஒரு சிலரால் தான் இப்படிச் சொல்ல முடியும் என்று தெரிகிறது. அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இல்லாமல் உலகத்தின் காரியங்கள் அவர்களுடைய ஜீவியங்களில் முக்கியமான இடத்தை ஆக்கிரமித்திருக்கிறது. இயேசுவை விட நமக்கு முக்கியமானது ஒன்றும் இருக்கக் கூடாது. குறைவானதுடன் நாம் சமாளித்துக் கொள்ளலாம் என்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள். ஆம், அவர் நம்மிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார், ஆனால் அவர் அதைவிட அதிகமாக வாக்குத்தத்தம் செய்கிறார்.

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலிப்பியர் 4:19).

✝



# அபிஷேகம் பண்ணப்படாதவர்கள் போல

## *As Though They Have Not Been Anointed*

***Bobby Dockery***

**ப**ழைய ஏற்பாட்டு இஸ்ரவேலின் மதசம்பந்தமான வாழ்க்கையில், அபிஷேகம் ஒரு முக்கியமான வைபவமாகக் காணப்பட்டது. அது ஒரு கௌரவமான, உணர்வுகளைத் தட்டி எழுப்புகின்ற விழாவாக இருந்தது. இது நிச்சயமாகவே கண்களை கவரக் கூடிய வைபவமாகத்தான் இருந்திருக்கும்.

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். உதாரணத்திற்கு எலியா தனக்கு அடுத்தபடியாக வரவிருந்த எலிசாவை அபிஷேகம் பண்ணும்படி கட்டளையிடப்பட்டார் (ராஜாக்கள் 19:1). ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள் (யாத்திராகமம் 29:7). ஆனால், பொதுவாக அபிஷேகத்தோடு சம்பந்தப்படுத்தப்பட்ட மனிதர்கள் ராஜாக்களாயிருந்தார்கள். சாமுவேல் சவுலை இஸ்ரவேலின் முதல் ராஜாவாயிருக்கும்படி அபிஷேகம் பண்ணினார் (I சாமுவேல் 9:16; 10:1) ஆசகேலை சீரியாவின் ராஜாவாகவும், யெகூவை இஸ்ரவேலின் ராஜாவாகவும் அபிஷேகம் பண்ண கர்த்தர் எலியாவுக்குக் கட்டளையிட்டிருந்தார் (I ராஜாக்கள் 19:16). அபிஷேகம் பரிசுத்தம், அர்ப்பணிப்பு மற்றும் நியமனம்

போன்ற கருத்துக்களை அடையாளப் படுத்தியது. அபிஷேகம் பண்ணப் பட்டவர்கள் பிரித்தெடுக்கப்பட்டு சேவை செய்வதற்கு பணிக்கப்பட்டிருந்தார்கள்.

புதிய ஏற்பாட்டுக்கு நாம் வரும்போது, எல்லா கிறிஸ்தவர்களும் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள் என்பதை கண்டு பிடிக்கிறோம். இதை பவுல் IIகொரிந்தியர் 1:21,22 வசனங் களில் உறுதிப்படுத்துகிறார். " உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்". " நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக் கிறீர்கள் " என்று I யோவான் 2:20-ல் வாசிக்கிறோம். ஒரு கிறிஸ்தவன் எப்போது அபிஷேகம் பண்ணப்படுகிறான்? நாம் தேவனுடைய கிருபைக்கு நம்மை ஒப்புவித்து ஞானஸ்நானம் பெறும்போது. அந்நேரத்தில் பரிசுத்த ஆவி யானவர் நமக்குள் வாசம் செய்யும் வரத்தைப் பெறுகிறோம். (அப் போஸ்தலர் 2:38; I யோவான் 2:27). ஞானஸ்நானத்தில் நாம் தேவனுடைய தனிப்பட்ட ஜனங்களாக பிரித்தெடுக்கப்படுகிறோம்! துடிப்பான சேவைக்காக நாம் அபிஷேகம் பண்ணப்படுகிறோம்!

ஆயினும், நம் அபிஷேகத்திற்கேற்ப வாழ நாம் தவற முடியும் என்று வேதவாக்கியங்கள் எச்சரிக்கின்றன. சவுல் ராஜாவின் மரணத்தின் போது தாவீது புலம்பியது வேதாகமத்தில் சோகமான வசனப் பகுதிகளில் ஒன்றாக இருக்கிறது. சவுலினுடைய வாழ்க்கையின் பரிதாப நிலையையும், சோகமுடிவையும் உருக்கமான விதத்தில் இந்த வார்த்தைகளை விட சுருக்கமாக வேறு எந்த வார்த்தைகளாலும் வெளிப்படுத்த முடியாது; பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப் படாதவர் போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே (II சாமுவேல் 1:21). சவுல் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். ஆனால், அவர் அபிஷேகம் பண்ணப்பட்டதிற்கேற்ப வாழவில்லை! அவர் தனக்கு கொடுக்கப்பட்ட வரங்களை தவறாகப் பயன்படுத்தினார், தன் இயற்கையான திறமைகளை விரயமாக்கினார். அவருடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கையாக இருந்திருக்க வேண்டும்; ஆனால், அதற்குப் பதிலாக அவர் வாழ்க்கை சோகத்தில் முடிந்தது!

இது வெறுமனே ஒரு பழங்கால வரலாறு அல்ல. இன்று அநேகர் " அபிஷேகம் பண்ணப் படாதவர்கள் போல வாழ்கிறார்கள் " !

1. **சிலர் அபிஷேகம் பண்ணப்படாதவர்கள் போல விசுவாசத்திலிருந்து விழுந்து போய் விட்டார்கள்.** அநேகர், தேமாவைப் போல் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து தேவனை விட்டுப் பிரிந்து போய் விட்டார்கள் (IIதீமோத்தேயு 4:10). சிலர் இமெனேயும், அலெக்சந்தரும் போல் விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள் (Iதீமோத்தேயு 1:9,20). அவர்கள் ஒரு காலத்தில் சுத்தமாக்கப்பட்டிருந்தார்கள், ஆனால் தங்கள் அபிஷேகத்தை கனவீனப்படுத்தி மறுபடியும் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொண்டார்கள் (II பேதுரு 2:20-22)


2. **சிலர் அபிஷேகம் பண்ணப்படாதவர்கள் போல உலகப் பிரகாரமான, ஒழுக்கக் கேடான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.** பரிசுத்தம் என்பது இன்று சபையில் கிட்டத்தட்ட மறக்கப்பட்ட ஒரு வார்த்தையாகி விட்டது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தேவனுடைய போதனையான பரிசுத்தமாயிருப்பது, உலகத்திலிருந்து நம்மை பிரித்தெடுத்துக் கொள்வது போன்றவைகளை குறித்துப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை! அநேக கிறிஸ்தவர்கள் உலகம் எதைச் செய்கிறதோ அதைச் செய்கிறார்கள். உலகம் எங்கே போகிறதோ அங்கே போகிறார்கள். அவர்கள் முன்பு பார்த்த அதே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள், முன்பு வாசித்த அதே புத்தகங்களையே வாசிக்கிறார்கள், இதற்கு முன்பு கேட்ட அதே இசையையே கேட்கிறார்கள், உலகத்தின் பிள்ளைகளைப் போல அதேவிதமான உடையை உடுத்துகிறார்கள்! அவர்கள் அபிஷேகம் பண்ணப்படாதவர்கள் போல நடந்து கொள்கிறார்கள்.

3. **சிலர் அபிஷேகம் பண்ணப்படாதவர்கள் போல தேவனுக்கான சேவையை அலட்சியம் செய்கிறார்கள்.** நாம் ஞானஸ்நானம் பெற்ற போது துடிப்புடன் கடமையைச் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருந்தோம். நாம் ஊழியம் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருந்தோம். நாம் கர்த்தருடைய வேலையில் உண்மையாக ஈடுபட வேண்டும் என்று கிறிஸ்தவம் வலியுறுத்துகிறது (Iகொரிந்தியர் 15:58). அநேகக் கிறிஸ்தவர்கள் அபிஷேகம் பண்ணப்படாதவர்கள் போல சோம்பேறித்தனமாக தங்கள் கைகளை முடக்கிக் கொண்டிருப்பது எவ்வளவு பரிதாபமானது!

பழைய ஏற்பாட்டு அபிஷேக வைபவத்தை தியானிக்கும் போது, நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவைப் பற்றிய நம்முடைய புரிந்து கொள்ளுதலை அது தெளிவுபடுத்த வேண்டும். நாம் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறோம்! நாம் சுத்தமாக்கப்பட்டிருக்கிறோம், பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம், பணிக்கப்பட்டிருக்கிறோம்!

நீங்கள் உங்கள் அபிஷேகத்திற்கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?. †

# சரியான பாதையில் இருத்தல்



## Staying On The Right Path

**Charles PughIII**

வேட்டையாடுபவர்கள் பின்வரும் கதையை நன்றாக ரசிப்பார்கள். அதிலி ருந்து நாம் ஆவிக்குரிய பாடத்தை கற்றுக் கொள் வோம். ஒரு மனிதன் தனக்கென்று புதிய வேட்டையாடும் நாயை வாங்கினான். நாய் எப்படி செயல்படுகிறது என்பதை அறிய ஆசைப்பட்டு ஒரு நாள் பெரிய வேட்டை இருக்கும் என்ற நம்பிக்கையுடன் நாயை வெளியே அழைத்துச் சென்றான். அந்த மனிதனின் நம்பிக்கைக்கேற்பவே அந்த நாய் கரடி நடந்து சென்ற அடிச்சுவட்டை கண்டுபிடித்தது! அந்த வேட்டைக்காரன் பரவசமடைந்து, இப்போது என்னிடம் உண்மையாகவே ஒரு வேட்டை நாய் இருக்கிறது என்று நினைத்தான். ஆயினும், அந்த நாய் திடீரென நின்று, சிறிது நேரம் மோப்பம் பிடித்தது. அதன் பின்பு திரும்பி வேறு திசையை நோக்கி கடந்து சென்றது. அந்த வேட்டைக்காரன் உடனே கரடியின் பாதையில் மான் ஒன்று போயிருக்கிறது அந்த மானின் அடிச்சுவட்டை மோப்பம் பிடித்து அதை வேட்டையாடும்படி நாய் போகிறது என்று உணர்ந்தான். நாய், மானின் அடிச்சுவட்டைப் பின் தொடர்ந்து செல்லும் போது அந்த வழியாக கடந்து சென்ற முயலின் வாசனையை மோப்பம் பிடித்தது. இப்போது நாய் அந்த முயலின் அடிச்சுவட்டைப் பின் தொடர்கிறது. தொடர்ந்து நாய் அங்குமிங்கும் போய்க் கொண்டே இருந்தது. கடைசியாக, மூச்சு வாங்கி, சோர்ந்து போன அந்த வேட்டைக் காரன் தான் பரிசாக வாங்கிய அந்த நாய் ஒரு சிறு துவரத்தைப் பார்த்து குரைத்ததை மட்டுமே கண்டுபிடித்தான். ஆனால் அந்த துவாரம் ஒரு சுண்டெலியின் வங்கு என்பது பிறகு தெரியவந்தது.

சில வேளைகளில் நாம் அந்த வேட்டை நாயைப் போல இருக்கிறோம். நம் வாழ்க்கைப் பயணத்தில் தோன்றுகிற, கடந்து செல்கின்ற காரியங்களினால் நாம் திசை திரும்பிப் போகிறோம். நாம் சரியான பாதையில் இல்லாமல், இந்தத் திசை யிலோ அல்லது அந்தத் திசையிலோ நாம் இழுக்கப்படுவதைக் காண்கிறோம். நாம் சரியாக பயணத்தை ஆரம்பிக்கிறோம், ஆனால், பாதை தவறி முடிக்கிறோம். கிறிஸ்த வர்கள் சில வேளைகளில் பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும், ஐசுவரியத்தினா லும், சிற்றின்பங்களினாலும், சரியான பாதையிலிருந்து இழுக்கப்படுகிறோம் (லூக்கா 8:14; I தீமோத்தேயு 6:9,10; எபிரெயர் 11:24,25). சிலர் வியாதி, பொருள் நஷ்டம், மரணம், மற்றவர்களால் தவறாக நடத்தப்படுதல் போன்ற பல்வேறுபட்ட அனுபவங்களால் இழுக்கப்பட அனுமதித்து விடுகிறார்கள்.

நீங்கள் சரியான பாதையிலிருந்து இழுக்கப்பட்டிருந்தால், உங்கள் கால்களின் பாதையை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து, அதிலிருந்து இன்றே எழுந்து திரும்பி வாருங்கள் (லூக்கா 15:18). †

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# தினசரி பொருத்தனைகள்

# Daily Vows

*Jane Mcwhorter*

"இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும் படியாக, உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன்" (சங்கீதம் 61:8).

**கி**றிஸ்தவம் தினந்தோறும் வாழ வேண்டிய ஒரு வாழ்க்கை என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ் சமாக அவருடைய ஊழியத்தில் நாம் எதைச் செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறோமோ அதைச் செய்ய வேண்டுமென்று தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். நாம் கருத்தரங்கு, சுவிசேஷக் கூட்டம் அல்லது இதுபோன்ற ஊக்கு விப்பு கூட்டங்களை நடத்தத் தூண் டப்படலாம், அதன் பின்பு வைராக் கியத்துடன் அநேக வாரங்கள் அல்லது மாதங்கள் பிரயாசப்படு வோம். பெரும்பாலும் ஆரம்பத்திலி ருந்த உற்சாகம் படிப்படியாக குறை கிறது. ஏனென்றால், நாம் பல்வேறு பட்ட உணர்வுகளை, மனநிலை களை உடையவர்களாக சிருஷ்டிக் கப்பட்டிருக்கிறோம்; இது இயற்கை யானதே. தேவன் நம்மிடமிருந்து தினசரி சேவையை எதிர்பார்க்கிறார் என்கிற உணர்வு, நாம் நம் ஆவல் குறையும் போது கூட நாம் எதைச் செய்வோமென்று வாக்குக் கொடுத் திருக்கிறோமோ அதைச் செய்யும்படி யாக நமக்கு சரியான கண்ணோட்டத் தையும், ஊக்கத்தையும் தர வேண்டும்.

பவுல் கொரிந்து பட்டணத் தாருக்கு புத்திமதி சொல்லும் போது "உறுதிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்" என்று சொல்கிறார் (1கொரிந்தியர் 15:58). உறுதியாய் இருத்தல் என்பது நாளுக்கு நாள் மேம்பட வேண்டிய ஒன்று. இதில் உழைப்பு - கடின உழைப்பு சம்பந் தப்படுகிறது. எருசலேம் மதில்கள் வெற்றிகரமாக திரும்ப கட்டப்பட்ட தற்கான காரணம் (நெகேமியா 4:6ல்) சொல்லப்பட்டிருக்கிறது. ஜனங் கள் வேலை செய்கிறதற்கு ஆவலா யிருந்தார்கள்.

தினசரி உறுதியாய் தரித்தி ருப்பதைக் குறித்த உதாரணங்கள் வேத வாக்கியங்களில் நிறைந்து கிடக் கின்றன. இடைவிடாமல் ஜெபம் பண்

ணுங்கள் (I தெச. 5:17). அவர்கள் ஒரு மனப்பட்டவர்களாய் தேவாலயத்தி லே அனுதினமும் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:46). எருசலேமின் மதில்களைக் கட்டின வேலையாட்கள் மிக ஜாக்கிரதையாக வேலைச் செய் தார்கள். சுத்தப்படுத்துவதற்கு மட்டு மே அவர்கள் தங்கள் வஸ்திரங்க ளைக் களைந்தார்கள் (நெகேமியா 4:23). ரோமர் 12:12ல் ஆதிக் கிறிஸ் தவர்கள் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்கும்படி உற்சாகப்படுத்தப் பட்டார்கள். பெரோயா பட்டணத்தார் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப்போஸ்தலர் 17:11). எருசலேம், பெரோயா, ரோமாபுரி மற்றும் தொலைதூர இடங்களிலிருந்து நம் சிந்தனையைத் திருப்பி இந்த நூற்றாண்டில் நாம் வாழ்கின்ற இடங்களில் இவைகளைப் பொருத்தி பார்க்க வேண்டும்.

தேவன் ஆராதனையில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க் கிறார் (எபிரெயர் 10:25). பரிசுத்த வான்களுடன் ஒழுங்காக சபை கூடி வருவதன் மூலமாக நம் பொருத்த னைகளைச் செலுத்துகிறோமா? வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிற காரியத்தில் நாம் எப்படி இருக்கிறோம்? மற்றவர்களுக்கு சேவை செய்யும் வழிகளை நாம் தொடர்ந்து நாடுகிறோமா? பழக்க வழக்கங்கள் நல்லதாக இருக்கலாம் அல்லது கெட்டதாக இருக்கலாம். அவர்களுடைய மதிப்பைப் பற்றிய பாகுபாடில்லாமல் அவைகள் எல்லாம் அதே விதமாக உருவாக்கப்படுகிறது. சிறிய நூலானது முறிக்க முடியாத கயிறாக மாறும் வரை படிப்படியாக பலப்படுகிறது. நாம் ஒரு செயலைத் திரும்ப திரும்பச் செய்து ஒன்றும் அறியாத நிலையாகிய மெய்மறந்த நிலையை அடையும் வரை செய்கி றோம்.

சபையானது தினமும் எண் ணற்ற தேவைகள் இருப்பதை கவனிக்கும் அநேக உண்மையுள்ள கிறிஸ்தவர்களால் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் கவனிப்பது மட்டுமல்ல, தங்களால் முடிந்த வரை சிறந்ததைச் செய்து நிலையை மேம்படச் செய்கிறார்கள். உங்கள் வாழ்க்கையில் வித்தியாசத்தை ஏற்படுத்திய மக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். மற்றவர்க ளுடைய வாழ்க்கையில் வித்தியா சத்தை ஏற்படுத்திய மக்கள் பற்றி நினைத்துப் பாருங்கள். ஆனால், நீங்கள் மற்றவர்களுடைய வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கி றீர்களா? ஒவ்வொரு செயல்பாட் டைக் குறித்தும் தேவன் அறிந்தி ருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவனால் கவனிக் கப்படாமல் எதுவும் போவதில்லை. ஆகையால், " சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதை யாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு " (II தீமோத்தேயு 4:2). †



# குடும்பத்தில் ஒழுக்க நெறிகள் முக்கியமானதா?

# Are family Values Important?

***Hardeman Nichols***

இப்போது அரசியலில் கூட அரசியல்வாதிகளின் குடும்ப ஒழுக்க நெறிகள் பெரிய அளவில் கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒன்றாக மாறியிருக்கின்றது. சிலர் அரசியல் விவாதங்களில் ஒழுக்க நெறிகளுக்கு இடமே இல்லை என்று எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர், மற்றவர்களோ, இது கவனித்தில் கொள்ள வேண்டிய ஒன்று என்று நம்புகிறார்கள். இந்த இரு பிரச்சனைகளையும் குறித்த நம்முடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலம் தீவிரமான வாக்கு வாதத்தைத் தொடங்க வேண்டும்.

அநேக மக்கள் குடும்ப ஒழுக்க நெறிகள் குறித்துக் கவலைப்படுகிறார்களென்பது மறுக்க முடியாதது, எனவே, இது குறித்து பேசும் எல்லோரும் இதில் அக்கறையுடன் பங்கேற்பார்கள். நாம் வாழ்கின்ற இந்தக் கால கட்டத்தில் குடும்பங்கள் சில மாற்றங்களைச் செய்ய அழுத்தத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.

சிலவகையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்பதை ஆதரிப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள், ஆனால், அப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்படும்போது குடும்ப வாழ்க்கையின் ஒழுக்கம் சீர்கெட்டுப் போகும்.

மனித இனம் முழுவதும் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டுள்ளது. நூறாவது சங்கீதம் இவ்விதமாகச் சொல்கிறது. " கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம் " என்று (சங்கீதம் 100:3). நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறபடியால் நம் வாழ்க்கைக்கான அளவுகோலை ஏற்படுத்துவதற்கு அவருக்கு முழு அதிகாரமுண்டு, எல்லா உரிமையும் உண்டு.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட மூன்று அமைப்புகளில் முதலாவது ஏற்படுத்தப்பட்டது குடும்பம் தான். குடும்ப ஒழுக்க நெறியில் மாற்றம் வேண்டும் என்பதை ஆதரித்த முதல் நூற்றாண்டு மதத்தலைவர்களிடம் இவ்விதமாக உறுதிபடச் சொன்னார். " ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும், பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும் இதனிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான் ; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார் " (மத்தேயு 19:4-6). தேர்தல் பிரச்சாரங்களில் பயன்படுத்தப்படும் வசனிப்பு மொழிகளை ஒருவர் கவனிக்கும் போது, குடும்ப ஒழுக்க நெறியில் மாற்றத்தை ஏற்படுத்தும் எந்த ஒரு திட்டத்திற்கும் தேவனுடைய குமாரனிடத்திலிருந்து வரும் இந்தப் பிரமாணம் அளவு கோலாக இருக்கிறது.

வேதாகமத்தில், தேவன் வாழ்க்கை முழுவதும் இணைந்திருக்கும்படி ஒரு மனுஷனையும், ஒரு மனுஷியையும் உருவாக்கினதன் மூலமாக குடும்பத்தை ஏற்படுத்தினார். இந்த அளவுகோல் ஓரின திருமணத்தை மற்றும் பலதாரமுறையை அங்கீகரிப்பதில்லை. ஒரே ஒரு விதிவிலக்குத் தவிர, மற்ற எந்தவொரு காரணத்திற்காகவும் விவாகரத்து செய்வதை இயேசு தடை செய்தார்; " ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் " (மத்தேயு 19:9).

இந்த உலகத்தில் தனியாக விடப்பட்டவர்கள், பாதுகாப்பில்லாதவர்கள், ஒன்றும் தெரியாமல் இருந்தும் கூட குடும்பத்தை இழந்தவர்கள் தவறாக நடத்தப்படும் போது அவைகளை தேவன் கவனிப்பார். இஸ்ரவேல் இவ்விதமாக பாடலைப் பாடியது தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார், தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தி கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார் ; துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள் (சங்கீதம் 68:56). அவர்கள் இவ்விதமாகவும் போதிக்கப்பட்டார்கள். " ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும், திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள், பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கத்தின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள் " (சங்கீதம் 82:34).

குடும்ப ஒழுக்க நெறிகள் அந்த அளவுக்கு அதிகமான மதிப்புள்ளவைகள். அவைகளை நாம் கடந்து போகின்ற, மதிப்பில்லாத, அலங்கரிப்பான இந்த உலக சிற்றின்பங்களுக்காக விற்று போடக்கூடாது.

உங்களுக்கு குடும்ப ஒழுக்க நெறிகள் முக்கியமாக இருக்கின்றதா? †

கிறிஸ்தவ வீடு

# ஒரு குடும்பத்தின் தீர்மானம்
# A Family's Determination

*Danny Cline*

தீர்மானம் பற்றிப் பேசும் போது - இது ஒரு குடும்பத்தை வெற்றிகரமாக ஆக்குவதை விட வேறு எதற்காவது தேவைப்படுகிறதா?.

லேவியனான மோசேயின் தகப்பன் அதே ஆசாரிய குடும்பத்திலிருந்து ஒரு பெண்ணை விவாகம் பண்ணினான் (யாத்திராகமம் 6:16-20). அவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர கருத்துக்களை பகிர்ந்து கொள்ளத்தக்கதாக சேர்ந்து வாழ்க்கையைக் கழிக்க அங்கே தீர்மானித்து விட்டார்கள். புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆசாரிய னாக இருக்கிறபடியால் ஒரு ஆசாரிய பெண்ணை அதாவது, ஒரு கிறிஸ்தவப் பெண்ணை விவாகம் செய்வதற்கு உறுதியான தீர்மானம் தேவைப்படுகிறது. (1 பேதுரு 2:9) ஆனால், அநேகர் இப்படிச் செய்வதில்லை.

அந்தப் பெண் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள் (யாத்திராகமம் 2). இது இயற்கை தானே என்று தோன்றுகிறது. ஆனால், நம்முடைய நாட்களில் அநேகர் கருவைக் கலைத்து விடுகிறார்கள். அநேகர் இப்படிச் செய்வதால் பிள்ளையை பெற்றெடுப்பதற்கு ஒரு தீர்மானம் தேவைப்படுகிறது.

பார்வோன், ஆண் பிள்ளைகள் மூழ்கடிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டபடியால், மோசேயின் தாய் தன் மகன் வாழ வேண்டும் என தீர்மானித்து அவனை புத்திசாலித்தனமாக மறைத்து வைத்தாள். அநேக குடும்பங்கள் பிரிந்திருக்கும் போது உங்கள் குடும்பம் பாதிக்கப்படாதபடி பார்த்துக் கொள்வதற்கு புத்திசாலித்தனமான தீர்மானங்கள் எடுக்கப்படுவது அவசியமாயிருக்கிறது என்று நினைக்கிறீர்களா?.

குழந்தை பார்வோனின் குமாரத்தியால் கண்டுபிடிக்கப்பட்ட போது, மோசேயின் சகோதரி குழந்தைக்கு பால் கொடுக்கும்படி அதன் தாயை அழைத்து வரும்படி தீர்மானித்திருந்தாள். இப்படியாக அந்த முழு குடும்பமும் தங்கள் சிறு பிள்ளை வாரிசாக வரவேண்டும் என தீர்மானித்திருந்தார்கள்.

மோசே பிள்ளைப் பருவத்தில் வளர்ந்தார். மோசேயைப் போல தீர்மானமுடைய ஒரு நபரை நாம் பார்த்திருக்கவே முடியாது. அவருடைய விசுவாசம் அவரை அரண்மனையிலிருந்து வனாந்திரத்திற்கு அழைத்துச் சென்றது, விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து என்று வாசிக்கிறோம் (எபிரெயர் 11:27). வீட்டிலே கற்றுக் கொண்ட தீர்மானம், தேவனுடைய குமாரனையும், கடைசியாக இரட்சிப்பையும், நமக்குத் தந்த தேசத்தையும் பாதுகாப்பதற்கான தீர்மானிக்கும் காரணியாக இருந்தது.

தேவ காரியங்களில் தீர்மானம் உடையவர்களாயிருப்போம். †

செயலில் கிறிஸ்தவம்

# அடிப்படைக்குத் திரும்புவோம்

# Back to Basics

*Danny Cline*

**ப**ல நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவன் துக்கத்தோடு தம்முடைய தீர்க்கதரிசியாகிய ஏரேமியா மூலமாக இவ்விதமாகப் பேசினார். "திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்க தரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படி யிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமா யிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்? என்று ".

தேவன் எப்போதுமே தமது சாயலிலும் தமது ரூபத்தின்படியே யும் உண்டாக்கின மக்கள் மீது அக்க றை உடையவராகவே இருக்கிறார் (ஆதியாகமம் 1:26,27), ஏனென் றால், அவர் அழிவே இல்லாதவர், மனித இனத்தின் முடிவு, அதாவது பரலோகம் அல்லது நரகம் அவ ருக்குத் தெரியும். தேவன் எப்போது மே மனிதனிடத்தில் அன்பு கூர்ந்து அவனுடைய தேவைகள் எல்லா வற்றையும் சந்தித்து வருகிறார். ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும் எந்தப் பாதையில் நடக்க வேண்டுமென்பதை ஆரம்பத் திலிருந்தே மனிதன் அறிந்து கொள்ள மனிதனிடத்தில் தயவாயி ருக்கிறார். ஆயினும் ஒவ்வொரு காலத்திலும் மனிதன் தேவனுடைய வழியிலி ருந்து வழி தப்பி, முற்றிலும் வித்தி யாசமான பாதையில் நடந்து கொண்டிருக்கிறான்.

மனிதன் உண்மையில்லாத வனாக இருந்த போதிலும் மனிதன் மீதான தேவனுடைய அக்கறை மாறவே இல்லை. தேவனுடைய அற்புதமான குணாதிசயங்களில் ஒன்று, அவர் மனித இனத்தின் மீது நீடிய பொறுமையுடையவராக இருப்பது. (II பேதுரு 3:9). ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக தேவன் எரேமியா மூலமாக மனிதர் களிடத்தில் வைத்த கேள்வி, ஆம், மகா பெரிய கேள்வி. இன்றும் அபாய கரமாக இருக்கிறது; " ஆனாலும், முடிவிலே நீங்கள் என்ன செய்வீர் கள்? " என்று.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 6:7,8 வசனங்களில் சொல்லியிருக்கிறபடி, ஒரு நாளில், நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தேவ னை எதிர்கொள்வோம். " மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்மனுஷன்;

எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்; மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான் ".

மனிதனுடைய பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவு அவர் இருப்பது போலவே நிச்சயமாயிருக்கிறது. இந்த பூமிக்குரிய வாழ்க்கை முடிந்த பிறகு, இரண்டு காரியங்கள் மட்டுமே இருக்கும். நரகத்தில் நித்திய ஆக்கினை அல்லது பரலோகத்தில் நித்திய ஜீவன். இவைகளைப் பற்றி கிறிஸ்து (மத்தேயு 25:46) போதித்திருக்கிறார்.

ஆரம்பத்திலிருந்தே தேவன், மனிதன் இந்த உலகத்தில் எப்படி வாழவேண்டும் என்பதை போதித்து வருகிறார். முதலாவது, அவர் நேரடியாக மனிதனிடத்தில் பேசினார்; அதன் பின்பு தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசினார்; கடைசியாக, அவர் தம்முடைய வார்த்தையாகிய இயேசுவை மனித உருவத்தில் அனுப்பினார். அவர் தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி ஓர் எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்.

இயேசு நம்முடைய அனுதின வாழ்க்கையில் வழி காட்டும்படியாக அருமையான காரியங்களை போதித்திருக்கிறார் (எபிரெயர் 1:1,2; 1 பேதுரு 2:21). மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் இயேசு செய்த மலைப் பிரசங்கத்தைப் பாருங்கள். அதில் இயேசு ஆழமான சத்தியங்களை பேசியிருக்கிறார்; ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்...., சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்... நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்... இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்..... இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. இன்னும், உங்கள் சத்துருக்களைச் சிநேசியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்;

இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடு வார்கள், பரலோகத்திலே உங்களுக் குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வை யுங்கள். அங்கே பூச்சியாவது, துருவா வது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே யிருக்கிறதோ அங்கே உங்கள் இருத யமும் இருக்கும். ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங் கள்; இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிச னங்களுமாம்.

இவைகளெல்லாம் தேவனு டைய வார்த்தையின் அடிப்படை போதனைகள். நம்முடைய பக்தி வாழ்வுக்கு ஒரு வடிவம் கொடுக்க நாமெல்லாரும் இதனிடத்திற்கு திரும்ப வேண்டும். ஆனால், இன் றைய உலகத்தில் எதிர்மறையான வழிமுறை நாடப்படுகிறது. அச்சிடப் பட்ட தகவல்களும், ஊடகங்களும் பெருகிவிட்டபடியால் மக்கள் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். எல்லா வகையிலும் ஒழுக்கக்கேடு தலை தூக்கி நிற்கிறது. தேவன் வெறுக் கின்ற காரியங்களான விவாகரத்து, ஓரினச்சேர்க்கை, பெருமை, பொய், கொலை, கருக்கலைப்பு, பண ஆசை போன்ற காரியங்கள் மகிமைப்படுத் தப்படுகின்றன. இது எரேமியாவின் நாட்களில் தேவன் வானத்திலிருந்து நினைப்பூட்டுகிறது. அவர்கள் அருவ ருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார் கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள் ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங்காலத்தில் இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லு கிறார் (எரேமியா 6:15).

மக்கள் சில காரியங்களை தனிப்பட்ட முறையில் கூட பேசுவ தற்கு வெட்கப்பட்ட காலம் போய் இப்போது அதே காரியத்தை எவ்வித நாணமுமின்றி வெளிப்படையாகவே பேசுகிறார்கள். அந்தரங்கத் தலைப்பு கள் விவாதிக்கப்படுவது மட்டுமல்லா மல் தொலைக்காட்சி மூலமாக நம்மு டைய வீடுகளில் கூட காட்டப்படுகிறது. அதே விஷயங்கள் இலக்கிய வடிவத் தில் எல்லா மொழிகளிலும் எல்லா இடங்களிலும் கிடைக்கிறது.

தேவன் வானத்திலிருந்து இறங்கி வந்து ஜனங்கள் தொலைக் காட்சி பார்ப்பதையோ, அவர்கள் விரும்புகிற இலக்கியத்தைப் படிப்ப தையோ தடைசெய்யமாட்டார். அதுபோல, மக்கள் எதைச் செய்ய விரும்புகிறார்களோ அதைத் தடுக்க வும் மாட்டார். அதை அவர் ஏதேன் தோட்டத்தில் கூட செய்யவில்லை. தேவன் ஆதாமையும், ஏவாளையும் உண்டாக்கி தோட்டத்திலே வைத்து நன்மை, தீமை, கீழ்ப்படிதல், கீழ்ப் படியாமை போன்றவற்றில் எதை

ளட்டும் என்று சுதந்திரத்தைக் கொடுத் தார். அவருடைய சித்தத்திற்கு அப்பால் அவர்கள் போகக்கூடாது என்று எச்சரித்தார்; அவர்கள் கீழ்ப்படி யாமல் போகும் அந்த நாளில் சாகவே சாவார்கள். அதாவது, ஆவிக்குரிய பிரகாரமாக அவர்கள் தேவனிடத்திலி ருந்து பிரிந்து, சரீரப்பிரகாரமாக சாகத் தொடங்கினார்கள்.

ஆனால், மனிதன் ஏதேனில் பாவம் செய்தான், அது தவறாக இருந்த போதிலும் மனிதன் தன் சொந்த அல்லது சுயமுடிவை எடுக்க தேவன் தடை செய்யவில்லை.

தீமையானது இன்றும் காணப்படுகிறது; சொல்லப் போனால் அது முன்பை விட மிக வல்லமை யாக பல்வேறுபட்ட கோணங்களில் காணப்படுகிறது. நாம் தீமையை தெரிந்தெடுக்கும்போது தேவன் நம்மைத் தடுக்கப் போவதில்லை. ஆனால், நாம் என்ன செய்யவேண் டும், என்ன செய்யக்கூடாது என்ப தை தேவன் சொல்லியிருக்கிறார். எனவே, இந்த உலகத்தினால் கறை படாதபடி பார்த்துக் கொள்வது நம்மு டைய பொறுப்பாயிருக்கிறது. அது தேவனுடைய பொறுப்பல்ல (யாக் கோபு 1:27).

இளம் வயதினருக்கு முதிர் வயதான சாலொமோன் ஞானி இவ்விதமாக புத்திமதி சொல்கிறார். "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்க ளிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழி களிலும், உன் கண்ணின் காட்சிகளி லும் நட, ஆனாலும் இவையெல்லா வற்றினிமித்தமும் தேவன் உன் னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி. நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு; இளவயதும் வாலிப மும் மாயையே. நீ உன் வாலிபப் பிரா யத்திலே உன் சிருஷ்டிகரை நினை " என்று (பிரசங்கி. 11:9,10; 12:1).

உங்கள் வாழ்க்கைக்கு எது தூண்டுகோலாக இருக்கிறது? உங் கள் வாழ்க்கையை எது கட்டுப்படுத் துகிறது? வேதாகமத்தில் காணப்படு கின்ற தேவனுடைய சித்தம் உங்க ளைக் கட்டுப்படுத்துகிறதா? அல்லது உலகம் உங்களைக் கட்டுபடுத்து கிறதா? †

## பாவத்தைத் தவிர்க்க

ஒரு செயலைச் செய்யும் முன்

1. தேவன் இதை ஏற்றுக்கொள்வாரா?
2. இயேசுவானவர் இதில் பிரியப்படுவாரா?
3. பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள் இடம் கொடுக்கிறதா?



# வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்

## *Use the Opportunity*

***David Deffenbagh***

பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பயணம் நிறைவடைவதை லூக்கா எழுதும் போது, பவுல் தீருவில் பரிசுத்தவான்களோடே கழித்ததாகக் கூறு கிறார். அது ஓர் இனிமையான ஐக்கிய வேளை என்று வெளிப்படையாகவே தெரிகிறது; அவர்களை விட்டுப் பிரியும் நேரம் வந்த போது அங்கே இருந்த சகோதரர்களும் அவர்கள் குடும்பமும் பட்டணத்துக்குப் புறம்பே பவுலை வழி விட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே அவர்களெல்லாரும் முழங்காற்படியிட்டு ஜெபித்தார்கள். ஒருவர் இது பவுலின் பிரயாணத்தின் ஒரு பகுதிதான் என்று யூகிக்கலாம். ஆயினும், பவுல் தீருபட்டணத்தில் இறங்குவதற்கு காரணம் அங்கே கப்ப லில் இருந்த சரக்குகளை இறக்க வேண் டியிருந்ததே. அதை மிகத் தெளிவாக லூக்கா எழுதியிருக்கிறார், அங்கே கப்ப லின் சரக்குகளை இறக்க வேண்டியதா யிருந்தது என்று (அப்போஸ்தலர் 21:3). அங்கே இறங்க முன்கூட்டியே திட்ட மிடப்படவில்லை. அங்கே பவுல் சீஷர் களைக் கண்டுபிடிக்க வேண்டியதாயி ருந்தது. இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால், பவுல் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தினார்.

பவுலை எப்போதுமே தனித்துவப்படுத்துகிற காரியம், எந்தச் சூழ் நிலையையும் லாவகமாக ஏற்றுக் கொண்டு வாய்ப்பைப் பற்றிக் கொள் ளும் திறமைதான். நிச்சயமாகவே, அவர் சில திட்டங்களைத் தீட்டியிருந் தார், சில நோக்கங்களை வைத்திருந் தார், ஆனால், எப்போதும் அவைகள் கைகூடுவதில்லை. ஆனால், அவர் ஏமாற்றம் அடைந்து விட்டோமே என்று வருத்தப்படுபவருமல்ல, நடந்தவை களைக் குறித்து குறை கூறுபவருமல்ல. தானாகவே அமைந்த சூழ்நிலைகளை அவர் சரியாக பயன்படுத்திக் கொண் டார், அவரை எளிதாக தடை செய்துவிட முடியாது. எனவே தான், அவர் ஜெப ஆலயங்களில், பள்ளியில், கோட்டைப் படிகளில் பிரசங்கம் செய்தார்; பகைமை உணர்வுள்ள கூட்டத்தில், ஆவலுள்ள வேதாகம மாணவர்களிடத்தில், தத்துவ ஞானிகளிடத்தில் சொற்பொழிவாற்றி யிருக்கிறார்; அவர் தொடர் பிரயாணங் களில் சில நேரத்தை கழித்திருக்கிறார். சில நேரங்களில் ஒரே இடத்தில் இருந்தி ருக்கிறார், இன்னும், சிறைக் கைதியாக எங்கும் செல்லாமல் அநேக மாதங்க ளைக் கழித்திருக்கிறார். ஆனால், அவை எல்லாவற்றிலும் கிடைத்த ஒவ்வொரு வழியையும் பயன்படுத்தி சுவிசேஷத் தைப் பிரசங்கித்திருக்கிறார். நாம் பவுலி டமிருந்து வெறும் உபதேசத்தை மட்டு மல்ல, அநேக காரியங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். ✝

# சுவிசேஷத்துடன் போங்கள்

## GO WITH THE GOSPEL

*Max Patterson*

உலகம் அறுவடைக்களமாக இருக்கிறது. ஆகவே, பிரசங்கம் எங்கும், எவ்விடத்திலும் செய்ய முடியும், செய்யப் பட வேண்டும். உண்மையாகவே, வேதாகமத்தில் வெளிநாட்டு வேலை, உள்நாட்டு வேலை என்றெல்லாம் இல்லை, ஆனால், கர்த்தருடைய வேலை என்று இருக்கிறது.

இரண்டு மாபெரும் சுவிசேஷ கர்கள் வித்தியாசமான வேலை செய்தி ருக்கிறார்கள். இயேசு நாற்பது மைல்கள் அகலமும், 140 மைல்கள் நீளமும் உடைய தம்முடைய தாய் நாட்டிலேயே தங்கி விட்டார். பவுல் தன்னுடைய ஊழி யத்தின்போது துருக்கி, கிரீஸ் இன்னும் பல நாடுகளுக்குச் சென்றார், விசேஷ மாக, தன்னுடைய சுவிசேஷப் பிரயா ணத்தின் போது சென்றிருக்கிறார். முதல் நூற்றாண்டில் சோர்வில்லாமல் வேலை செய்த பவுலுக்கும் வேறு சிலருக்கும் சரியான ஊழிய நோக்கம் இருந்தது. (ரோமர் 1:14-16). பிரசங்கம் செய்வதற் கான உற்சாகம் சபையில் எல்லாரிடத்தி லும் காணப்பட வேண்டும், சில பிரசங் கிமார்களிடத்திலும், மூப்பர்களிடத்திலும், முன்னோடி சபை அங்கத்தினர்களிடத் திலும் மட்டுமல்ல.

ஊழிய வைராக்கியமின்மை மற்றும் அர்ப்பணிப்பு இல்லாமை போன் றவைகள் எங்கும் கர்த்தருடைய வேலையைத் தடை செய்கின்றன. நம்மிடத்தில் போதுமான அளவு உற்சாகம் இல்லை (இந்த வார்த்தை, சொல் அர்த்த ரீதியாக தேவன் நம்மிடத் தில் இல்லை என்று பொருள்படுகிறது). ஒரு சராசரி விசுவாசி தன்னுடைய வருமானத்தில் 3 சதவீதம் மட்டுமே உலகத்திலேயே மிக முக்கியமான வேலைக்குக் கொடுக்கிறார்.


ஆதியாகமத்திலிருந்து வெளிப் படுத்தின விசேஷப் புத்தகம் வரை வேதாகமம் ஓர் ஊழியப் புத்தகமாக இருக்கிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் மாபெரும் மனிதர்களும், மனுஷிகளும் ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அதாவது, ஊழியம் செய்திருக்கிறார்கள். ஊழியம் மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், ஓரளவுக்காவது மனித பங்களிப்பு இல்லாமல் யாருமே கிறிஸ்த வனாக மாற முடியாது.

வைராக்கியத்தின் ஆதாரம் வேதாகமத்தில் தான் இருக்கிறது. இந்தப் பூமி அதன் வட்டப் பாதையில் சுற்றுவதற்கான உண்மையான காரணம் மனிதர்கள் மனந்திரும்பு வதற்காகத்தான்; தேவன் மனிதனை இரட்சிக்க முயற்சி செய்கிறபடியால் உலகத்தின் வரலாறு தேவனுடைய வரலாறு என்று ஒருவரால் சொல்ல முடியும். சபை ஆசீர்வாதங்களை தேக்கி வைக்கும் தேக்கமாக இருக்கக் கூடாது, ஆசீர்வாதங்கள் பாய்ந்து வரும் ஆறாக இருக்க வேண்டும்.

நான் சுவிசேஷத்தைப் பிரசங் கித்தே ஆக வேண்டும். ஏனென்றால், இயேசுவின் கட்டளை சர்வ சிருஷ்டிக் கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதாகும் (மாற்கு 16:15). எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி விட்டபடியாலும் (ரோமர் 3:23) பாவத் தின் சம்பளம் மரணம் என்பதாலும் (ரோமர் 6:63) எல்லோருக்கும் சுவிசே ஷம் தேவைப்படுகிறது. (ரோமர் 1:16; IIகொரிந்தியர் 1:7-9). †

# ஊழிய வாஞ்சையோடு வாழ்தல்
# Evangelistic Living

**DAN R. OWEN**



ஆதியாகமத்திலிருந்தே, தேவன் தம்முடைய ஞானத்தை அவிசுவாசிகளுக்கு அறிவிக்க தம்முடைய ஜனங்கள் மூலமாக கிரியை செய்து கொண்டு இருக்கிறார். கிறிஸ்து வை இந்த உலகத்திற்கு கொண்டு வர இஸ்ரவேலை தேவன் ஒரு வாகன மாகத் தெரிந்து கொண்ட போது, அவர்கள் " உலகத்தின் கடைசி வரை இரட்சிப்பாயிருக்கும்படி", " தேசங் களுக்கு வெளிச்சமாயிருக்கும்படி " அவர்களை கேட்டுக் கொண்டார். இயேசு இந்த உலகத்தை விட்டுக் கடந்து செல்வதற்கு முன்பு சீஷர்க ளிடத்தில் இவ்விதமாகச் சொன்னார். அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது (லூக்கா 24:47). இழந்து போனதைத் தேடுவதும், இரட்சிப்பதும் மனித இனத்திற்கான தேவனுடைய நித்திய திட்டத்தின் மையமாக இருக்கிறது. இழந்து போன மனித இனத்திற்கு இயேசுவே ஒரே பதிலாக இருக்கிறபடியால் கி றி ஸ் து வி னி ட த் தி ல் ஆத்துமாக்களை கொண்டு வரக் கருவிகளாக இருக்கும்

படி அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த தெய்வீக அழைப்பை ஒப்புக்கொள் வது ஊழிய வாஞ்சையுள்ள வாழ்க் கை வாழ்வதற்கு வழி வகுக்கும்.

ஊழிய வாஞ்சையுள்ள வாழ்க் கை உண்மையான நம்பிக்கையிலி ருந்து எழுகிறது. தேவனிடத்தில் போவதற்கு ஒரே வழி இயேசு தான் என்பதை நாம் உண்மையாக உணர்ந்தால் அந்த உணர்வை மற்ற வர்களிடத்தில் பிரதிபலிக்க வேண் டும். ஒரு நபர் இயேசுவை அறிந்து அவருடைய அற்புதமான கிருபை, சமாதானம் மற்றும் வல்லமையைக் கண்டறியும் போது அப்படிப்பட்ட நபர் மற்றவர்களுக்கும் இயேசு தேவை என்று உணர்வார். நாங்கள் விசுவா சிக்கிறோம் ஆகையால் பேசுகிறோம் என்று பவுல் சொன்னார் (II கொரிந் தியர் 4:13) மற்றவர்கள் உண்மை யாகவே இயேசுவைப் பற்றி அறிய வேண்டும் என்கிற உறுதியான உணர்விலிருந்து ஊழிய வாஞ்சை யுள்ள வாழ்க்கை ஆரம்பமாகிறது.

ஊழிய வாஞ்சையுள்ள வாழ்க் கை உள்நோக்கமுடையதாயிருக் கிறது. தங்களுக்கு இந்த உலகத்தில் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற பங்கைப் புரிந்து கொண்ட கிறிஸ்தவர் கள் மற்றவர்களுடைய ஜீவியங்க ளில் கிறிஸ்துவைப் பற்றிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவார்கள். இந்த ஜனங்கள் தங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாகவும், பூமிக்கு உப்பா கவும் உணர்ந்திருக்கிறார்கள், இவர் களுடைய நற்கிரியைகளைக் கண்டு மற்றவர்கள் பரலோகத்திலிருக்கிற பிதாவை மகிமைப்படுத்தும்படி இவர் களுடைய வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசித்திருக்கிறது. (மத் தேயு 5:13-16). அவர்கள் எங்கெல் லாம் போகிறார்களோ அங்கெல்லாம் கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவ னுக்கு சுகந்த வாசனையான காணிக் கையாக ஒப்புக் கொடுத்தார் என்பதை வெளிப்படுத்துகிறார்கள். மேலும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் சகல மனு ஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டு மிருக்கிற கிறிஸ்துவின் நிருபமா யிருக்கிறான் (2 கொரிந்தியர் 3:2). இவைகளைக் குறித்து உணர்வுள்ள வர்களாயிருக்கும் போது இது ஒருவ ருடைய மனதில் சுற்றியிருப்பவர் களின் மீது கிறிஸ்தவ தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற மன நிலையை ஏற்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட மக்கள் மீது தேவனுக்கான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நாம் நாடும்போது அக்காரி யத்தைச் செய்ய நாம் பலமுடையவர் களாகிறோம்.

ஊழிய வாஞ்சையுள்ள வாழ்க் கை என்பது கிறிஸ்தவத்தைப் பற்றி வெளிப்படையான வைராக்கியம் கொண்டிருந்து அசுவாசிகளோடு உண்மையான நட்பை மேம்படுத்து வதை உள்ளடக்கும். நாம் அவிசு வாசிகளிடத்தில் அன்பு கூர்ந்து அவர் களுக்கு சேவை செய்யும் போது அவர்களும் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நமக்கு மரியாதை கொடுப்ப தில் வளருவார்கள். நம்மைச் சுற்றி லும் இருப்பவர்களிடத்தில் நாம் கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்தி நமக்கு வாய்ப்பு கிடைக்கும் போது தேவனிடத்தில் இருக்கும் விசுவாசம்

பற்றியும் அது நமக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றியும் பேசுகிறோம். நம்முடைய கிறிஸ்தவரல்லாத நண்பர்களை மற்ற கிறிஸ்தவர்களிடத்தில் அறிமுகம் செய்து சபை நிகழ்ச்சிகள் மற்றும் வேதபாட வகுப்புகளுக்கு அழைக்க வேண்டும். அவர்கள் இருதயமாகிய நிலம் பண்படுத்தப்பட்டுவிட்டால் ஆயத்தப்படுகிற போது, நாம் தேவனுடைய வார்த்தையை அவர்களோடு சேர்ந்து படிக்க வேண்டும் அல்லது அவர்களோடு சேர்ந்து படிக்கத்தக்க வாய்ப்புள்ளவர்களிடத்தில் அவர்களை அறிமுகப்படுத்த வேண்டும். தங்கள் நட்பை நிபந்தனையாக்கி, கிறிஸ்தவத்தை அவர்கள் மீது திணிக்கிறவர்களிடத்தில் அறிமு கப்படுத்தக் கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் உண்மையான கிறிஸ்தவர்களின் பொறுமை, அன்பு மற்றும் சிறந்த முன் உதாரணத்தின் மூலமாக பெரும்பாலும் ஜனங்கள் கர்த்தரிடத்தில் வழி நடத்தப்படுகிறார்கள்.

சபையானது ஊழிய வாஞ்சையுள்ள சகோதரர்களால் நிரப்பப்பட்டிருப்பது அவசியம். ஒவ்வொரு கிறிஸ்தவனோ, கிறிஸ்தவளோ இப்படிப்பட்ட வாஞ்சையுடையவர்களாயிருந்தால், வீட்டிலும், பள்ளியிலும், பணிபுரியும் இடங்களிலும், சமுதாயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி, அநேகரை கிறிஸ்துவண்டை கொண்டு வர முடியும். நம்முடைய வெளிச்சம் மரக்காலால் மூடி வைக்கப்படக் கூடாது. (மத். 5:15). உங்கள் வெளிச்சம் கிறிஸ்துவுக்காக பிரகாசிக்கக்கடவது. நாம் இணைந்து கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம். நாம் அவருடைய சித்தத்தைச் செய்யும்போது அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார் என்னும் வாக்குத்தத்தம் உண்டு. †

## பிதாவைப் பின்பற்றுதல்

தேவனுடைய பிள்ளைகளாக நாம், அவரைப் போலிருக்க கற்றுக் கொள்ளுகிறோம். அவர் நம்மை எவ்விதமாக நடத்துகிறாரோ அவ்விதமாகவே நாம் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளுகிறோம்.

கிருபை – தகுதியில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படுவது

இரக்கம் – காயப்படுத்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுவது

மன்னிப்பு – கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படுவது

ஒப்புரவாகுதல் – மன்னிப்படைந்தவர்களுக்கு கொடுக்கப்படுவது.

– பெட்டி பர்ட்டன் சோட்

# மனிதப் பசி

# The Human Hunger

AVON MALONE

கேட்பதற்குப் பரிதாபமாக இருந்தாலும் கூட அநேகர் சரீரப் பசியோடு படுக்கைக்குச் செல்கிறார்கள் என்பது உண்மை. ஆயினும், ஆன்மீக உலகில், ஜீவ அப்பத்தின் மீது பசியாயிருக்கிறவர்கள் தாங்கள் பசியின் தன்மையும், காரணமும் தெரியாமல், புரியாமல், சத்தியத்தால் போதிக்கப்படாத நிலையில் கோடிக் கணக்கான மக்கள் மிக பரிதாபமாக இருக்கிறார்கள்.

## ஜீவ அப்பம்

நம்முடைய இருதயப் பசியை திருப்திப்படுத்தக்கூடிய ஒரே ஒருவர் இவ்விதமாகச் சொன்னார், " ஜீவ அப்பம் நானே " (யோவான் 6:35). பவுல், நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்று பிரசங்கிக்கிறோம் என்று சொல்வதில் ஆச்சரியமொன்றுமில்லை (II கொரிந்தியர் 4:5). இந்த மகத்தான ஆத்தும அறுவடையாளர், தன் ஜீவியத்தில் பற்றி எரிகிற ஆசையால் இவ்விதமாக வெளிப்படுத்துகிறார் "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் " (I கொரிந்தியர் 2:2) என்று.

## செய்தியைக் கூறுதல்

இந்தச் செய்தியைக் கூறுவதில் எல்லாக் கிறிஸ்தவர்களும் பங்கு வகிக்க முடியும். பசியுள்ள ஆத்துமாக்களுக்கு ஜீவ அப்பம் சென்றடையாதபடி, அதை பிடித்து வைத்துக் கொண்டு, அதற்கு காட்டும் மரியாதை மற்றும் பக்தி என்ற பெயரில் சவாளாக இருப்ப தை தேவன் மன்னிப்பாராக!. நாங்கள் பக்குவமும், மரியாதையு முள்ள மக்கள், ஆகவே, நாங்கள் யாரையும் நாடிச் சொல்லமாட்டோம் என்பது நம்மையோ உலகத்தையோ இரட்சிக்காது.

கிறிஸ்துவும் அவருடைய சிலுவையும் தான் ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கிறது (I கொரிந்தியர் 1:18;2:2; 15:34; ரோமர் 1:16). இந்த சுலபமான, எளிதான இரட்சிக்கும் செய்தி கிறிஸ்தவர்களால் தங்களுக்கு செல்வாக்கு இருக்கும் இடங்களில் சிறந்த முறையில் அறிவிக்கப்படுகிறது. உங்கள் மீது அதிக மரியாதை வைத்திருக்கும் சில மக்கள் இருக்கவாய்ப்பு இருக்கிறது. அதைப் போலவே மற்றவர்களை விட உங்களால் போதிக்கப்படக்கூடிய மக்கள் இருக்கலாம். ஆத்துமா இரட்சிக்கப்படும்படி, வாய்ப்பு உங்களிடத்தில் இருக்கும் போது அதைப் பற்றிக் கொள்ளுங்கள்.

# உலகைச் சுற்றி ஓர் நடை
# A Walk Around The World

BETTY TUCKER

போதகர்களுக்கெல்லாம் போதகரான இயேசு ஆண்டவர், வீட்டிலிருந்து வெகு தூரத்திற்கு சென்று உலகத்தைப் பார்க்க ஏங்கின ஒரு வாலிபன் பற்றிப் பேசினார். (லூக்கா 15).

அந்த வாலிபன் தான் கற்பனை செய்தவைகளை அனுபவிக்கும்படி தன் தகப்பனிடத்தில் ஆஸ்தியில் தனக்கு உண்டான பங்கைக் கேட்டான். அந்த தகப்பன் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த அநேக தகப்பன்களைப் போல தன் குமாரன் கேட்டதைக் கொடுத்து விட்டார் (வசனம் 12).

அந்த அகந்தையுள்ள வாலிபன் தன்னுடைய பாக்கெட்டில் பணத்தை வைத்துக்கொண்டு, துள்ளிக் குதித்து, சந்தோஷமாகப் பாடி வருவதை நம்மால் கற்பனை செய்ய முடியும். அவன் வீட்டின் கட்டுப்பாடுகளைக் குறித்து கசந்து, உலகத்தின் சிற்றின்பங்களை ஆராயும்படி பயணத்தைத் தொடர்ந்தான்.

இந்த வாலிபன் காமக்களியாட்டங்களில் ஈடுபட்டு, மாம்சத்தின் இச்சையால் ஜெயிக்கப்பட்டான் (வசனம் 13). பையில் பணம் காலியாகும் வரை அவனுடைய உல்லாச வாழ்க்கை நீடித்தது. எல்லாம் தீர்ந்த போது அவனுக்கு நண்பர்களாயிருந்தவர்கள் அவனை தன்னந்தனியாக விட்டுச் சென்றார்கள்.

### அடிமையாயிருந்தான்!

இச்சம்பவத்தில் இந்த வாலிபனுடைய எதிர்பார்ப்புக்கு எதிராக காரியங்கள் நடந்தேறியிருக்கிறது. இவன் சுதந்தரத்தைக் காண தன் பயணத்தைத் தொடங்கினான். ஆனால், ஓர் அடிமையாக பயணத்தை முடித்தான்! ஆம், அவன் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பப்பட்டான் (வசனம் 15). அவன் சரீரப் பிரகாரமாவும் பசியாயிருந்தான், ஒழுக்க நெறியிலும் பசியாயிருந்தான்.

பன்றி வளர்க்கப்படும் இடத்தில் இருந்தபோது அவனுக்குப் புத்தி தெளிந்தது (வசனம் 17). அவன் தன்னைத்தானே பரிசோதித்துப் பார்த்தான். தன்னுடைய மோசமான நிலையை உணர்ந்த அவன் உலகத்திலேயே மிகச் சிறந்த இடத்தை விட்டுவிட்டு இப்படிப்பட்ட தாழ்வான நிலையில் இருப்பதை உண்மையாகவே உணர்ந்து கொண்டான்.

### மனந்திரும்புதல்

பதினெட்டாம் வசனத்தில் அவன் இவ்விதமாக பகிரங்கமாக

அறிவிப்பதை நாம் கேட்கிறோம். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்; தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் என்று.

நாம் பாவத்தினால் பிடிக்கப்படும்போது சாக்குபோக்கு சொல்வது போல அவன் சாக்குப்போக்கு சொல்லவில்லை. சாக்குப்போக்கு சொல்வதற்குப் பதிலாக அவன், நான் “ பாவஞ் செய்தேன் ” என்று வெளிப்படையாகச் சொன்னான்.

அவனுடைய சீர்திருத்தம் மனந்திரும்புதலுக்கு வழிவகுத்தது. அவன் உடனடியாக செயல்பட்டான். அவன் நருங்குண்ட, நொறுங்குண்ட இருதயத்தோடே தன் தகப்பனிடத்திற்கு திரும்பிச் சென்றான் (வசனம் 21).

இந்த உவமை சந்தோஷமாக முடிகிறது. தகப்பன் தினந்தோறும் காலையில் தன் மகனுக்காக எதிர்நோக்கியிருந்ததில் எந்த சந்தேகமும் இல்லை, தன் மகன் வீட்டுக்குத் திரும்புவதைக் காண தகப்பன் நம்பிக்கையோடு காத்திருந்தான். மகனைக் கண்டபோது அவர் மகிழ்ச்சியோடே ஏற்றுக்கொண்டார். (வசனம் 20). அங்கே மகிழ்ச்சியும், குதூகலமும் ஆரம்பமானது (வசனம் 24,32).

அந்த வாலிபன் தனக்காக சிறந்த இடத்தைக் கண்டுபிடிக்கும்படி உலகத்தை சுற்றிப் பார்த்தான், ஆனால், சிறந்த இடம் அவன் எங்கே பயணத்தைத் தொடங்கினானோ அங்கே இருப்பதை கண்டுபிடித்தான்.

இந்த உவமையிலிருந்து அநேக பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

h அந்த வாலிபன், வீட்டில் தனக்கிருந்த பொறுப்பை விட்டு விட்டுச் சென்றான். ஆனால், பன்றிகளோடு வாழும் தண்டனையை அவன் எதிர்கொண்டான்.

h அவனுக்கு உண்மையில்லாத நண்பர்கள் அநேகர் இருந்தார்கள். பணம் இருந்தவரை அவனைச் சுற்றி கூட்டமாகச் சென்று இருந்தார்கள். பணம் காலியான போது, அந்தத் தவறான நண்பர்கள் மறைந்து போனார்கள்.

h அவன் உலகத்தைச் சுற்றி நடந்து, மகிழ்ச்சி, திருப்தி பற்றியும் விலையேறப் பெற்ற ஒரு பாடத்தை கற்றுக் கொண்டான். இப்படிப்பட்ட பொருள்கள் எல்லாம் உள்ளிருந்து தான் வருகிறது என்பதைக் கற்றுக் கொண்டான். நாம் இந்த உலகத்தில் எங்கே வசிக்கிறோம் என்பது முக்கியமானதல்ல, நாம் குடிசையில் வாழ்ந்தாலும் சரி, மாளிகையில் வாழ்ந்தாலும் சரி அது முக்கியமல்ல. சந்தோஷத்திற்கான நம்முடைய சிறந்த நம்பிக்கை பிதாவுக்கு அருகில் தான் இருக்கிறது. அவருடைய அன்பான அரவணைப்பின் வட்டத்திற்குள்ளேயே இருக்கிறது.

இந்த வாலிபன் கடைசியாக கற்றுக் கொண்ட பாடம் முக்கியமான ஒன்றாயிருக்கிறது. அது, போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்பது. (1 தீமோத்தேயு 6). †

# இயேசுவின் ஜெபம்
# The Prayer of Jesus

**William Woodson**

இயேசு காட்டிக்கொடுக்கப் பட்டு, அதன் தொடர்ச்சியாக சிலுவை யில் மரிப்பதற்கு சில மணி நேரங்க ளுக்கு முன்பாக பிதாவோடு பேசி னார். அது யோவான் 17 ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக் கிறது. நம் கர்த்தர் தமக்காக மட்டும் ஜெபம் பண்ணாமல் அப்போஸ்தலர் களுக்காகவும் ஜெபித்தார் என்பதை நினைவுப்படுத்திப் பார்த்து படித்தால் இந்த அழகான ஜெபத்தின் ஆழமான அர்த்தம் புரியும். இயேசு எதிர்வரும் நாட்களில் தம்முடைய வார்த்தை களைக் கேட்டு தம்முடைய சித்தத் தை செய்பவர்களுக்காக ஆசீர்வாதங் களைக் கேட்டார். இந்த ஜெபத்தின் அநேக நிலைகள், கவனமாக கவனிக்க வேண்டியவைகளாயிருக் கின்றன.

இயேசு உலகம் உண்டாகிற தற்கு முன்னே, பிதாவினிடத்தில் தமக்கு உண்டாயிருந்த மகிமையி னாலே தம்மை மகிமைப்படுத்தும்படி ஜெபித்தார் (வசனம் 5). இயேசு இப்படி ஜெபிப்பதன் முழுமையான பொருள் நம் புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது, அவர் மனுஷ சாயலாக வந்தது உண்மை. இயேசு தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண் ணாமல் இருந்தது அவருடைய அன்புக்கு அத்தாட்சியாக இருக்கிறது. (பிலிப்பியர் 2:6). இப்போது, சிலுவை மூலமாக உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் மூலமாக மீட்பின் திட்டத் தை நிறைவேற்றின பிறகும் கூட, முன் போல பிதாவோடு இருக்கும் ஆசை இயேசுவுக்கு இருந்தது. அப்படியானால், அவர் கொண்டிருந்த மகிமை எப்படிப்பட்ட பிரமிப்பான திகைப்பை நமக்கு உண்டு பண்ணு கிறது பாருங்கள்!.

இயேசு தம்முடைய சித்தத் தை உலகத்தில் வெளிப்படுத்தப் போகிறவர்களுக்காக ஜெபித்தார். தேவனுடைய நாமத்தை அவர் களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். அவர் கொடுத்த வார்த்தைகளை அவர்கள் காத்துக்கொண்டார்கள். இந்த வார்த்தையை அவர்கள் ஏற்றுக் கொண்டபடியால், இயேசு தேவனிடத்திலிருந்து வந்தவர் என்ப தை அவர்கள் அறிந்து கொண் டார்கள். இப்போது, அவர்கள் இந்த உலகத்தில் விடப்படப்போகிறார்கள். ஆனால், அவர்கள் இந்த உலகத்திற் குரியவர்களல்ல, அவர்கள் இந்த உலகத்தின் அபாயத்திலிருந்தும், அதிகாரத்திலிருந்தும் காத்துக் கொள்

ளப்பட வேண்டும். அவர்களுடைய இருதயத்தின் ஏக்கத்திற்கேற்ப இந்த மனிதர்கள் இந்த உலகத்திற்குரிய வர்களல்ல. ஏனென்றால், இயேசு வும் இந்த உலகத்திற்குரியவரல்ல, (வசனம் 16).

இயேசுவின் பிரிவு அவர் களுக்கு கடுமையான வேதனையை உண்டாக்கியிருக்கும், ஆனால், இது அப்போஸ்தலர்களுக்கு கர்த்தரு டைய மகிமை பற்றிய ஒரு புரிந்து கொள்ளுதலைத் தந்தது. மேலும், தேவனுடைய சித்தத்தினாலே மனிதர்களைப் பாவங்களிலிருந்து மன்னிக்க குமாரனாகிய இயேசு வந்தார் என்பதை அறிவிப்பதற்கு ஏதுவாக அமைந்தது. இயேசு சொன் னபடியே அவர்கள் அவருடைய மகிமையைக் காண வேண்டியதா யிருந்தது. கடைசியாக, அவர் எங்கே இருப்பாரோ அங்கே அவர்களும் இருப்பார்கள் (வசனம் 24). இவர்கள் ஊழியத்தின் தன்மை களைப் பற்றிய ஆழமான அறிவும், வாய்ப்புகளை எதிர்பார்க்கிறவர்களுமாயிருக்க வேண்டியதாயிருந்தது. ஆனால், தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதில் அவர்கள் களி கூர்ந்தார்கள்.

இயேசு, அப்போஸ்தலர்களு டைய வார்த்தையினால் தன்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணினார் (வசனம் 20). வார்த்தையினால் பரிசுத்தமாக்கப் பட்டவர்கள் (வ.17) தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளினால் மற்றவர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க வழிநடத்த வேண்டும். அவர் கள் தேவ வார்த்தைக்குக் கொடுக்கும் மரியாதையினாலும் அவ்வார்த் தைக்குக் கீழ்ப்படிவதினாலும் விசுவா சிகள் ஒன்றாயிருக்கும்படி வழி நடத்த வேண்டும் (வசனம் 21). கீழ்ப்படி தலுள்ள இப்படிப்பட்ட விசு வாசிகளின் இப்படிப்பட்ட ஒற்றுமை பிதாவும், குமாரனும் எப்படி ஒன்றாயிருக் கிறார்களோ அதை பிரதிபலிக்கிறதாக இருக்க வேண்டும்.

தேவ வார்த்தைகளை அறிவித்தல், அவைகளை விசுவாசித் துக் கீழ்ப்படிதல், அப்படிக் கீழ்ப்படிகிற வர்களின் மத்தியில் காணப்படும் ஒற்றுமை ஆகிய இவைகளின் கலவை, இந்த நோக்கத்திற்காகத் தான் கிறிஸ்து இப்பூமிக்கு அனுப்பப் பட்டார் என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த உலகத்தில் உள்ளவர்கள் அவருடைய வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளின் மூலம் தேவனுக்கு ஆதாயப்படுத்தப்பட வேண்டுமென் பதை வலியுறுத்துகிறது.

இந்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டு அநேக நூற்றாண்டுகள் கடந்து விட்டன. இயேசு பரமேறின போதும், அவர் நம் ராஜாவாக இருந்து ஆட்சி செய்யத் தொடங்கிய போதும் அதன் கடைசி பொருள் உணரப்பட்டது. நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை விசுவாசித்து, ஞானஸ் நானத்தின் மூலம் தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, இந்த உபதேசத் தைப் பின்பற்றி தேவனுடைய ஜனங்களோடு ஒன்றாயிருக்கும் போது நமக்கான அதன் பொருள் உணரப்படுகிறது. †

# தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருத்தல்

**Don W. Walker**

**"என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படி யெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமான தாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக" (யோசுவா 1:7).**

உண்மையாகவே, தேவனுடைய ஜனங்கள் யோசுவா தலைவனாக இருந்தபோது மட்டுமே வெற்றியின் உச்சகட்டத்தைக் கண்டார்கள். அர்ப்பணிப்பு, பலம் மற்றும் தைரியம் போன்றவை இவ்விசுவாச வீரனின் தனிச்சிறப்புகள். யோசுவா 23,24 அதிகாரங்களை வாசித்து விட்டு, இதுவரையில் இல்லாத அளவுக்கு மாபெரும் பிரசங்கங்கள் இடம் பெற்றிருப்பதைப் புரிந்து கொள்ளாமல் யாரால் இருக்க முடியும்? வல்லமையுள்ள அப்பிரசங்கத்தில் யோசுவா மற்ற கருத்துக்களோடு கீழ்க்காணும் கருத்துகளை வலியுறுத்துகிறார் !.

1. நீங்கள் தேவனை விட்டுத் திரும்பும்போது, சிறைவாசம் காத்திருக்கிறது.
2. மற்ற தேசங்களைப் போலிருக்க ஆசைப்படுவது உங்களைக் கெடுத்து விடும்.
3. நீங்கள் வெறுமனே யெகோவாவை சேவிக்க முடியாது.
4. நீங்கள் இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொண்டே ஆக வேண்டும்.
5. விக்கிரக ஆராதனை தேவனுடனான உங்கள் உறவைக் கெடுத்துப் போட்டுவிட்டது.
6. யெகோவா இன்னும் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார்.
7. அவர் எல்லாவற்றிற்கும் கர்த்தராயிருப்பார்.

யோசுவாவின் பிரசங்கத்தின் மாபெரும் முக்கியத்துவத்தை நியாயாதிபதிகளின் காலத்திற்குள் பிரவேசிக்கும் போது நாம் காணலாம். நியாயாதிபதிகளின் காலத்தில் தான் தேவனுடைய ஜனங்கள் மிக மோசமான நிலையில் இருந்திருக்கிறார்கள்.

நியாயாதிபதிகள் 2:11 - 19 வசனப்பகுதி நியாயாதிபதிகளின் நாட்களில் வாழ்ந்த ஜனங்களின் பாவத்தை மிகப் பொருத்தமாக விவரிக்கிறது. நீங்கள் இந்த வசனங்களை கவனிக்கும்போது கீழ்க்காணும் கருத்துக்களைக் காண்பீர்கள்.

1. விக்கிரகங்கள் அவர்களை ஆட்கொண்டது.
2. அவர்கள் தேவனை விட்டுவிட்டார்கள்.
3. பரலோக வழிகாட்டுதலுக்கு நன்றியில்லாமலிருந்தது.
4. கட்டுப்பாட்டிற்குள் இருந்த சத்துருக்கள் இப்போது இவர்களை சிறைப்படுத்தி விட்டார்கள்.
5. தேவனால் நியமிக்கப்பட்ட தலைவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கவில்லை.
6. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ள அவர்கள் மறுத்தார்கள்.
7. அவர்களின் பிடிவாதம் நிலைத்திருந்தது.
8. இஸ்ரவேல் ஆவிக்குரிய விபச்சார பாவத்தைச் செய்தது.

இப்போது காலங்கள் உருண்டோடிவிட்டது, யோசுவா 24:15-ல் யோசுவா தெரிந்து கொண்டது போல, ஜனங்களை தெரிந்து கொள்ள அழைப்பு விடுத்தது போல நாமும் செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருந்து நாம் தேவனோடு நிற்போமாக. †

# நான் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல்

## "When I Could Stand It No Longer"

*Jack W. Carter*

ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன். இப்பொழுது தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும், அன்பையும் குறித்தும், நீங்கள் எப்பொழுதும் எங்களை பட்சமாய் நினைத்துக் கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறது போல நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறீர்களென்பதைக் குறித்தும் எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே, சகோதரரே எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம் (1 தெச. 3:5-7).

எவ்வித சந்தேகமுமில்லாமல் அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய வேலையில் உண்மையாகவே தன்னுடைய முழு இருதயத்தையும் செலுத்தினார், மேலும், அவர் யாரோடு இணைந்து வேலை செய்தாரோ அந்த மக்களை அதிகமாக நேசித்தார்.

தெசலோனிக்கே பட்டணத்து சபையினிடத்தில் அவர் அக்கறை கொண்ட விதத்தை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு அவர் எழுதிய முதல் நிருபத்தின் ஆரம்ப வாக்கியம் இந்த வார்த்தைகளை உள்ளடக்கியது. உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதுமே தேவனை ஸ்தோத்திரிக்கிறோம் (வசனம் 4).

பவுலுக்கும் இவர்களுக்கும் இடையேயான உறவு மிகுந்த உபத்திரவத்திலே ஆரம்பமானது (வசனம் 6). ஆனால், சபை இதை மிக தைரியமாக சந்தித்து எல்லா விசுவாசிகளுக்கும் மாதிரியாயிருந்தது (வசனம் 7). மேலும், அவர் இவ்விதமாகச் சொன்னார். தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று (வசனம் 8).

பவுல் இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதியதன் காரணத்தின் ஒரு பகுதி அவர் அவர்களை விட்டுப் பிரிந்திருந்த போது அவர்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்ததாக வும், அவர்களுடைய ஆவிக்குரிய நிலை, தன் மனதில் முதலிடத்தைப் பிடித்திருந்தது என்பதையும் அவர்களுக்கு அறிவிக்க விரும்பினார். மேலும், அவர், சோதனைக்காரன் எவ்விதத்திலாவது அவர்களை சோதித்து அவர்கள் விழுந்து போய் விடுவார்களோ என பயந்தார் (3:5).

எனவே தான், பவுல், நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், உங்கள் விசுவாசத்தை அறியும் படிக்கு, அவனை அனுப்பினேன் என்று எழுதினார். தெசலோனிக்கே பட்டணத்தின் சூழ்நிலையை அறியும் படி பவுல் தீமோத்தேயுவை அங்கே அனுப்பினார். தீமோத்தேயு அங்கே இருந்து அனுகூலமான செய்தியுடன் வந்தபோது, முதிர்ந்த அப்போஸ்த லன் பெருமிதம் கொள்வதை நாம் காண முடியும்.

தேவனுடைய எல்லா ஆவிக் குரிய பிள்ளைகளும் எல்லா இடங்க ளிலும் உள்ள தேவனுடைய ஜனங் களுக்காக இவ்வகையான கவலை கொண்டிருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். சபைகள் விசுவாசத் திலிருந்து சறுக்கி விழுவதைப் பார்த்து கொண்டிராமல் ஜனங்களின் ஆத்துமாக்களைக் குறித்த கவனம், கவலை நமக்கு இருக்க வேண்டும். ஏதோ ஒன்று தவறாக நடந்திருக்க லாம் என்று வெறுமனே நினைத்துக் கொள்வதை பொறுத்துக் கொள்ள முடியாது. விசேஷமாக, சில சபைகள் நமக்கு நெருக்கமான மக்களை உள் ளடக்கியதாக இருக்கலாம்! எனவே சபையைக் குறித்த அக்கறை, கவலை நமக்கு இருக்க வேண்டும்.

ஜனங்களை நேசிக்க பவுல் பின்பற்றின விதத்தை நான் நேசிக்கி றேன். †

அப்பொழுது பரிசேய சமயத் தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்த சேதனம் பண்ணுகிறதும் மோசே யின் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார் கள்.

அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடி னார்கள். மிகுந்த தர்க்கம் உண்டான போது பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின் மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவ னைச் சோதிப்பானேன்? என்று இவர்கள் கையில் அவர்கள் எழுதிக் கொடுத்தனுப்பினார்கள்.

அவசியமான இவைகளை யல்லாமல் பாரமான வேறொன் றையும் உங்கள் மேல் சுமத்தாமலி ருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்க ளுக்கும் நலமாகக் கண்டது; விக்கிர கங்களுக்கு படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும் நீங்கள் விலகியிருக்க வேண்டு மென்பதே (அப்போஸ்தலர் 18 : 5, 6, 7, 10, 23, 28, 29).

# கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை

# "Not In Temples Made With Hands"

*Perry N.Hall*

அத்தேனே பட்டணத்தில் இருந்த மார்ஸ் மேடையின் நடுவில் நின்று நம்முடைய தலைப்பில் சொல்லப்பட்ட வார்த்தைகளைப் பவுலடியார் உச்சரித்தார். (அப். 17:24) அவர் இந்த வார்த்தைகளை உச்சரித்த போது கிரேக்க, ரோம உலகத்தின் புராணக் கடவுள்கள் குடியிருந்த விக்கிரகக் கோவில்களுக்கு பெயர் போன அக்ரோபோலிஸ் கோட்டையை மனதில் வைத்து தெளிவாகப் பேசினார். அங்கே கன்னி தேவதையான, " அத்தனா பார்த்தினாஸ் " குடியிருந்த " பார்த்தினான் " என்கிற இடம் இருந்தது. இது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்த கோவில்கள் மட்டுமல்லாமல் வேறு அநேக கோயில்களும் இருந் தன. பவுல் தன்னுடைய நிலையிலி ருந்து அப்பல்லோ, வல்கன், தீஸஸ், அரஸ் மற்றும் ஜீயஸ் போன்றவர்க ளின் கோவில்களைக் குறிப்பிட்டிருக்கலாம். மனித கைகளினால் கட்டப்பட்ட இந்தக் கோவில்கள் பரிதாபகரமாக இருப்பதால் வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற தேவனுக்கு இவை போதுமானதல்ல. எருசலேமில் சாலொமோன், தான் கட்டிய ஆலயம் அவரைக் கொள்ளாது என்பதை உணர்ந்து வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்? என்றான் (II ராஜாக்கள் 8:27; II நாளாகமம் 2:6).

ரோம சாம்ராஜ்யம் முழுவதும், ஒவ்வொரு பட்டணத்திலும் அதைக் காப்பாற்றுகின்ற தேவர்கள் அல்லது தேவதைகளுக்கு அழகான கோயில்கள் கட்டப்படும். பவுல் கொரிந்து பட்டணத்திற்கு துரிதமாகச் சென்றார். அங்கே அநேக பழங்கால கோயில்கள் இருந்தன. அங்கே அப்பல்லோ மற்றும் ஏதனாவின் மகிமைக்காக கண்ணைக் கவரும் கட்டிடங்கள் கட்டப்பட்டன, மேலும், அங்கே மிகத் தெளிவாக கண்ணைக் கவரும் வகையில் அப்ரோடைட் கோவிலை உள்ளடக்கிய ஒரு கட்டிடம் இருந்தது. அது கரடுமுரடான மலையின் உச்சியில் கட்டப்பட்டது.

ரோம சாம்ராஜ்யத்தின் மையப் பகுதியில் ரோமாபுரி பட்டணம் அமைந்திருந்தது. ரோம சதுக்கத்திற்குள்ளேயே சீசர், வெஸ்டர், பாஸ்டினா, காஸ்டர், போலக்ஸ் மற்றும் சேட்டர்ன் போன்றோரை வணங்கும்படி அவர்களுக்காக ஆலயங்கள் கட்டப்பட்டன. மேலும், குறிப்பிட முடியாத அளவில் எண்ணற்ற கோயில்களைக் கட்டி இருக்கின்றனர், இது அந்த பட்டணம் முழுவதும் பரவிக் கிடந்தன.

ஆனால், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கி றோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக் கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டா யிருக்கிறோம் என்கிற நற்செய்தி நமக்கு வந்தது (1 கொரிந்தியர் 8:6). தெய்வீகத் தன்மையின் ஒருமை மட்டுமல்லாமல் ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே நம்பிக்கையும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. அவை மனிதர்களை ஒரே கர்த்தருக்குள், ஒரே சரீரம் அல்லது ஒரே சபைக்குள் கொண்டு வரும், அங்கே தான் ஒரே நம்பிக்கையை நாம் சொந்த மாக்கிக் கொள்ள முடியும். சிலுவை மூலமாக ஏற்பட்ட இந்த மீட்பின் மூலமாக மனிதர்கள் ஒரே சரீரத் தில் தேவனிடத்தில் ஒப்புரவாகிறார்கள், அவ்விதமாக தேவனுடைய வாசஸ் தலமாக, ஆலயமாக மாறுகிறார்கள். அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபேசியர் 2:17-22).

பழங்கால ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாக எபேசு பட்டணத்திலி ருந்த தீனாள் கோயில் இருந்தது. அந்தக் கோயில் முற்றிலும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. அன்றைய கிரேக்க உலகத்தில் மிகப்பெரிய தோற் றத்தை உடையதாயிருந்தது. இது அத்தேனே பட்டணத்தில் இருந்த பார்த்தி னானை விட ஐந்து மடங்கு பெரியது. ஆயினும் தேவன் அங்கே வாசம் செய்யவில்லை. தம்முடைய ஜனங்க ளிடத்தில் அதாவது சபையில் வாசம் செய்தார். கூட்டாகவும், தனியாகவும் தேவன் தம்முடைய ஆவிக்குரிய ஆலய மாகிய சபையில் வாசம் செய்கிறார் (1 கொரிந்தியர் 3:16,17; 6:19,20). நாம் ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாக கட்டப்பட்டு வருகிறோம் (1 பேதுரு 2:5).


அத்தேன பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருந்ததையும், அது பல்வேறுபட்ட தெய்வங்கள் வழியாகவும் கோவில்களிலும் பிரதிபலித்ததைக் கண்டபோது, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்ததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. அவர் வெளிப்படையாகவே கீழ்க்காணும் காரியங்களை அறிவித்தார். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (அப்போஸ்தலர் 17:24, 25).

ஜீவனுள்ள தேவனுடைய ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாக ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டிருப்பது நம்மெல்லாருக்கும் எத்தனை மகிமையான சிலாக்கியம். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1 கொரிந்தியர் 6:19,20). †

# தேவன் பாவியை எப்படி இழுத்துக்கொள்கிறார்?

# How Does God Draw The Sinner?

*Grady Miller*



தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய கிறிஸ்து மூலமாக நாமெல்லாருக்கும் இரட்சிப்பை வழங்கியிருக்கிறார் என்பதை நாம் எல்லாரும் நிச்சயமாக ஒத்துக் கொள்கிறோம். நாம் நம்முடைய நம்பிக்கையையும், கீழ்ப்படிதலையும் கர்த்தரில் வைத்தால், நமக்கு இரட்சிப்பு முழுமையாகவும், இலவசமாகவும் வாக்களிக்கப்பட்டிருக்கிறதென்பதை ஏற்றுக்கொள்வோம். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் சித்தமாயிருக்கிற பிதாவாகிய தேவன் (1 தீமோத்தேயு 2:4) மனிதர்களை தன்னிடத்திலும், இரட்சிப்பினிடத்திலும் இழுத்துக் கொள்கிறார். அப்படியானால், நம் கேள்வி இது தான்; தேவன் எப்படி பாவிகளை தம்மிடத்தில் இழுத்துக் கொள்கிறார்?.

மத உலகம் இக்கேள்விக்கு வெவ்வேறு பதில்களை வைத்திருக்கிறது. பொதுவாக இரண்டு முக்கியமான கருத்துக்கள் இது பற்றி இருக்

கின்றன. சிலர், தேவனும் பரிசுத்த ஆவியானவரும் பாவியின் இருதயத்தில் நேரடியாக கிரியை நடப்பித்து பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தி நேரடியாக இடைப்பட்டு அவனை இரட்சிக்கிறார் என்று சொல்கிறார்கள். ஆயினும், வேறு சிலர் தேவனும், ஆவியானவரும் ஒரு முகவர் மூலமாக பாவியின் இருதயத்தில் கிரியை செய்கிறார்கள், நேரடியாக அல்ல என்று நம்புகிறார்கள். ஆனால், வேத வாக்கியங்கள் என்ன சொல்கின்றன?

யோவான் 6:44-ல், இயேசு சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள் - " என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன் ". இப்போது நம்முடைய கேள்விக்கான பதிலுக்கு அடுத்த வசனத்தைப் பாருங்கள். இயேசு சொன்னார். " எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று, தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால், பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான் ". இங்கே மனிதர்கள் எப்படி கிறிஸ்து மூலமாக பிதாவினிடத்தில் இழுக்கப்படுகிறார்கள்? அவர்கள் இயேசுவை இரட்சகரென்றும், கர்த்தரென்றும் விசுவாசிக்கிறார்கள். எனவே, சாட்சி அல்லது தேவனுடைய வார்த்தை மூலமாக தேவன் பாவிகளைத் தன்னிடத்தில் இழுத்துக் கொள்கிறார்.

இதன் உண்மைத் தன்மையை ரோமர் 10:14,15 வசனங்களில் நாம் காண முடியும். பவுல் இப்படியாகச் சொன்னார். "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே இங்கே பவுல் இரட்சிப்பின் இயல்பான தன்மையை ஒழுங்காக வரிசைப்படுத்தியிருக்கிறார்.

1. பிரசங்கியார், தேவனுடைய இரட்சிப்பின் கிருபை பற்றியும் இந்த பூமியில் இயேசுவின் ஊழியம் பற்றியும் அறிவிக்கிறார்.

2. பாவி நற்செய்தியின் உபதேசத்தைக் கேள்விப்படுகிறார், பாவத் தைக் குறித்து கண்டித்து உணர்த்தப் படுகிறார்.

3. அந்த பாவி தனக்கு அறிவிக்கப் பட்ட நற்செய்தியின் உபதேசத்தால் இயேசுவை விசுவாசிக்கிறார்.

4. இரட்சிப்பிற்காக உண்மையுள்ள கீழ்ப்படிதலினால் பாவி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறார்.

கிறிஸ்துவின் உபதேசமோ அல்லது வார்த்தையோ அல்லது நற்செய்தியோ இல்லாதிருந்தால் ஒரு பாவி இரட்சிக்கப்பட முடியாது. பவுல் தொடர்ந்து 17 ஆம் வசனத்தில் சொல்லும்போது, “ ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்கிறார் ”. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு நம்புவதினால் விசுவாசம் ஏற்படுகிறது. எனவே, தேவனுடைய வார்த்தையை எடுத்துப் போட்டால், விசுவாசம் எதனால் ஏற்படுகிறதோ அதை எடுத்துப் போடுகிறோம்.

ஆதலால், இரட்சிக்கும் விசுவாசம் தேவனிடத்திலிருந்து வரும் நேரடியான, அற்புதமான ஈவு அல்ல. அதற்குப்பதிலாக, விசுவாசம் தேவனுடைய வார்த்தையிலிருந்து வருகிறது. பரிசுத்த ஆவியானவர் ஒரு பாவியின் இருதயத்தில் நேரடியாக செயல்பட்டு பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தமாட்டார், ஆனால், அவர் வார்த்தை மூலமாக செயல்படுவார். இதன் காரணமாகத்தான் பவுல் இவ்விதமாக அறிவித்தார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் அது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது...என்று (ரோமர் 1:16). யாக்கோபு ஆசிரியர், “ நம் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும் ” என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார் (யாக்கோபு 1:21).

என் நண்பர்களே, தேவனுடைய ஆவி உங்கள் இருதயங்களில் அற்புதவிதமாக கிரியை செய்ய நீங்கள் காத்திருக்க வேண்டாம், அவ்விதமான அனுபவத்திற்குள் நீங்கள் கடந்து சென்றுவிட்டதாக உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளவும் வேண்டாம். சொப்பனங்கள், தரிசனங்கள் அல்லது உணர்வுகளைச் சார்ந்திருக்கவும் வேண்டாம். அதற்குப் பதிலாக, அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்படத் தீர்மானியுங்கள் (1 பேதுரு 1:23). †

